மலர் : 52 இதழ் : 4

தமிழரசு

அக்டோபர் 2021
விலை ரூ. 20/–

செய்தி – மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

உத்தமர் காந்தியடிகள் அவர்களின் பிறந்தநாள் விழா

“சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம் சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்”

தமிழ்நாடு ஆளுநராக 18.09.2021 அன்று, ஆளுநர் மாளிகையில் பதவியேற்றுக்கொண்ட
மாண்புமிகு திரு. **ஆர்.என். ரவி** அவர்களுக்கு,
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
புத்தகம் வழங்கி வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டார்.

அக்டோபர் 1 : தேசிய தன்னார்வ இரத்ததான நாள்

உயிர் காக்கும் உதிர தானம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் தேசிய தன்னார்வ இரத்ததான நாள் செய்தி

மனித உயிரைக் காப்பாற்றும் உயரியச் செயலான தன்னார்வ இரத்ததானம் குறித்த விழிப்புணர்வை மக்களிடையே ஏற்படுத்தும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் அக்டோபர் திங்கள் முதல் நாள் தேசிய தன்னார்வ இரத்ததான நாளாகக் கொண்டாடப்படுகிறது. இந்த ஆண்டிற்கான தேசிய தன்னார்வ இரத்ததான நாளின் கருப்பொருள் “உயிர் காக்கும் உதிர தானம்”என்பதாகும்.

தன்னார்வ இரத்ததானத்தின் முக்கியத்துவத்தை மக்கள் அனைவரும் அறியும் வகையில் விழிப்புணர்வைத் தமிழ்நாடு அரசு ஏற்படுத்தி வருகிறது. அறிவியலில் கண்டுபிடிப்புகள் நிகழ்த்தி இருந்தாலும் இரத்தம் என்ற அதிசயத் திரவத்தை இன்னும் செயற்கையாக உருவாக்க இயலவில்லை. ஒவ்வொருவரின் உடலிலும் சுமார் ஐந்து லிட்டர் இரத்தம் உள்ளது. இரத்ததானத்தின்போது 350 மில்லி இரத்தம் மட்டுமே எடுக்கப்படுகிறது. இரத்ததானம் செய்தபின் 24 மணி நேரத்திற்குள்ளாக நம் உடல் இழந்த இரத்தத்தை ஈடு செய்து விடுகிறது. இரத்ததானம் செய்ய 20 நிமிடங்களே ஆகும். இரத்ததானம் செய்தவுடன் வழக்கம்போல் அன்றாட வேலைகளை மேற்கொள்ளலாம். 18 வயது முதல் 65 வயது வரை உள்ள ஆரோக்கியமான ஆண், பெண் இருபாலரும் மூன்று மாதத்திற்கு ஒரு முறை இரத்ததானம் செய்யலாம். உரியக் கால இடைவெளியில் இரத்ததானம் செய்வதால் இறைக்கின்ற கிணறு ஊறுவதுபோல் உடலில் புதிய செல்கள் உருவாகி உடல் நலன் காக்கப்படுகிறது. அரசு இரத்த வங்கிகள் மற்றும் இரத்ததான முகாம்களில் இரத்ததானம் செய்யலாம்.

ஆண்டுதோறும் குருதிக் கொடையாளர்கள் மற்றும் இரத்ததான முகாம் அமைப்பாளர்களைத் தமிழ்நாடு அரசின் சார்பில் பாராட்டுச் சான்றிதழ்களும், பதக்கங்களும் வழங்கிக் கௌரவித்து வருகிறது. இந்த ஆண்டு இரத்ததானத்தை ஊக்குவிக்கும் வகையில் புதிய இந்தியா @ 75 என்ற தலைப்பில் முதற்கட்டமாக 14 மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி, கல்லூரி மாணாக்கர்களுக்கு ஓவியப் போட்டியும் மற்றும் இணையதள வினாடி வினாப் போட்டியும் நடத்தப்பட்டு வருகிறது.

இரத்ததான முகாம்களில் சேகரிக்கப்படும் இரத்தத்தினை இரத்த மையங்களுக்கு எடுத்துச் சென்று பாதுகாப்பாகச் சேமிக்க, ரூ.175 இலட்சம் செலவில் குளிர்சாதன வசதிகளுடன் கூடிய அதிநவீன 5 நடமாடும் இரத்த சேமிப்பு ஊர்திகள் (BCTV) வழங்கப்பட உள்ளது. அரிய வகை இரத்தச் சிவப்பணுக்களை 10 ஆண்டுகளுக்கு மேல் சேமித்து வைக்க, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் ரூ.375 இலட்சம் செலவில் உறை நிலை சேமிப்பு அலகு (Frozen Red Cell Storage Unit) அமைக்கப்பட உள்ளது. மேலும், இரத்தப் பைகளைக் கண்காணிக்க ரூ.208 இலட்சம் செலவில் மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனை, சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் கதிரியக்க அலைவீச்சு கருவி (Radio Frequency Identification Device) பொருத்தப்பட உள்ளது.

கடந்த ஆண்டு அரசு, தனியார் இரத்த வங்கிகள் மூலம் 90 விழுக்காடு இரத்தம் சேகரிக்கப்பட்டது. நடப்பாண்டில் தன்னார்வ இரத்ததானத்தில் தமிழ்நாடு 100 விழுக்காடு இலக்கை எய்திடவும், விலை மதிப்பற்ற உயிர்களைக் காப்பாற்றிடவும் பொதுமக்கள் அனைவரும் பெருமளவில் தன்னார்வ இரத்ததானம் செய்ய முன்வர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மகிழ்வுடன் இரத்ததானம் செய்வோம் !
மனித உயிர்களைக் கனிவுடன் காப்போம் !!

உதிர தானம் செய்வீர்! மனித உயிரைக் காப்பீர்!!

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : புரட்டாசி – ஐப்பசி
அக்டோபர் 2021
மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 4

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542224 / 22542221
மின்னஞ்சல் : ddpub.tamilarasu@tn.gov.in
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்.

தக்கா ரினத்தனாய்த் தானொழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில். ***(குறள் : 446)***

அறிவும், ஆற்றலும் கொண்ட ஒருவன், தன்னைச் சூழவும் அத்தகையோரையே கொண்டிருந்தால் பகைவர்களால் எந்தத் தீங்கையும் விளைவிக்க முடியாது.

– திருக்குறள் **கலைஞர்** உரையிலிருந்து...

இந்த இதழில்...

★ **“சொன்னதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்”**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் காணொலி வழியாக ஆற்றிய உரை – 25.09.2021)............... 5

★ **சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி**
(மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் மதுரை, பாப்பாபட்டி கிராமத்தில் நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் ஆற்றிய உரை – 02.10.2021)............ 14

★ ஒரு இலட்சம் விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்.............. 32

★ மலைவாழ் மக்கள், விவசாயிகளுக்கு ரூ.16.47 கோடியில் நலத்திட்ட உதவிகள் 42

★ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆற்றிய உரை – 20.09.2021.............. 66

★ பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு ரூ.3.98 கோடி ஊக்கத்தொகை 72

முதலாம் பக்க அட்டை

தமிழ்நாடு அரசின் சார்பில் உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 153ஆவது பிறந்தநாளையொட்டி, 02.10.2021 அன்று சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களும் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

‘சொன்னதைச் செய்வோம் செய்வதைத்தான் சொல்வோம்’

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க. ஸ்டாலின்** அவர்கள்
காணொலி வாயிலாக ஆற்றிய உரை – 25.09.2021

நாட்டு மக்கள் அனைவருக்கும் வணக்கம்!

ஒரு மகிழ்ச்சியான செய்தியைச் சொல்வதற்காகத்தான் இந்தக் காணொலி வழியாக உங்களை நான் சந்திக்கிறேன்!



மக்களாகிய நீங்கள் வாக்களித்த காரணத்தால்தான், இந்த முதலமைச்சர் பொறுப்பில் நான் உட்கார்ந்திருக்கிறேன்.

நீங்கள் அளித்த ஒவ்வொரு வாக்கும் – இன்றைக்கு நான் கோட்டையில் உட்காருவதற்கு அடித்தளமாக அமைந்தது.

இவர்களுக்கு வாக்களித்தால், கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவார்கள். மக்களுக்கு ஏராளமான நன்மைகளைச் செய்வார்கள் என்று நம்பி நீங்கள் வாக்களித்திருக்கிறீர்கள்.

நீங்கள் எங்கள் மீது வைத்திருக்கிற நம்பிக்கையை நாங்கள் இம்மியளவும் பிசகாமல் காப்பாற்றிக் கொண்டிருக்கிறோம் என்பதை நெஞ்சை நிமிர்த்தி என்னால் சொல்ல முடியும்.

நீங்கள் எங்களுக்கு வாக்களித்தீர்கள். நாங்கள் உங்களுக்குக் கொடுத்த பெரும்பாலான வாக்குறுதிகளைக் காப்பாற்றி இருக்கிறோம். அதனால்தான் உங்கள் முன்னால் தைரியமாகப் பேசுகிறேன்.

சட்டமன்றத் தேர்தலுக்கு முன்னர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் தேர்தல் அறிக்கையை வெளியிட்டோம். நான் அதை வெளியிட்டபோது, தலைவர் கலைஞர் பாணியில் ‘சொன்னதைச் செய்வோம் – செய்வதைத்தான் சொல்வோம்’ என்று சொன்னேன். ஆட்சிக்கு வந்து இன்றோடு 4 மாதங்கள்தான் கடந்துள்ளன. இந்த நான்கு மாதங்களுக்குள் சொன்னவற்றில் பெரும்பாலானவற்றைச் செய்துவிட்டோம். 505 வாக்குறுதிகளைத் தந்தோம். அவற்றில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றி விட்டோம்! என்னென்ன வாக்குறுதிகள் நிறைவேற்றி இருக்கிறோம் என்பதை நீங்களே பாருங்கள்!



மே 7ஆம் தேதி பதவியேற்ற சில மணி நேரத்திலேயே ஐந்து முக்கியமான கோப்புகளில் கையெழுத்திட்டேன்.

- ★ 2.09 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்கள் அனைவருக்கும் ரூ.4,000 கொரோனா நிவாரண நிதியுதவி.
- ★ ஆவின் பால் லிட்டருக்கு ரூ.3 குறைப்பு.

★ மகளிருக்கு அரசு நகரப் பேருந்துகளில் இலவசப் பயணம்.

★ மக்களின் மனுக்கள் மீது தீர்வுகாண "உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறை.

★ தனியார் மருத்துவமனைகளில் கொரோனா சிகிச்சைக்கான செலவினத்தை முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தில் அரசே ஏற்பு.

இந்த ஐந்தில் முதல் நான்குமே திராவிட முன்னேற்றக் கழகத் தேர்தல் அறிக்கையில் இடம்பெற்றிருந்தவை. இதன் தொடர்ச்சியாக,

★ வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், முதன்முறையாக வேளாண்மைக்கென்று தனியான ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது.

★ கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகை ரூ.2,756 கோடி தள்ளுபடி செய்யப்பட்டது.

★ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் வழங்கப்பட்ட நகைக்கடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

★ பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.3 குறைக்கப்பட்டது.

★ ஊரகப் பகுதிகளில் ரூ.1,200 கோடி ஒதுக்கீட்டில் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தைச் செயல்படுத்துவது.

★ 'நமக்கு நாமே' திட்டத்தை உள்ளூர் சமூகங்களுடன் இணைந்து ரூ.100 கோடி ஒதுக்கீட்டில் செயல்படுத்துவது.

★ "இயற்கை வேளாண்மை வளர்ச்சித் திட்டம்" என்ற உன்னதத் திட்டம் நடப்பு 2021–2022ஆம் ஆண்டு செயல்படுத்துவது.

★ அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும் வகையில் புனரமைத்தல் மற்றும் மதுரையில் கலைஞர் நினைவு நூலகம் அமைத்தல்.

★ ஒலிம்பிக்கில் தங்கப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடி, வெள்ளிப்பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.2 கோடி மற்றும் வெண்கலப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.1 கோடி வழங்குதல்.

★ பத்திரிகையாளர்கள்; இந்தியக் குடியுரிமைத் திருத்தச் சட்டம், மீத்தேன், நியூட்ரினோ, கூடங்குளம் அணுமின் நிலையம் மற்றும் எட்டுவழிச் சாலைத் திட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள், பொதுமக்கள்மீது போடப்பட்ட 5,570 வழக்குகள் திரும்பப் பெறப்பட்டுள்ளன.

★ மூன்று வேளாண் சட்டங்கள் மற்றும் குடியுரிமைத் திருத்தச் சட்டத்தைத் திரும்பப்பெற வலியுறுத்திச் சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

★ நீட் தேர்விலிருந்து விலக்குப் பெறுவதற்கான சட்ட முன்வடிவைப் பேரவையில் தாக்கல் செய்தல் மற்றும் தீர்மானம் நிறைவேற்றுதல்.

★ கொரோனா சிகிச்சைப் பணியில் தொற்றால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த மருத்துவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.25 இலட்சம் கொரோனா இழப்பீட்டுத் தொகை.

★ கொரோனா நோய்த்தொற்றால் காவல்துறையில் உயிரிழந்த காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்களின் குடும்ப வாரிசுதாரர்களுக்குத் தலா ரூ.25 இலட்சம் வீதம் நிவாரணத்தொகை.

★ குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த அனைத்து நபர்களுக்கும் பதினைந்து நாட்களுக்குள் 'ஸ்மார்ட் கார்டு' வழங்குதல். இத்திட்டத்தின்கீழ் 5,49,505 குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன.

★ தமிழக அரசிற்கு ஆலோசனைகளை வழங்கிட 'முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு' அமைக்கப்பட்டுள்ளது.

★ பணியிலிருக்கும்போது உயிரிழக்கும் அரசுப் பணியாளரின் குடும்பத்தினருக்கு, குடும்பப் பாதுகாப்பு நிதியிலிருந்து வழங்கப்படும் உதவித் தொகை ரூ.3 இலட்சத்திலிருந்து ரூ.5 இலட்சமாக உயர்த்தி வழங்கப்பட்டது.

★ ஸ்டெர்லைட் சம்பவம் குறித்துத் தவறாகப் பதிவு செய்யப்பட்ட வழக்குகளைத் திரும்பப்பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது மற்றும் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை மற்றும் கல்வித் தகுதியின் அடிப்படையில் அரசுப் பணி வழங்கப்பட்டது.

★ மகளிர் அரசு ஊழியர்களுக்கான மகப்பேறு கால விடுப்பு 9 மாதங்களிலிருந்து 12 மாதங்களாக உயர்த்தப்பட்டது.

★ அரசுப் பணிகளில் மகளிருக்கான இட ஒதுக்கீடு 40 சதவிகிதமாக உயர்வு.

இப்படி, தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்ட வாக்குறுதிகளில் பெரும்பாலானவை நிறைவேற்றப்பட்டிருக்கின்றன.

சட்டசபை விவாதங்களை முழுமையாகக் கவனித்தவர்களுக்கு நான் சொல்வது முழு உண்மை என்பது தெரியும்!

ஆளுநர் அறிக்கையில் 51 வாக்குறுதிகளும்; எனது பதிலில் இரண்டு வாக்குறுதிகளும்; நிதிநிலை அறிக்கையில் 43 வாக்குறுதிகளும்; வேளாண் நிதிநிலை அறிக்கையில் 23 வாக்குறுதிகளும்; அமைச்சர்கள் வெளியிட்ட அறிவிப்புகளில் 64 வாக்குறுதிகளும்; இதர அறிவிப்புகளில் 16 வாக்குறுதிகளும் நிறைவேற்றப்பட்டு இருக்கின்றன. மொத்தம் 202 வாக்குறுதிகள் அரசின் அறிவிப்புகளாக வெளியிடப்பட்டுள்ளன என்ற மகிழ்ச்சியான செய்தியை நாட்டு மக்களுக்குத் தெரிவிப்பதில் பெருமை அடைகிறேன்!

இன்னொரு முக்கியமான செய்தியை நான் சொல்ல வேண்டும்.

தேர்தல் அறிக்கையில் சொல்லாத பல நல்ல செயல்களும் செய்யப்பட்டுள்ளன.



- ★ அரசுப் பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு அனைத்துத் தொழிற்கல்வி இட ஒதுக்கீட்டுப் பிரிவுகளிலும், 7.5 விழுக்காடு இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்தல். இப்படி இடம்பெற்றவர்களுக்குக் கட்டணம் முழுமையாகச் செலுத்த வேண்டியது இல்லை.
- ★ அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கு 14 வகையான மளிகைப் பொருட்களின் தொகுப்பு.
- ★ திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசுப் பேருந்துகளில் இலவசப் பயணச் சலுகை.
- ★ கொரோனாவால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் வைப்பு நிதி, கல்வி மற்றும் விடுதிக் கட்டணங்களை அரசே ஏற்கும்.
- ★ கொரோனாவால் தந்தை அல்லது தாயை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு ரூ.3 இலட்சம் நிவாரணத் தொகை.
- ★ தமிழ்நாட்டில் உள்ள முகாம்வாழ் இலங்கைத் தமிழர் நலனைப் பேணிட வீடு மற்றும் இதர உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு, ரூ.317.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.
- ★ ‘தமிழ்நாடு ஆதிதிராவிடர் – பழங்குடியினர் நல ஆணையம்’ என்கிற புதிய அமைப்பு ஒன்றைத் தன்னாட்சி அதிகாரத்துடன் செயல்படும் வகையில் உருவாக்கச் சட்டம் இயற்றுவதற்கான நடவடிக்கை.
- ★ பத்திரிகையாளர் மற்றும் ஊடகத்துறையினர் “முன்களப் பணியாளர்”களாக அறிவிப்பு.
- ★ அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகை மற்றும் ஊடகத்துறையினருக்கான சிறப்பு ஊக்கத்தொகை ரூ.5,000 ஆக உயர்வு.
- ★ கொரோனா தொற்றால் உயிரிழந்த அங்கீகரிக்கப்பட்ட ஊடகத்துறையினர்களுக்கான இழப்பீட்டுத் தொகை ரூ.10 இலட்சமாக உயர்வு.
- ★ தமிழன், திராவிடம் ஆகிய சொற்களை அரசியல் களத்தில் முன்னெடுத்துப் போராடிய அயோத்திதாசப் பண்டிதருக்கு மணிமண்டபம்.
- ★ கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி.யின் பெருமையைப் போற்ற 14 அறிவிப்புகள்.
- ★ பாட்டுக்கொரு புலவன் பாரதியைப் போற்றும் வகையில் 14 அறிவிப்புகள்.
- ★ சமூகநீதியை நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்கக் குழு.
- ★ 1987ஆம் ஆண்டு இட ஒதுக்கீட்டுப் போராட்டத்தில் பலியான சமூகநீதிப் போராளிகளின் நினைவாக விழுப்புரம் மாவட்டத்தில் ரூ.4 கோடி செலவில் மணிமண்டபம் அமைக்கப்படும்.

★ இந்தியாவிலேயே முன்மாதிரித் திட்டமான 'மக்களைத் தேடி மருத்துவம்' தொடக்கம்.

★ எழுத்தாளர் கி.ராஜநாராயணனுக்கு அரசு மரியாதை,கோவில்பட்டியில் சிலை, இடைச்செவலில் அவர் படித்த பள்ளி புதுப்பிப்பு.

★ தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்துச் சிறப்பிக்கும் வகையில், ரூ.5 இலட்சம் பரிசுத்தொகையுடன் கூடிய 'இலக்கிய மாமணி' விருது உருவாக்கம்.

★ தமிழ்நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர்களில் ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள், மாநில இலக்கிய விருதுகள், புகழ்பெற்ற உலகளாவிய அமைப்புகளின் விருதுகள் பெற்றவர்களை ஊக்குவிக்கும் வகையில், அவர்கள் வசிக்கும் மாவட்டத்தில் அல்லது விரும்பும் மாவட்டத்தில் தமிழ்நாடு அரசு மூலமாக வீடு வழங்கப்படும்.

★ தந்தை பெரியாரின் நெஞ்சில் தைத்த முள்ளை அகற்றி, கலைஞரின் கனவை நனவாக்கும் வகையில் அனைத்துச் சாதி அர்ச்சகர்கள் – பெண் ஓதுவார் நியமனம்.

★ 'தகைசால் தமிழர்' விருது உருவாக்கப்பட்டு, முதல் ஆண்டில் பொதுவுடைமை இயக்கத்தின் முதுபெரும் தலைவரும் விடுதலைப் போராட்டத் தியாகியுமான தோழர் என். சங்கரய்யா அவர்களுக்கு நேரில் வழங்கப்பட்டது.

★ சிவகளை ஆய்வு முடிவுகள் அறிவிக்கப்பட்டு, தமிழர் நாகரிகத்தின் வேர்களைத் தேடி இந்தியத் துணைக்கண்டம் மற்றும் உலகம் முழுவதும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படும் எனச் சட்டமன்றத்தில் அறிவிப்பு.

இவை அனைத்துக்கும் மேலாகப் பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் பிறந்தநாளைச் சமூகநீதி நாளாக அறிவித்துச் சமூகநீதி உறுதிமொழி ஏற்பு. இவை எல்லாம் நாங்கள் அறிவிக்காதது. ஆனால் செய்து கொடுக்கப்பட்டவை. சொன்னதைச் செய்தவர்கள் மட்டுமல்ல, சொல்லாததையும் செய்து கொடுத்தவர்கள் நாங்கள்!

505 வாக்குறுதிகளில் நான்கு மாதங்களுக்குள் 202 வாக்குறுதிகளை நிறைவேற்றிக் காட்டிய அரசு, இந்தியத் துணைக்கண்டத்திலேயே தி.மு.க. அரசாகத்தான் இருக்கும்.

இதனை ஏதோ ஆரம்ப வேகம் என்று நினைக்க வேண்டாம்; எப்போதும் இப்படித்தான் இருப்போம். எல்லா நாளும் இப்படித்தான் செயல்படுவோம். இப்போது அறிவித்ததுபோல மூன்று மாதத்திற்கு ஒருமுறை நானே உங்களிடம் இதைச் சொல்வேன். நிறைவேற்றிய வாக்குறுதிகளை நானே உங்களுக்குப் பட்டியல் போட்டுக் காண்பிப்பேன். வாக்களித்த மக்களை ஐந்து ஆண்டுகள் கழித்துத்தானே பார்க்கப் போகிறோம் என்று அலட்சியமாக இருப்பவன் இல்லை நான். **என்னை இயக்கிக் கொண்டு இருப்பது மக்களாகிய நீங்களும் எனது மனசாட்சியும்தான்! நீங்கள் உத்தரவிடுங்கள்! உங்களுக்காகவே உழைக்கக் காத்திருக்கிறேன்!**

சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாள்

16.09.2021

“திராவிட இயக்கம் என்பது சாமானியர்கள் உயர்வதற்காக, சாமானியர்களால் சரித்திரம் படைக்கப்பட்ட – தொடர்ந்து படைக்கப்படும் உயரிய வரலாற்றைக் கொண்டது” என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த வரலாறு இன்று நேற்றல்ல; நூற்றாண்டுத் தொடர்ச்சியைக் கொண்டது ஆகும்.

1916ஆம் ஆண்டு தென்னிந்திய நல உரிமைச் சங்கம் என்ற பெயரால் தொடங்கப்பட்ட நீதிக்கட்சியானது அன்றைய சென்னை மாகாணத்தில் சமூகநீதி, தீண்டாமை ஒழிப்பு, ஒடுக்கப்பட்டோர் உரிமை, சுயாட்சிக் கருத்துகள் ஆகியவற்றுக்காகக் குரல் கொடுத்தது. 1920ஆம் ஆண்டு நடந்த முதல் தேர்தலில் வென்ற நீதிக்கட்சி ஆட்சியானது இதனைப் பல்வேறு அரசாணைகள் மூலமாகச் செயல்படுத்தியது.

அதில் மிகமிக முக்கியமான அரசாணை வெளியிடப்பட்டு இன்றுடன் 100 ஆண்டுகள் ஆகிறது. அதுதான் தமிழ்ச் சமுதாயத்தின் பல தலைமுறைகளை மாற்றிய சமூகநீதி அரசாணை ஆகும். 16.09.1921ஆம் நாள் அன்றைய நீதிக்கட்சி ஆட்சியின் முதலமைச்சரான பனகல் அரசர் காலத்தில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. “அரசுப்பணிகளில் குறிப்பிட்ட வகுப்பினர் ஆதிக்கம் செலுத்தும் நிலை இருக்குமானால் அது நாட்டுக்குப் பெரும் தீங்கை விளைவிக்கும். அனைத்துச் சமூகத்தினரும் ஏற்றம் பெறும் வகையில் மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு பணியிடங்கள் வழங்கப்பட வேண்டும்” என்ற அடித்தளத்தில் அந்த அரசாணை வெளியிடப்பட்டது. இதுதான் சமூகநீதிக்கான அடித்தளம் ஆகும். அதிலிருந்துதான் சமூகநீதி வரலாற்றின் மாபெரும் பயணம் தொடங்கியது.



Government of Madras

PUBLIC DEPARTMENT

G.O. No. 613, 16th September 1921

Public Services

Non-Brahmans—Appointment of—Instructions issued.

Order—No. 613, Public, dated 16th September 1921.

In order to increase the proportion of posts in Government offices held by non-Brahmans, the Government direct that the principle prescribed for the Revenue Department in Board's Standing Order No. 128 (2), on the subject of the distribution of appointments among various castes and communities, should be extended to appointments of all grades in the several departments of Government. All heads of departments and other officers empowered to make appointments are requested to adhere strictly to this principle in filling up vacancies in future.

2. Heads of departments, Collectors and District Judges are requested to submit to Government half-yearly returns showing, in respect to their own offices and the subordinate offices under their control, the number of men newly entertained in the permanent service during the half-year and classifying them under the following heads:—

(1) Brahmans.
(2) Non-Brahman Hindus.
(3) Indian Christians.
(4) Muhammadans.
(5) Europeans and Anglo-Indians.
(6) Others.

The returns should be submitted not later than the 15th of January and 15th of July of each year. The first return should be for the half-year ending 31st December 1921.

(By order of the Governor in Council)

Acting Chief Secretary.

To all heads of departments under the Chief Secretary including Collectors and District and Sessions Judges.

Copy to the departments of the Secretariat (for communication to the concerned heads of departments under them).

Editors' Table.

நூறு ஆண்டுகள் கழித்துச் செப்டம்பர் 16ஆம் நாளான இன்று வெள்ளுடை வேந்தர் தியாகராயர், சமுதாய சீர்திருத்த மருத்துவர்களான நடேசனார், டி.எம். நாயர், கடலூர் ஏ.சுப்பராயலு, பனகல் அரசர், அமைச்சர் எஸ்.முத்தையா, பி.டி.இராஜன் ஆகியோரை நினைத்துப் பார்க்கிறேன். இவர்கள் உள்ளிட்ட பெருமக்கள் அன்று தொடங்கிவைத்த சமூகநீதிப் புரட்சிதான் தமிழ்ச் சமுதாயத்தின் இலட்சக்கணக்கானவர்கள் இல்லங்களில் விளக்கேற்றக் காரணமாக அமைந்தது. இந்த உத்தரவை எப்படிச் செயல்படுத்த வேண்டும் என்ற தரவரிசைப் பட்டியலைப் போட்டுக்கொடுத்தார் அன்றைய அமைச்சர் எஸ்.முத்தையா அவர்கள். அதனால்தான், ‘இனிப் பிறக்கும் பிள்ளைகளுக்கு முத்தையா என்று பெயர் சூட்டுங்கள்’ என்றார் தந்தை பெரியார் அவர்கள்.

இந்தச் சமூகநீதி அரசாணையானது தமிழ்நாடு எல்லையைக் கடந்து இந்தியா முழுவதும் இன்று வெற்றி நடைபோட்டு வருகிறது. இத்தகைய அகில இந்தியப் புரட்சிக்குக் காரணமான அனைவரையும் இந்த நேரத்தில் வணங்குகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக அரசானது, இத்தகைய சமூகநீதிப் பயணத்தின் அடுத்தகட்டத்தை இன்று முதல் அறிமுகம் செய்ய இருக்கிறது.

சமூகநீதி அளவுகோலானது சட்டப்படி இருக்கிறது. ஆனால் முழுமையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிப்பதற்காகத் தமிழ்நாடு அரசால் ஒரு கண்காணிப்புக் குழுவை அமைக்க முடிவெடுத்துள்ளோம். கல்வி, வேலைவாய்ப்பு, பதவிகள், பதவி உயர்வுகள், நியமனங்கள் ஆகியவற்றில் சமூகநீதி அளவுகோல் முறையாக, முழுமையாகப் பின்பற்றப்படுகிறதா என்பதை இக்குழு கண்காணிக்கும்; வழிகாட்டும்; செயல்படுத்தும். சரியாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால் உரிய நடவடிக்கை எடுக்க அரசுக்கு இக்குழு பரிந்துரை செய்யும். இதற்கான விதிமுறைகள் விரைவில் வெளியிடப்படும். இதில் அரசு அதிகாரிகள், கல்வியாளர்கள், சட்ட வல்லுநர்கள் இடம்பெறுவார்கள்.

சமூகநீதி அரசாணையின் நூற்றாண்டு நாளில் சமூகநீதிக் கண்காணிப்புக் குழுவை அமைப்பதில் பெருமை அடைகிறேன்.

எல்லோர்க்கும் எல்லாம் என்ற திசை நோக்கி நடக்கட்டும் இந்த வையம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

75 சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

அக்டோபர் : 2
உத்தமர் காந்தியடிகள் பிறந்த நாள்

“சகோதரத்துவத்தை வளர்ப்போம்”

அகிம்சை – சகோதரத்துவம் என மானுட சமுதாயத்திற்கு
இன்றியமையாத பண்புகளை வாழ்வின்
நெறியாகக் கொண்டு வாழ்ந்து நமக்குக் கற்பித்த
மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள்!

தேசத்தந்தை காட்டிய நல்வழியில்
நாமும், நாடும் நடைபோடுவதே
இன்றைக்கும், என்றைக்கும் தேவையாகும்!

“சகோதரத்துவத்தை வளர்ப்போம்”!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தமிழ்நாடு அரசின் சார்பில் உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 153ஆவது பிறந்தநாளையொட்டி, 02.10.2021 அன்று சென்னை, காமராசர் சாலையில் அமைந்துள்ள உத்தமர் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு அருகே வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு, மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **ஆர்.என்.ரவி** அவர்களும், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களும் மலர் தூவி மரியாதை செலுத்தியதுடன், சர்வோதயா சங்கத்தினர் நிகழ்த்திய நூற்பு வேள்வி மற்றும் காந்திய இசை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.

உத்தமர் காந்தியடிகள் பிறந்தநாள்

வறுமையில் வாடித்தவிக்கும் பாமர மக்களில்
தானும் ஒருவர் என்பதை உணர்த்தும் வகையில்
அண்ணல் காந்தியடிகள்
1921ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22ஆம் நாள்
மதுரை மாநகர், மேலமாசி வீதியில்
முழுந்தாள் வரை ஆடை உடுத்தும் விரதத்தை
மேற்கொண்ட இடத்தில் அமைந்துள்ள
கதர் மற்றும் கைத்தறி விற்பனை நிலையத்தில் உள்ள
உத்தமர் காந்தியடிகளின்
திருவுருவச் சிலைக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
02.10.2021 அன்று,
மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கதர் அங்காடியின் முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார்

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கிராமப்புறங்களில் கதர் மற்றும் கிராமத் தொழில்களை அமைத்தல், ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்துதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்படுகிறது.

உத்தமர் காந்தியடிகளின் பிறந்தநாள் விழாவினைக் கொண்டாடும் வகையில் கதர் துணிகளைக் கண்காட்சி மூலம் 02.10.2021 முதல் 04.11.2021 வரை விற்பனை செய்திடத் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த கண்காட்சியில் இடம் பெற்றுள்ள கதர் பருத்தி, பாலியஸ்டர் மற்றும் பட்டு ரகங்களுக்கு 30 சதவிகித சிறப்புத் தள்ளுபடி அனுமதிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மதுரை, மேலமாசி வீதியில் கதர் மற்றும் கைத்தறி விற்பனை நிலைய கதர் அங்காடியின் முதல் விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

அக்டோபர் 2 :
பெருந்தலைவர் காமராசர் அவர்களின் நினைவு நாள்

‘ஏழைப் பங்காளர்’

எளிமையின் உருவம்
ஏழைப் பங்காளர்
பெருந்தலைவர் காமராசர் அவர்களின்
நினைவுநாள்!
கல்விக் கண் திறந்த அவரைத்
தமிழ்ச்சமூகம் என்றும் மறவாது!
பெருந்தலைவரின் தொண்டுள்ளம்
கொண்டு பொதுவாழ்வில்
செயல்படுவோம்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்



சென்னை, கிண்டியில் அமைந்துள்ள பெருந்தலைவர் காமராசர் நினைவகத்தில், பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 46ஆவது நினைவு நாளையொட்டி, 02.10.2021 அன்று மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்கள்.

சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி

உத்தமர் காந்தியடிகளின்
பிறந்தநாளையொட்டி
மதுரை மாவட்டம்,
பாப்பாபட்டி கிராமத்தில் நடைபெற்ற
கிராமசபைக் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
ஆற்றிய உரை
02.10.2021

உங்கள் அனைவருக்கும் முதலில் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இங்கு எல்லோரும் பேசுவதற்கு நேரமில்லை, வாய்ப்பு இல்லை. ஆனால், அனைவருடைய கருத்துக்களையும் அடிப்படையாக வைத்து ஆண்கள் பகுதியில் மூன்று பேரும், பெண்கள் பகுதியில் மூன்று பேரும் இன்றைக்குப் பேசியிருக்கிறீர்கள்.

பேசியவர்கள் அனைவரும் என்ன சொன்னார்களென்றால், நீங்கள் வந்தது மிகவும் பெருமையாக இருக்கிறது, மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது என்பதை நீங்கள் சிறப்பாக வெளியிட்டீர்கள். நான் என்ன சொல்ல விரும்புகிறேன் என்றால், உங்களைப் பார்ப்பதில் எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. எனவே, அப்படிப்பட்ட மகிழ்ச்சியோடு, பெருமையோடு உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய வாய்ப்பை இன்றைக்கு நான் பெற்றிருக்கிறேன்.

இந்த நிகழ்ச்சியில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.ஐ.பெரியசாமி அவர்கள் கலந்துகொண்டிருக்கிறார்கள்.

அதேபோல, மாவட்ட ஆட்சியர் மருத்துவர் எஸ்.அனீஷ் சேகர், இ.ஆ.ப., அவர்கள், தொடக்கத்தில் வரவேற்புரையாற்றிய ஊராட்சித் தலைவர் திரு.முருகானந்தம் அவர்கள், துணைத் தலைவர் திருமதி லட்சுமி அவர்கள், ஊராட்சியின் செயலாளர் திரு.தங்கபாண்டி அவர்கள், அதேபோல், ஏற்கெனவே இந்த மாவட்டத்தில் ஆட்சியராக இருந்து உங்களுடைய உள்ளங்களைக் கவர்ந்திருக்கக்கூடிய திரு.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள்.

உங்களால் மதிக்கப்பட்ட, கவரப்பட்ட, உங்களால் பெயர்பெற்ற, உங்களால் சிறப்புக்குரியவராக இன்றைக்கு விளங்கிக் கொண்டிருக்கக்கூடிய திரு.உதயச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் இன்றைக்கு எனக்குத் தனிச் செயலாளர் பொறுப்பை ஏற்று, அந்தப் பணியைச் செய்துகொண்டிருக்கிறார்.

அதேபோல், மதுரை மாவட்டத்தில் இருக்கக்கூடிய அரசு அதிகாரிகள், இந்த பாப்பாப்பட்டி கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய அருமை பெரியோர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், நண்பர்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

PR 827

இந்தக் கூட்டத்தினுடைய தலைப்பு “கிராம சபை”. இந்தக் கிராமசபைக் கூட்டத்தை ஒரு ஆண்டிற்கு இரண்டு அல்லது மூன்று முறை நடத்த வேண்டும் என்ற மரபை வைத்துக்கொண்டு நாம் அதைப் பின்பற்றிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முன்னிலையில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான கொடுமைகள் தடுப்பு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

ஆனால், இடையில் கொரோனா என்ற கொடிய தொற்றுநோய் நம்மைச் சுற்றிச் சூழ்ந்து அடித்துக் கொண்டிருக்கக்கூடிய காரணத்தால், நாம் இதைக் கடந்த இரண்டாண்டு காலமாக முறையாக நடத்த முடியாத ஒரு நிலை. ஆனால், இப்போது இன்றைக்குக் காந்தி ஜெயந்தியையொட்டி, காந்தி பிறந்தநாளையொட்டி, இந்தப் பாப்பாப்பட்டிக்கு வந்து இங்கு நடக்கக்கூடிய கிராமசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ள எனக்கு உள்ளபடியே பெருமையாக இருக்கிறது.

இந்த நாட்டையே கிராம ராஜ்யம் ஆக்க வேண்டும் என்று விரும்பியவர் மகாத்மா காந்தி அவர்கள். கிராமம் தான் இந்தியா – உண்மையான இந்தியா என்றால் அது கிராமத்திலிருந்துதான் உருவாகிறது – இதைச் சொன்னவர் காந்தி அவர்கள். அத்தகைய கிராமப் பகுதிக்கு நான் இன்றைக்கு வந்திருக்கிறேன். அதிலும் குறிப்பாக மதுரை மண் மகாத்மா காந்தி அவர்களுக்கு மறக்கமுடியாத மண் ஆகும்.

தென்னாப்பிரிக்காவில் கோட் சூட் மாட்டிக்கொண்டு ஒரு வழக்கறிஞராகப் பணியாற்றியவர் மகாத்மா காந்தி அவர்கள். இந்த மதுரை மண்ணுக்கு வந்தபோதுதான் அவர் அரையாடை அணிந்த அண்ணலாக மாறினார். மதுரைக்கு அருகில் ஒரு சின்னஞ்சிறு குக்கிராமம். அந்தக் குக்கிராமத்தின் வழியாக மகாத்மா காந்தி அவர்கள் பயணம் செய்துகொண்டு இருந்தபோது, ஒரு அழுக்கு உடையோடு, அழுக்குத் துணியோடு மட்டும் சில மக்கள் அங்கே அலைந்துகொண்டிருந்தார்கள். பலபேர் வயலில் வேலைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒருவரை மகாத்மா காந்தி அவர்கள் பக்கத்தில் அழைத்துப் பேசினார். ‘எதற்கு இவ்வளவு அழுக்கான துணியை அணிந்துள்ளீர்கள்? ஏன் நல்ல துணி இல்லையா, இவ்வளவு அழுக்காக இருக்கிறதே, இதைப்போய் அணிந்திருக்கிறீர்களே” என்று மகாத்மா காந்தி அவர்கள் அவர்களிடத்தில் கேட்டார். அப்போது அவர் சொன்னார், “அய்யா என்னிடம் இருப்பது ஒரே ஒரு வேட்டிதான், அதைத் துவைத்துக் காயப் போடக் கூட கையில் காசு கிடையாது, சோப்பு வாங்க முடியவில்லை, மாற்றுத் துணியும் இல்லை, அதனால்தானே அதையே நான் கட்டிக்கொண்டிருக்கிறேன் என்று சொன்னார்”. இதுதான் மகாத்மா காந்தி அவர்களின் மனதையே மாற்றியது.

ஏழைகள் மாற்றுத் துணி இல்லாமல் வறுமையில் வாடிக்கொண்டிருக்கிறார்கள், நாம் எதற்காக இதுபோன்ற ஆடம்பர உடையை அணிய வேண்டும் என்று தனக்குள்ளே கேட்டுக்கொண்டு அன்றைக்கே கோட்டைக் கழட்டிப் போட்டுவிட்டார். அதிலிருந்து அரையாடையோடுதான் மகாத்மா காந்தி அவர்கள் வாழ்ந்தார்கள் என்பது வரலாறு. 100 ஆண்டுகளுக்கு முன்னால் நடந்த நிகழ்ச்சி இது. காந்தி அடிகளையே மாற்றிய பகுதிதான் இந்த மதுரைப் பகுதி என்பது பெருமைக்குரியது.

ஆகவே, இந்த மதுரை மண்ணில், இந்தப் பாப்பாபட்டி பகுதியில் நடக்கக்கூடிய கிராமசபைக் கூட்டத்தில் உங்களோடு சேர்ந்து நானும் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். இங்கே கூடச் சொன்னீர்கள், எங்கள் கிராமம், எங்கள் கிராமம் என்று சொன்னீர்கள், இது உங்கள் கிராமம் மட்டுமல்ல, நம் கிராமம். எல்லா கிராமமும் நம் கிராமம்தான், எல்லா ஊரும் நம் ஊர்தான், எல்லா மக்களும் நம் மக்கள்தான்.

அதனால்தான், நான் ஆட்சிக்கு வந்தவுடன் சொன்னேன், இது என்னுடைய ஆட்சி அல்ல, நம்முடைய ஆட்சி, உங்கள் ஆட்சி, உங்களுக்காகப் பல திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டிருக்கக்கூடிய ஆட்சி. இன்றைக்குக் கிராமசபைக் கூட்டம் தமிழ்நாடு முழுவதும் நடந்துகொண்டிருக்கிறது. அதிலும் இந்தப் பாப்பாபட்டியில் நடக்கிற இந்த கிராமசபைக் கூட்டத்தில் கலந்துகொள்வது உள்ளபடியே எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது. நான் முதலமைச்சராகி எத்தனையோ அரசு நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறேன், கட்சி நிகழ்ச்சிகளுக்குச் செல்கிறேன், பொது நிகழ்ச்சிகளுக்குச் சென்றிருக்கிறேன், எல்லா நிகழ்ச்சிகளையும்விட மறக்க முடியாத நிகழ்ச்சி எதுவென்று கேட்டால், இந்தப் பாப்பாபட்டி பகுதியில் நடக்கிற இந்த நிகழ்ச்சியாகத்தான் அமையும்.

2006ஆம் ஆண்டு இந்தப் பகுதியில் ஊராட்சித் தேர்தல் நடத்த முடியாத சூழ்நிலை இருந்தது. 2006ஆம் ஆண்டு நடைபெற்ற அந்த வரலாற்று நிகழ்ச்சிகளையெல்லாம் இங்கே சுட்டிக்காட்டினீர்கள்.

மதுரை மாவட்டத்தில் சில கிராமப்பகுதிகளில் தேர்தல் நடத்த முடியாத ஒரு சமூகச் சூழல் இருந்தது. அதில் குறிப்பாக பாப்பாபட்டி, கீரிப்பட்டி, நாட்டார்மங்கலம், விருதுநகர் மாவட்டத்தில் இருக்கும் கொட்டக்கச்சியேந்தல் ஆகிய நான்கு கிராமங்களில் தேர்தலே நடத்த முடியாத ஒரு நிலை ஏற்பட்டது. ஏன் ஏற்பட்டது, எப்படி ஏற்பட்டது, யாரால் ஏற்பட்டது என்கிற விவகாரத்தில் நான் செல்ல விரும்பவில்லை, அது தேவையில்லை.

ஆனால் ஜனநாயகத்தை வலுப்படுத்த வேண்டுமென்றால், தேர்தல் நடத்தியாக வேண்டும். மிகமிக அடிப்படையானது என்பதால் இந்தத் தேர்தல் நடத்தியே ஆகவேண்டும் என்று அன்றைக்குக் கலைஞர் முதலமைச்சராக இருந்தார், அவருடைய அமைச்சரவையில் நான் உள்ளாட்சித்துறை அமைச்சராக இருந்தேன். அப்போது என்னுடைய துறையில் உள்ளாட்சித் துறைச் செயலாளராக இருந்தவர்தான் அசோக் வரதன் ஷெட்டி அவர்கள். அப்போது மதுரை மாவட்டக் கலெக்டராக இருந்தவர் இப்போது என்னுடைய முதன்மைச் செயலாளர் பொறுப்பில் இருக்கும் திரு. உதயச்சந்திரன் அவர்கள். அசோக் வரதன் ஷெட்டி அவர்களும், உதயச்சந்திரன் அவர்களும் முழுமையாக இதில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு, இந்தத் தேர்தலை எப்படியாவது நடத்தவேண்டும் என்று அவர்கள் முயற்சி செய்து, அதற்காகப் பல சிரமங்களையெல்லாம் ஏற்றுக்கொண்டு, அதற்கு நீங்களும் பல வகையில் ஒத்துழைப்பு தந்து, தேர்தலை நடத்துவதற்கான ஒரு சூழலை ஏற்படுத்தி, தேர்தலை நடத்திக் கொடுத்தீர்கள்.

இந்தச் செய்தியை அன்றைய முதல்வர் கலைஞர் அவர்களிடத்தில் நாங்கள் சொன்னோம். அதைச் சொன்னபோது அவர் மிகுந்த மகிழ்ச்சியடைந்தார். மகிழ்ச்சி அடைந்தது மட்டுமல்ல, இந்தப் பகுதியில், இந்த ஊராட்சியில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய ஊராட்சித் தலைவர்களை எல்லாம் அழைத்துக்கொண்டு வாருங்கள், நான் அவர்களிடம் பேச வேண்டும், அவர்களைப் பார்க்க வேண்டும், அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கவேண்டும் என்று கலைஞர் எங்களுக்கு உத்தரவிட்டார்கள்.

அதற்குப் பிறகு சென்னைக்கு அழைத்து வந்து சென்னை கலைவாணர் அரங்கத்தில் ஒரு பாராட்டு விழாவே நடத்தினோம். கலைஞர் அவர்களே அந்த விழாவில் கலந்துகொண்டு பாராட்டிப் பேசினார். அந்த விழாவிற்குச் சமத்துவப் பெருவிழா என்றும் பெயர் சூட்டி அந்த விழாவை நடத்தினோம். அந்த விழாவுக்கு நான் தான் முன்னிலை வகித்தேன். அதில் விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சார்ந்த திரு.தொல் திருமாவளவன் கலந்துகொண்டு பேசும்போது சொன்னார், தலைவர் கலைஞர் அவர்களைப் பாராட்டிப் பேசிவிட்டு, இந்தத் தேர்தலை நடத்தியதற்காக நன்றி கூறிவிட்டு, சமத்துவப் பெரியார் கலைஞர் என்று பட்டத்தைக் கொடுத்தார். அதற்குப் பிறகு இந்த ஊராட்சிகளின் வளர்ச்சிக்காக ரூ.80 இலட்சம் வழங்கிய அரசுதான் அன்றைய திமுக அரசு. அது மட்டுமல்ல திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ரூ.20 இலட்சம் வழங்கியிருக்கிறோம். அந்த நிதியைக் கொண்டுப் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை இந்தப் பகுதிக்கு நாம் ஆற்றியிருக்கிறோம்.

அப்படிப்பட்ட பாப்பாபட்டிக்குத்தான் நான் இப்போது வந்திருக்கிறேன். தமிழ்நாட்டில் எத்தனையோ ஊராட்சிகள் இருந்தாலும் பாப்பாபட்டியைத் தேடி நான் வந்திருப்பதற்கு இதுதான் முக்கியமான காரணம் என்பதை உங்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் கலைஞர் அவர்கள் முன்னின்று நடத்திய சமத்துவப் பெருவிழாவில் பேசும்போது சமத்துவம்தான் வளர்ச்சிக்கு அடிப்படை என்று பேசினார். ஒற்றுமை இல்லாத சமூகத்தில் வளர்ச்சி இருக்காது. அத்தகைய ஒற்றுமை உணர்வோடு இந்தக் கிராமசபைக் கூட்டம் இப்போது நடந்துகொண்டு இருக்கிறது. கிராமங்களிலிருந்துதான் ஜனநாயகம் மலர்ந்தது.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் குடத்தை வைத்துக்கொண்டு, அதில் போட்டியிடும் ஆட்களின் பெயரை எழுதிப் போடுவார்கள், அதற்குப் பிறகு, அதைக் குலுக்கி, குடத்தில் போட்டிருக்கும் ஓலைச்சுவடியை எடுப்பார்கள். யார் பெயர் வருகிறதோ அவர்கள்தான் வெற்றி பெற்றவர்கள். அதற்குக் குடவோலை முறை என்று பெயர். அந்தக் குடவோலை முறைதான் இன்று வோட்டிங் மிஷின் ஆக மாறியிருக்கிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் கிராம சபை கூட்டத்தையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கங்களை பார்வையிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.10.2021 அன்று, மதுரை மாவட்டம், கே.நாட்டாம்பட்டி கிராமத்திலுள்ள தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்க அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

'ஒரு நல்ல ஜனநாயகம் என்றால் அது கடைக்கோடி மனிதனின் குரலைக் கேட்பதாக இருக்க வேண்டும்' என்று மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். கடைக்கோடி மனிதனின் குரலைக் கேட்பதற்காகத்தான் நான் வந்திருக்கிறேன். இதுதான் காந்தியார் காண விரும்பிய கிராம இராஜ்யம் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

அதேபோல, கிராம மறுமலர்ச்சிக்குத் திட்டங்களை ஏராளமாக உருவாக்கித் தந்தது, ஏராளமாக ஏற்படுத்தித் தந்தது திமுக ஆட்சிதான். இப்போதும், நாம் தேர்தலுக்கு முன்னர், நாங்கள் ஆட்சிக்கு வந்தால் என்னென்ன செய்யப்போகிறோம், மக்களுக்கு என்னென்ன திட்டங்களை நிறைவேற்றப்போகிறோம் என்று மேடையில் பேசிவிட்டுச் சென்றுவிடவில்லை அல்லது துண்டுப் பிரசுரம் அச்சிட்டு மக்களுக்குக் கொடுத்து அதோடு கடமை முடிந்துவிட்டது என்று நினைக்கவில்லை. ஒரு புத்தகமாகவே அச்சிட்டுக் கொடுத்தோம். 505 வாக்குறுதிகள் அதில் இடம்பெற்றிருந்தன. அந்த 505 வாக்குறுதிகளிலிருந்து நான்கு மாதங்களுக்குள் 202 வாக்குறுதிகளை இதுவரையில் நாம் நிறைவேற்றி முடித்திருக்கிறோம். அதில் தேர்தல் நேரத்தில் சொன்ன வாக்குறுதிகளும் இருக்கிறது, சொல்லாததும் இருக்கிறது. மீதமுள்ள வாக்குறுதிகளை மட்டுமல்ல, இன்னும் என்னென்ன தேவைப்படுகிறதோ, அத்தனை வாக்குறுதிகளையும் நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்ற வேண்டிய கடமை எங்களுக்கு இருக்கிறது, அதை நிறைவேற்றியே தீருவோம், அதில் எந்த மாற்றமும் கிடையாது.

குறிப்பிட்டுச் சொல்லவேண்டுமென்றால், மக்களைத் தேடி மருத்துவம் திட்டமானாலும், நமக்கு நாமே திட்டமானாலும், அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானாலும், சமத்துவபுரங்களானாலும், அனைத்தும் கிராமப்புற ஏழை எளிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தக்கூடிய திட்டங்களாக நம்முடைய கழக அரசு அமைத்து வருகிறது. இது சாமானிய மக்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சி, சாமானியர்களின் ஆட்சி என்பதை யாரும் மறந்துவிட வேண்டாம். அதனால்தான் உழவர்களுடைய கருத்தைக் கேட்டு, விவசாயிகளின் எண்ணங்களை, உணர்வுகளையெல்லாம் கேட்டு தமிழ்நாட்டின் வரலாற்றிலேயே திமுக ஆட்சியில்தான் வேளாண் துறைக்கு எனத் தனி நிதிநிலை அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

எனவே, மீண்டும் சொல்கிறேன். இது எனது அரசு அல்ல; நமது அரசு. உங்களுடைய விருப்பங்களோடு பல்வேறுத் திட்டங்களை நிறைவேற்றவிருக்கக்கூடிய அரசு. இந்த அரசு இருக்கவேண்டுமென்று நினைக்கிற வகையில், அதற்காக நாம் அனைவரும் பாடுபட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழை – பணக்காரர், கிராமம் – நகரம், பெரிய தொழில் – சிறிய தொழில், வட மாவட்டம் – தென்மாவட்டம் என்ற எந்த வேற்றுமையும் நாங்கள் பார்க்கப்போவதில்லை. ஒட்டுமொத்தமாக ஒளிமயமான தமிழ்நாட்டை அமைப்பதற்கு நாங்கள் பாடுபடப்போகிறோம், அதற்கு நீங்கள் அத்தனைப்பேரும் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்று நான் உங்களையெல்லாம் அன்போடுக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல, இங்கே பேசிய நண்பர்கள், சகோதரிகள் சில கோரிக்கைகளை எடுத்துச் சொன்னீர்கள். அவைகளை நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றித் தருவோம் என்ற அந்த நம்பிக்கையை உங்களுக்கு எடுத்துச் சொல்கிறேன். அதுமட்டுமல்லாமல், இப்போது உங்களுக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய வகையில் சில அறிவிப்புகளையும் வெளியிடப்போகிறேன்.

அறிவிப்புகள்

★ மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின்கீழ், பாப்பாபட்டி கிராமத்தில் ரூ.23.57 இலட்சம் செலவில் ஊராட்சி மன்ற அலுவலகம் கட்டப்படும்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.10.2021 அன்று, மதுரை மாவட்டம், கே.நாட்டாம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கப் பயனாளிகளுக்குப் பயிர்க் கடனுக்கான காசோலைகளை வழங்கினார்.

★ பாகதேவன்பட்டி கிராமத்தில் சுமார் ரூ.10.93 இலட்சம் செலவில் அங்கன்வாடி மையக் கட்டடம் உருவாக்கப்படும்.

★ பாப்பாபட்டி கிராமத்தில் ரூ.14.59 இலட்சம் மதிப்பீட்டில் நியாய விலைக் கட்டடம் கட்டித் தரப்படும்.

★ பாப்பாபட்டி, மகாதேவன்பட்டி, பேயம்பட்டி மற்றும் கரையாம்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள மயானங்களில் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

★ கரையாம்பட்டி கிராமத்தில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் கதிர் அடிக்கப்படும் களம் அமைக்கப்படும்.

★ கல்லுப்பட்டி காலனியில் புதிய தெருவிளக்கு வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும். பாகதேவன்பட்டி, பேயம்பட்டி ஆகிய கிராமங்கள் கூடுதல் தெருவிளக்கு வசதிகள் செய்து தரப்படும். இவை ரூ.1.85 இலட்சம் செலவில் நிறைவேற்றப்படும்.

★ பாப்பாபட்டி கிராமத்தில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி அமைக்கப்படும். மேலும், பாப்பாபட்டி மற்றும் கல்லுப்பட்டி காலனிக்குப் புதிய ஆழ்குழாய் அமைக்கப்படும். இதற்கான மதிப்பீடு ரூ.25.06 இலட்சம் ஆகும்.

இப்படிப் பல திட்டங்களை நிறைவேற்றக் காத்திருக்கிறோம். ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிற திட்டங்களெல்லாம், நிறைவேற்றப் பட்டிருக்கிற திட்டங்களெல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும்.

ஆகவே, இந்தப் பணிகள் எல்லாம், அதேபோல், நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கக் கூடிய கோரிக்கைகளையெல்லாம் எந்த அளவுக்கு நிறைவேற்றப்படுகிறது என்பதை வாரத்திற்கு ஒருமுறை நானே நேரடியாக மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தொலைப்பேசியில் தொடர்புகொண்டு அல்லது காணொலிக் காட்சி மூலமாக அழைத்து என்ன நிலை என்பதை நிச்சயமாகக் கேட்பேன்.

அவையெல்லாம் விரைவில் முடித்துத் தரப்படும் என்ற நம்பிக்கையை எடுத்துச் சொல்லி, உள்ளபடியே இந்தக் கூட்டத்தைப் பார்க்கும்போது இங்கு ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் வந்திருக்கின்றீர்கள். ஆக, பெண்களுடைய முன்னேற்றத்திற்காகத் திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி என்ன செய்து கொண்டிருக்கிறது என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். இந்தக் கிராமசபைக் கூட்டம், ஒரு கிராமசபைக் கூட்டம் போன்று இல்லை, ஒரு பொதுக் கூட்டம் போன்று இருக்கிறது. ஆனால், இந்தக் கூட்டத்தில் ஒரு சிறிய சப்தம் கூட இல்லை, அதுவும் பெண்கள் உட்கார்ந்திருந்த பகுதியில் மிகவும் அமைதியாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதிலிருந்து என்ன தெரிகிறது என்றால், இந்த ஆட்சிக்கு, இந்தக் கிராமசபைக் கூட்டத்திற்கு மக்கள் ஆர்வமாக, இவ்வளவு அமைதியாக வந்து நீங்கள் கலந்துகொண்டிருப்பதைப் பார்க்கும்போது, நிச்சயம் நாம் முன்னேறுவோம், நம்முடைய தமிழ்நாடு பல முன்னேற்றத்தைக் காண இருக்கிறது.

கடந்த சில நாட்களாக, பல்வேறு மாநிலங்களின் முதலமைச்சர்களையெல்லாம் ஒப்பிட்டு, ஒரு சிறந்த முதலமைச்சர், நம்பர் 1 முதலமைச்சர் என்று எனக்குப் பெயர் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதில் உள்ளபடியே எனக்குப் பெருமை இல்லை. எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்த்துத் தமிழ்நாடுதான் முதல் மாநிலம் என்று சொல்லக்கூடிய நிலை வரவேண்டும், வரப்போகிறது, வரும், அதற்கு நீங்களெல்லாம் துணை நிற்க வேண்டும், அதில் பாப்பாபட்டி ஊராட்சியும் பங்குபெறப் போகிறது, இடம்பெறப் போகிறது என்ற நம்பிக்கையை எடுத்துச்சொல்லி, உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

ஏற்றுமதியில் ஏற்றம்
முன்னணியில் தமிழ்நாடு

தமிழ்நாடு ஏற்றுமதி மாநாட்டில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உரை (22.09.2021)

மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்களே, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன் அவர்களே, வரவேற்புரை ஆற்றிய தலைமைச் செயலாளர் திரு.வெ.இறையன்பு அவர்களே, ஒன்றிய அரசின் வணிகத் துறைக் கூடுதல் செயலாளர் திரு.சஞ்சய் சத்தா அவர்களே, தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.முருகானந்தம் அவர்களே, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறைச் செயலர் திரு. அருண் ராய் அவர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள ஒன்றிய வர்த்தகத் துறையின் கூடுதல் இயக்குநர், திரு.சண்முக சுந்தரம் அவர்களே, தமிழ்நாடு அரசின் மூத்த அதிகாரிகளே, அனுபவம் மிக்க தொழில் அதிபர்களே, ஏற்றுமதியாளர்களே, பத்திரிகை மற்றும் ஊடகத்துறை சார்ந்த நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

‘ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு’ என்ற தலைப்பில் நடைபெறும் தமிழ்நாடு ஏற்றுமதி மாநாட்டில் கலந்துகொள்வதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். ஏற்றுமதியில் ஏற்றம் பெற்று இந்தியாவின் முன்னணி இடத்தை நோக்கி, தமிழ்நாடு செல்லத் தொடங்கியிருக்கும் நேரத்தில் இந்த மாநாடு நடைபெறுவது மகிழ்ச்சிக்குரியதாக அமைந்து இருக்கிறது. இந்தியா முழுவதும் கடந்த 20 முதல் 26ஆம் தேதி வரையிலான ஒரு வாரக் காலத்துக்கு வர்த்தகம் மற்றும் வணிக வாரமாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. இந்திய நாடு சுதந்திரம் அடைந்ததன் 75ஆவது ஆண்டுவிழாவைக் கொண்டாடும் வகையில் இதனை அறிவித்துள்ளார்கள். அந்த வரிசையில் தமிழ்நாட்டிலும் இதுபோன்ற விழாவைத் தமிழகத் தொழில்துறை அமைச்சரும், ஊரகத் தொழில்துறை அமைச்சரும் ஏற்பாடு செய்துள்ளார்கள். அமைச்சர்களுக்கும் அவர்களது துறைசார்ந்த உயரதிகாரிகளுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழில் வளர்ச்சி என்பது உங்கள் துறை வளர்ச்சி மட்டுமல்ல, அது அனைத்துத் துறைகளின் வளர்ச்சி என்பதை உணர்ந்தவன் நான். அதுதான் இந்த மாநிலத்தின் வளர்ச்சி, நாட்டின் வளர்ச்சியாகும். தொழில்துறை வளர்கிறது என்றால் அனைத்துத் துறைகளும் வளர்கிறது என்று பொருள். எனவேதான் இதுபோன்ற மாநாடுகள், கண்காட்சிகள் தமிழகத்தில் அதிகம் நடைபெற வேண்டும்; சென்னையில்

மட்டுமல்ல அனைத்து மாவட்டங்களிலும் பரவலாக நடைபெற வேண்டும் என்று அமைச்சர்களையும், அதிகாரிகளையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ரூ.2,120.54 கோடி மதிப்பிலான 24 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளது. இதன்மூலமாக 41,695 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. இந்த முதலீடுகள், சென்னை, திருவள்ளூர், இராணிப்பேட்டை, கிருஷ்ணகிரி, மதுரை, தஞ்சாவூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி என்று தமிழ்நாட்டின் பரவலான வளர்ச்சிக்கு ஏதுவாக, பல்வேறு மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்தத் தருணத்தில் முதலீடு மேற்கொண்ட அனைவருக்கும் எனது நன்றியினையும், பாராட்டினையும் தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கருத்தில்கொண்டு, ஏற்றுமதியைப் பெருமளவில் பெருக்கிடுவதற்கு, எந்த நிலையிலும், ஏற்றுமதியாளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் இந்த அரசு நிச்சயமாக உறுதுணையாக நிற்கும். அனைத்து ஆதரவுகளையும் தொடர்ந்து அளிக்கும் என்று உறுதியளிக்கிறேன். இந்நிறுவனங்கள் தொழில் தொடங்க, தூண்டுதலாக அமைந்த மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களையும் தொழில்துறை அதிகாரிகளையும் மனதாரப் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சி என்பது எப்போதும் தமிழ்நாட்டின் வளர்ச்சியாக மட்டும் இருந்தது இல்லை. அது இந்தியா முழுமைக்கும் பரந்த வளர்ச்சியாக இருந்துள்ளது. உலகம் முழுவதும் பரவிய வளர்ச்சியாகவும் இருந்துள்ளது. அதைத்தான் திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்றார் அவ்வை மூதாட்டி. உலக வர்த்தகர்களும், வணிகர்களும் ஒன்றுகூடும் இடமாக நம்முடைய தமிழ் நிலம் இருந்துள்ளது. அத்தகைய பழம்பெருமையை நாம் மீட்டாக வேண்டும். நம்முடைய தயாரிப்புகள் அனைத்தும் உலகம் முழுவதும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும். உலகின் முன்னணித் தொழில் நிறுவனங்கள் தமிழகத்தில் தங்கள் நிறுவனத்தைத் தொடங்கிட வேண்டும். அதாவது, உலகம் முழுக்க நாம் செல்ல வேண்டும். உலகம், தமிழகத்தை நோக்கி வந்தாக வேண்டும். மொத்தத்தில் தமிழகத் தொழில்துறையின் உள்ளங்கையில் உலகம் இருக்க வேண்டும். அதுவே உங்களது இலக்காக அமைந்திட வேண்டும்.

இந்திய அளவில் தொழில்துறையில் சிறந்த மாநிலமாகத் தமிழ்நாடு இருக்கிறது என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

- **ரூ.1.93 இலட்சம் கோடி ஏற்றுமதியுடன், இந்தியாவிலேயே, தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக விளங்கி வருகின்றது.**
- **2020–2021ஆம் ஆண்டிற்கான அகில இந்திய அளவிலான ஏற்றுமதியில், தமிழ்நாட்டின் பங்களிப்பு 8.97 விழுக்காடு ஆகும்.**
- **மோட்டார் வாகன உற்பத்தியில், தமிழ்நாடு முன்னிலை வகித்து வருகிறது.**
- **ஆடை மற்றும் அணிகலன்கள் ஏற்றுமதியில் 58 விழுக்காடு பங்களிப்புத் தருகிறது.**

- **காலணி ஏற்றுமதியில் 45 விழுக்காடு பங்களிப்பு தருகிறது.**
- **மின்னணு இயந்திரங்கள் மற்றும் மின்னணு சாதனங்களில் 25 விழுக்காடு பங்களிப்பு அளித்து வருவது மிகவும் பெருமைக்குரியது ஆகும்.**

இந்த வெற்றி, ஒவ்வொரு தமிழனின் உழைப்பை உள்ளடக்கிய வெற்றியாகும். இந்த வெற்றியோடு நாம் திருப்தி அடைந்துவிடக் கூடாது. இந்த விழுக்காடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகி வர வேண்டும்!

வேலூர் மற்றும் சுற்றுப்புற மாவட்டங்களிலிருந்து தோல் பொருட்கள், கோயம்புத்தூர் மற்றும் திருப்பூரிலிருந்து ஜவுளி, சென்னையிலிருந்து மோட்டார் வாகனப் பொருட்கள் என்று பரவலான வகையில் சீராக ஏற்றுமதிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பரவலான வளர்ச்சியே பார்போற்றும் வளர்ச்சி, சமச்சீரான வளர்ச்சியே சிறப்பான வளர்ச்சி என்பதை அனைவரும் மனதில் நிறுத்த வேண்டும். உலக வர்த்தகத் தரத்துக்கு ஏற்றவகையில் மதிப்புக் கூட்டுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும். அதன் மூலமாகத்தான் ஏற்றுமதி பெருகும். அதனால்தான் வேலைவாய்ப்பும் பெருகும். இது மாநிலத்துக்கும் வருமானம் ஈட்டித் தரும். இத்தகைய சுழற்சி அடிப்படையில் முன்னேற்றம் அமைய வேண்டும். தமிழ்நாடு என்றாலே மோட்டார் வாகனங்கள், ஜவுளி, ஆடை அணிகலன்கள், தோல் பொருட்கள், காலணிகள் ஆகியவற்றின் தயாரிப்பில் எப்போதும் முன்னேற்றம் இருக்கும். அந்த வரிசையில் மின் வாகனங்கள், மின்சக்திக் கலன்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்னணுவியல், உணவு பதப்படுத்துதல், வான்வெளி மற்றும் பாதுகாப்பு ஆகிய துறைகளும் சேர வேண்டும். அப்படிச் சேர்ந்தால்தான் தமிழ்நாட்டுக்கான ஏற்றுமதித் திறன் கூடுதல் ஆகும். தமிழ்நாட்டின் தனித்தன்மையான பொருட்கள் என்று ஏராளமாக இருக்கிறது. அதற்கு உலகளாவிய மதிப்பும் மரியாதையும் இருக்கிறது.

காஞ்சிபுரம் மற்றும் ஆரணி பட்டுச்சேலைகள், சின்னாளப்பட்டி சுங்குடிச் சேலைகள், கோயம்புத்தூர் கிரைண்டர்கள், தஞ்சாவூர் ஓவியங்கள், தட்டுகள், சுவாமிமலைச் சிற்பங்கள், பவானி ஜமக்காளம், பத்தமடை பாய்கள், மதுரை மல்லி, மாமல்லபுரம் கற்சிற்பங்கள், திண்டுக்கல் பூட்டு, சிறுமலை வாழைப்பழம் எனப் புவிசார் குறியீடு பெற்ற பொருட்களை அடுக்கிக்கொண்டே போகலாம். வெளிநாடுகளில், இந்தப் பொருட்களுக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்பு உள்ளது என்பதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். இதன்மூலம், நமது உற்பத்தியாளர்களும், ஏற்றுமதியின் மூலம் மேன்மை அடைந்திட இயலும். இவற்றை அதிகமாகத் தயாரிக்க வேண்டும். அதே நேரம், அதன் தரம் குறையாதவாறும் தயாரிக்க வேண்டும். ஏற்றுமதித் துறை எந்த விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தில், கொரோனா முழு ஊரடங்கு காலத்திலும், ஏற்றுமதி சார்ந்த நிறுவனங்கள் பணிபுரிவதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்தது. ஏற்றுமதிகள் எந்த விதத்திலும் பாதிக்கப்படாமல் நடைபெற்றது மட்டுமின்றி, தற்போது முழுமையான அளவில் செயல்படத் துவங்கி உள்ளன. இது எங்களுக்கு மிகப்பெரிய மனநிறைவினை அளித்துள்ளது. ஏற்றுமதித் திறனை மேம்படுத்திட, தமிழ்நாடு அரசு பல நடவடிக்கைகள் எடுத்து வருகின்றது.

- இந்நடவடிக்கைகளில் மிகமுக்கியமாக, “தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக்

கொள்கை”யை வெளியிட்டதில், நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

- மாநிலத்திலிருந்து ஏற்றுமதியை மேலும் மேம்படுத்த, தலைமைச் செயலாளர் தலைமையில், மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு (State Export Promotion Committee) ஒன்று அமைக்கப்பட உள்ளது.
- அதே போல், குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு வழிகாட்டும் “குறு, சிறு மற்றும் நடுத்தர ஏற்றுமதி நிறுவனங்களுக்கான கையேட்டினை” வெளியிட்டதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.
- தென் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளித்திட, தூத்துக்குடியில், ஏற்றுமதியை மையமாகக் கொண்ட “சர்வதேச அறைகலன் பூங்கா” (International Furniture Park) ஒன்று, இந்தியாவிலேயே முதன்முறையாகத் தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டு வருகிறது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான ஏற்றுமதித் திட்டங்களைக் கண்காணிக்க ஒரு பிரத்தியேக அமைப்பு (Project Monitoring Unit) ஏற்படுத்தப்பட்டுள்ளது.
- ஏற்றுமதிகள் தொடர்பான இடர்பாடுகள் களைதல், அனுமதிகள் பெற்றுத் தருதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள வழிகாட்டி நிறுவனத்தில், ஏற்றுமதி அமைப்பு (Export Cell) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
- ஏற்றுமதியாளர்களுக்குத் தேவையான உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பு வசதிகளுடன், மாநல்லூரில் 6,000 ஏக்கர் பரப்பளவிலும், தூத்துக்குடியில் 5,000 ஏக்கர் பரப்பளவிலும் சிப்காட் நிறுவனம் மூலம் இரண்டு பொருளாதார வேலைவாய்ப்புப் பகுதிகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.
- திருப்பூர், கரூர், மதுரை, ஆம்பூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, காஞ்சிபுரம், சென்னை, கோவை, ஒசூர் ஆகிய பத்து ஏற்றுமதி மையங்கள் மேம்படுத்தப்பட உள்ளன.
- ஏற்றுமதியாளர்கள் மதிப்புக் கூட்டல் பொருட்களை உற்பத்தி செய்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, தொகுப்புச் சலுகைகள் வழங்க ஒரு திட்டம் வடிவமைக்கப்படும்.
- ஒவ்வொரு மாவட்டத்திலும் தனித்துவம் வாய்ந்த பல பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவற்றை உலக அளவில் சந்தைப்படுத்த, ஒவ்வொரு மாவட்டத்திலும் “மாவட்ட ஏற்றுமதி மையங்கள்” உருவாக்கப்பட்டு வருகின்றன.
- தமிழ்நாடு அரசு, தோல் தொழில் துறைக்கு மிகப்பெரிய அளவில் முக்கியத்துவமும், ஆதரவும் அளித்து வருகிறது. தமிழ்நாட்டில், ரூ.406.06 கோடி முதலீட்டில் மேற்கொள்ளப்படும் 10 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் மேம்பாட்டுத் திட்டத்திற்காக, 15 விழுக்காடு மானியம் என்ற அளவில் ரூ.60.91 கோடி மானியம் வழங்கிட, தமிழ்நாடு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.
- பருத்தி, பஞ்சு மற்றும் கழிவுப் பஞ்சு மீது விதிக்கப்படும் 1% சந்தை நுழைவு வரியை நீக்க வேண்டும் என நெசவாளர்கள், தொழில்முனைவோர், நூற்பாலைகள், பஞ்சு உற்பத்தியாளர்கள், வியாபாரிகள் ஆகியோர்

பல ஆண்டுகளாகக் கோரிக்கை வைத்து வந்தனர். இந்த 1% சந்தை நுழைவு வரியை நாங்கள் தற்போது நீக்கி உள்ளோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். இதன் விளைவாக, இந்தியப் பருத்தி கார்ப்பரேஷன், தற்போது சேலம், மதுரை, கோயம்புத்தூர் மற்றும் விருதுநகர் ஆகிய இடங்களில் பஞ்சுக் கிடங்குகள் அமைத்திட முன்வந்துள்ளதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

- டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சி மற்றும் சேவைகளின் மூலமாக, உலக வர்த்தகம் முன்னெப்போதையும் விட, பன்மடங்குப் பெருகி வருகின்றது. இது நம் ஏற்றுமதியாளர்களுக்கு ஒரு மிகப் பெரிய வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளது. இதனைக் கருத்தில்கொண்டு, தமிழ்நாடு அரசின் M-TIPB நிறுவனம், Flipkart நிறுவனத்துடன் ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டு உள்ளது.
- காவேரி டெல்டா பகுதியில் வேளாண் வளர்ச்சியை ஊக்குவிக்கத் திருச்சி – நாகப்பட்டினம் மாவட்டத்திற்கு இடையேயான பகுதி வேளாண் தொழிற்சாலைகளுக்கான பெருவழித்தடமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.
- தேனி, மணப்பாறை மற்றும் திண்டிவனம் ஆகிய 3 இடங்களில் உணவுப் பூங்காக்கள் ஏற்படுத்தப்பட உள்ளன.
- "வேளாண் ஏற்றுமதி சேவை மையமும்" உருவாக்கத் தமிழ்நாடு அரசு திட்டமிட்டுள்ளது.

இவை அனைத்தையும் செயல்படுத்தும்போது தமிழ்நாடு அடையும் வளர்ச்சி என்பது இந்தியாவிலேயே சிறந்ததாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

தமிழ்நாடு கொண்டிருக்கும் பன்முகத் திறன்கள் மற்றும் வளங்களைக் கணக்கிட்டுப் பார்த்தால், நமது திறனுக்கேற்றவாறு, ஏற்றுமதியில் இன்னும் பலமடங்கு வளர்ச்சிபெற இயலும். பெரும்பாலான பொருட்கள் சில குறிப்பிட்ட நாடுகளுக்கு மட்டுமே ஏற்றுமதிகள் செய்யப்படுகின்றன. இந்நாடுகளுக்கு

மட்டுமின்றி "உலகத்தின் மூலை முடுக்குகளில் எல்லாம், "Made in India" என்று நாம் சொல்கிறோம், அதுபோல "Made in Tamil Nadu" என்ற குரல் ஒலிக்கவேண்டும் என்பது எங்கள் ஆசை மட்டுமல்ல, இலட்சியமும் கூட. அந்த இலட்சியத்தை நோக்கியே எங்களின் பயணம் அமைந்திடும்".

2030ஆம் ஆண்டிற்குள் 1 டிரில்லியன் அமெரிக்க டாலர் பொருளாதாரத்தைத் தமிழ்நாடு அடைந்திட வேண்டும் என்ற இலக்கினை நாங்கள் நிருணயித்துள்ளோம். இதை அடைய வேண்டுமெனில், தற்போது 26 பில்லியன் அமெரிக்க டாலராக இருக்கும் மாநிலத்தின் ஏற்றுமதியை, 2030ஆம் ஆண்டிற்குள் 100 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்த்திட வேண்டும். உலக வர்த்தக வரைபடத்தில், தமிழ்நாடு மிகப்பெரும் வளர்ச்சி பெறுவதை ஒரு சவாலாக நாங்கள் எடுத்துக்கொண்டு அல்லும் பகலும் உழைத்து வருகின்றோம், இந்த இலட்சியத்தினை அடைவதற்கு, பொது மற்றும் தனியார்த் துறைகளில் உள்ள நிறுவனங்கள் ஒன்றிணைந்து பணியாற்ற வேண்டும் என உங்கள் அனைவருக்கும் நான் வேண்டுகோள் விடுக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

நமது பொருட்களை உலகம் முழுவதும் கொண்டு செல்வோம்!

உலக நாடுகளைத் தமிழகம் நோக்கி வர வைப்போம்!

ஏற்றுமதியில் ஏற்றம் காண்போம்!

முன்னேற்றப் பாதையிலேயே எப்போதும் நடப்போம்!

ஏழை, எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.09.2021 அன்று சேலம் மாவட்டம், வாழப்பாடி, அரசினர் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஏழை, எளியோர் வாழும் இடத்திலேயே சிறப்பு மருத்துவச் சேவை அளிக்கும் "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டத்தைத்" தொடங்கிவைத்தார். மேலும், இத்திட்டத்தின்கீழ், 1,250 மருத்துவ முகாம்களைத் தொடங்கிவைத்து, பல்வேறு திட்டங்களின்கீழ்ப் பயனாளிகளுக்கு ரூ.24.74 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் 2021–2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்" ஆண்டுக்கு 1,000 சிறப்பு முகாம்கள் மூலம் மீண்டும் புதுப்பொலிவுடன் செயல்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

ஏழை, எளிய மக்கள் தங்களுக்கு நோய் ஏற்பட்டு, அதனைச் சரி செய்வதற்காக மட்டுமே மருத்துவர்களையும், அரசு ஆரம்பச் சுகாதார நிலையங்களையும் நாடிச் செல்கின்றனர். நோய்கள் வருமுன் அதனைத் தடுக்கும் அணுகுமுறை குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி, ஆரோக்கியத்துடன் வாழவேண்டும் என்ற சிந்தனையை உருவாக்கிட, "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்" பயன்படும். இத்திட்டத்தின் மூலம், தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கிராமங்கள், பேரூராட்சிகள், நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளில் உள்ள மக்கள் அனைவரும் மருத்துவச் சிகிச்சை பெற்றுப் பயனடைவார்கள்.

பொதுமக்கள் அனைவருக்கும் மருத்துவ பரிசோதனை மற்றும் சிறப்பு மருத்துவச் சிகிச்சை எளிதில் கிடைக்கச் செய்தல், நோய்களுக்கான பரிசோதனை மற்றும் உடல்நலம் குறித்த ஆலோசனை வழங்குதல், அதிநவீன பரிசோதனை சாதனங்களால் நோய்களைக் கண்டறிதல், நோய் கண்டவர்களுக்கு உடனடிச் சிகிச்சை அளித்தல், சுகாதார விழிப்புணர்வுக் கல்வி வாயிலாக உடல்நல மேம்பாடு மற்றும் தனிநபர் ஆரோக்கியத்தை உருவாக்குதல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு "கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம்" செயல்படும்.

இத்திட்டத்தின்மூலம், ஆண்டுக்கு 1,250 சிறப்பு முகாம்கள் நடத்தப்படும். இம்முகாம்களில் பன்முனை மருத்துவப் பரிசோதனை, கண், பல், காது, மூக்கு, தொண்டை, வயிறு சம்பந்தப்பட்ட நோய்கள், நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம், காசநோய், மூட்டு மற்றும் எலும்பு சம்பந்தமான நோய்கள், இருதய நோய்கள், சிறுநீரக கோளாறு, குழந்தை நலச் சிறப்பு மருத்துவம், மனநல மருத்துவம், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பெண்களுக்கான சிறப்பு மருத்துவம், புற்றுநோய் மருத்துவம் போன்ற சிகிச்சைகள் அளிக்கப்படும்.

ஒவ்வொரு மாதமும், வருமுன் காப்போம் மருத்துவ முகாம்கள் நடத்த வேண்டிய இடங்களைத் தேர்வு செய்து, எந்தெந்த நாட்களில், எந்தெந்த மருத்துவக்குழு, எந்தெந்த இடங்களுக்குச் செல்ல வேண்டும் என்பதை முன்கூட்டியே முடிவுசெய்து முகாம்கள் நடத்தப்படும்.

போக்குவரத்து வசதி அதிகமில்லாத இடங்களிலும் முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு முகாமின்போதும் நல்வாழ்வு பற்றிய கண்காட்சி, கிராமப்புற மக்கள் எளிதில் புரிந்துகொள்ளும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்படும்.

மருத்துவப் பரிசோதனைக்குப் பின்னர் முகாமிலேயே சிகிச்சையும், இலவசமாக மருந்துகளும் வழங்கப்படும். தொடர் சிகிச்சை தேவைப்படின், நோயின் தன்மையைப் பொருத்து எந்த மருத்துவமனைக்குச் சிகிச்சை பெறச் செல்ல வேண்டும் என்ற விபரங்களுடன் அடையாள அட்டைகள் வழங்கப்படும். தொடர் சிகிச்சை பெற வேண்டியவர்களுக்குத் தேவைப்படும் விவரங்கள் அனைத்தும் மாவட்ட அளவில் முகாம் வாரியாக கணினியில் பதியப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இத்திட்ட முகாம்கள் சிறப்பான முறையில் நடைபெறுவதற்குப் பொதுச் சுகாதாரம், மருத்துவக் கல்வி, மருத்துவம் மற்றும் ஊரகநலப் பணிகள், குடும்ப நலம், இந்திய மருத்துவம், தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டுக்

கழகம், கண்பார்வை இழப்புத் தடுப்பு நிறுவனம், தமிழ்நாடு மருத்துவ சேவைக் கழகம், சமூக நலத்துறை, கல்வித்துறை, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகராட்சி நிருவாகத்துறை போன்ற அனைத்துத் துறைகளும் இணைந்து செயல்படும்.

சிறப்பு முகாம் தொடக்க நிகழ்ச்சியில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் வருமுன் காப்போம் திட்டத்தின்கீழ் பயனாளிகளுக்கு அடையாள அட்டைகள், 100 சதவிகிதம் கொரோனா தடுப்பூசி செலுத்தும் இலக்கை அடைந்த ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு நற்சான்றிதழ்கள், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில் கொரோனா நோய்த் தொற்றால் பெற்றோரை இழந்த 54 குழந்தைகளுக்கு ரூ.1.62 கோடி நிவாரண நிதி, கூட்டுறவுத்துறையின் சார்பில் ரூ.10.20 கோடி மதிப்பில் 21 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மூலம் 618 உறுப்பினர்களுக்குப் பயிர்க்கடன், சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி மற்றும் 6 தொடக்க வேளாண்மைக் கடன் சங்கங்கள் மூலம் 115 குழுக்களில் உள்ள 1,443 உறுப்பினர்களுக்குச் சுயஉதவிக் குழு கடனுதவிகள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் பொருளாதாரக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ், 117 சுயஉதவிக் குழுக்களுக்கு ரூ.11.025 கோடி மதிப்பிலான பொருளாதாரக் கடனுதவிகள், பள்ளிக் கல்வித் துறையின் சார்பில் கல்விக் கடன் வழங்கும் திட்டத்தின்கீழ், 14 உயர்கல்விப் பயிலும் மாணவர்களுக்கு ரூ.1.91 கோடி மதிப்பிலான கல்விக் கடனுதவிகள் என மொத்தம் ரூ.24.74 கோடி மதிப்பிலான கடனுதவிகளைப் பயனாளிகளுக்கு வழங்கினார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.09.2021 அன்று சேலம் மாவட்டம் சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு தருமபுரி மாவட்டத்திற்குச் செல்லும் வழியில் அதியமான்கோட்டை பி2 காவல் நிலையத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டு வழக்குகளின் பதிவேடுகள், பொதுமக்களின் புகார்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார்கள்.

தருமபுரியில் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில்

ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 30.09.2021 அன்று தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை பராமரிப்பு மையக் கட்டடத்தைத் திறந்துவைத்தார். மேலும், பள்ளிக்கல்வித் துறை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஆகிய துறைகளின் சார்பில் ரூ.17.44 கோடி மதிப்பீட்டிலான 11 முடிவுற்ற திட்டப் பணிகளைத் திறந்துவைத்தார்.

தருமபுரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ரூ.10 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை பராமரிப்பு மையக் கட்டடம் (CEmONC) கீழ்த்தளம் மற்றும் நான்கு தளங்களாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் கீழ்த்தளத்தில், அவசர ஊர்தி மற்றும் நான்கு சக்கர வாகனம் நிறுத்துமிடம், ஆக்சிஜன் கட்டுப்பாட்டு அறை, பார்வையாளர்கள் காத்திருப்புப் பகுதி, மருந்தகம் மற்றும் மின் அறை ஆகியவைகளும், தரைத்தளத்தில் அவசரச் சிகிச்சைப் பிரிவு, பிரசவப் பிரிவுகள், காத்திருப்பு அறையும், முதல் தளத்தில் அறுவை அரங்குகள், தீவிர சிகிச்சைப் பிரிவு மற்றும் பிரசவத்திற்குப் பின் கவனிப்புப் பிரிவும், இரண்டாம் தளத்தில் பச்சிளம் குழந்தைகள் தீவிர சிகிச்சைப் பிரிவும், மூன்றாம் தளத்தில் பிரசவத்திற்குப் பின் கவனிப்பு பிரிவுகள் மற்றும் தனிமைப்படுத்தப்பட்ட பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது.

இம்மையத்தில் சிகிச்சை பெற ஏதுவாகத் தரைத்தளத்தில் 33 படுக்கைகளும், முதல் தளத்தில் 22 படுக்கைகளும், இரண்டாம் தளத்தில் பச்சிளம் குழந்தைகளுக்கான 95 படுக்கைகளும், மூன்றாம் தளத்தில் 50 படுக்கைகளும், என மொத்தம் 200 படுக்கை வசதிகள் உள்ளன. இதன்மூலம் கர்ப்பிணித் தாய்மார்களுக்கும், பச்சிளம் குழந்தைகளுக்கும் தரமான முறையில் உயர்தரச் சிகிச்சை வழங்கிட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

தருமபுரி மாவட்டத்தில் பள்ளிக் கல்வித்துறையின் சார்பில் பாலக்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 5 வகுப்பறைக் கட்டடம்; பாலக்கோடு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.91 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடம், 2 பெண்கள் கழிவறைக் கட்டடம், குடிநீர் வசதி மற்றும் சுற்றுச் சுவர்; ஏரியூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடம், 1 அறிவியல் ஆய்வகம், 2 ஆண்கள் மற்றும் 2 பெண்கள் கழிவறைக் கட்டடம் மற்றும் குடிநீர் வசதிகள்; மாரண்ட அள்ளி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ரூ.2.72 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 வகுப்பறைக் கட்டடம், 1 அறிவியல் ஆய்வகம், 2 ஆண்கள் கழிவறைக் கட்டடம், குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுச் சுவர்;

இராமகொண்ட அள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.1.34 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 4 வகுப்பறைக் கட்டடம், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான கழிவறை, குடிநீர் வசதிகள் மற்றும் சுற்றுச் சுவர்; ஏலகிரி அரசு மேல்நிலைப் பள்ளியில் ரூ.2.90 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 16 வகுப்பறைக் கட்டடம், 1 அறிவியல் ஆய்வகம், 4 கழிவறைக் கட்டடம் மற்றும் குடிநீர் வசதிகள், கன்னுகாரம்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.1.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பள்ளிக் கட்டடம்;

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையின் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் சார்பில் ஏ.ரெட்டி அள்ளியில் ரூ.2.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாவட்டச் சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகக் கட்டடம்; கால்நடைப் பராமரிப்புத் துறையின் சார்பில் முருக்கம்பட்டியில் ரூ.34 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக்கட்டடம்;வேளாண்மைமற்றும்உழவர்நலத்துறையின் சார்பில் நல்லம்பள்ளியில் ரூ.2.20 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையக் கட்டடம்; ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் காரிமங்கலத்தில் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள அரசு ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்;

என மொத்தம், ரூ.17.44 கோடி மதிப்பீட்டிலான 11 முடிவுற்ற திட்டப் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்தார்.

அதனைத் தொடர்ந்து, 100 சதவிகித கொரோனா தடுப்பூசி செலுத்தியதற்காகக் கிருஷ்ணாபுரம், நல்லாசேனஹள்ளி, வெள்ளோலை, கே. நடுஹள்ளி, கடகத்தூர், பூகானஹள்ளி, பொம்மஹள்ளி ஆகிய ஊராட்சி மன்றத் தலைவர்கள் மற்றும் கிராமச் சுகாதாரச் செவிலியர்களுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நற்சான்றிதழ்களை வழங்கினார். மேலும், கர்ப்பிணித் தாய்மார்களுக்கு மகப்பேறு ஊட்டச்சத்துப் பெட்டகத்தையும் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
30.09.2021 அன்று தருமபுரி மாவட்டம் பென்னாகரம்
அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் திடீர் ஆய்வு
மேற்கொண்டபோது விஜய் என்ற விடுதி மாணவனின்
பிறந்த நாளை அறிந்து தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அக்டோபர் : 1 நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பிறந்த நாள் விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 01.10.2021 அன்று, நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் 94ஆவது பிறந்தநாளை முன்னிட்டு சென்னை, அடையாறு, சிவாஜி கணேசன் மணிமண்டபத்தில் உள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் வாழ்க்கை வரலாறு குறித்த மடிப்பேடுகள் வெளியீடு

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் வாழ்வின் முக்கிய நிகழ்வுகள் குறித்த புகைப்படக் கண்காட்சி

சிங்காரச் சென்னை 2.0

தூய்மைப் பணிகளுக்காக ரூ.36.52 கோடியில் பேட்டரியால் இயங்கும் 1,684 மூன்று சக்கர வாகனங்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 07.09.2021 அன்று பெருநகர சென்னை மாநகராட்சியின் ரிப்பன் கட்டட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ரூ.36.52 கோடி மதிப்பிலான 1,684 பேட்டரியால் இயங்கும் மூன்று சக்கர வாகனங்களையும், 15 காம்பாக்டர் வாகனங்களையும் கொடியசைத்துத் தொடங்கிவைத்து, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியின்போது உயிரிழந்த 195 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 20 வாரிசுதாரர்களுக்குப் பணிநியமன ஆணைகளை வழங்கி உரையாற்றினார்.

“உங்கள் அனைவருக்கும் என் அன்பான மாலை வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த ரிப்பன் கட்டடத்தில் நுழையும் போது என்னுடைய நினைவு 1996ஆம் ஆண்டிற்குச் சென்றுவிட்டது. 1996ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சிக்கு நடைபெற்ற தேர்தலில் மேயராக என்னைத் தேர்ந்தெடுத்து, அந்தப் பணியாற்றுவதற்குச் சென்னை மாநகர மக்கள் எனக்கு உத்தரவிட்டார்கள். நான் அந்த உத்தரவை ஏற்றுக்கொண்டு, மேயர் என்றால் பெரிய அங்கி மற்றும் 100 பவுன் செயின் அணிந்துகொண்டு, செவர்லெட் காரில் செல்வதுதான் பணியாக இருந்தது.

அவற்றை அணிந்துகொண்டு நிகழ்ச்சிகளுக்குச் செல்வது, விழாக்களுக்குச் செல்வது, வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் செல்வது, இதுதான் மேயருடைய பணியாக இருந்தது. அதை நான் மாற்றி மக்கள் பணியாற்றுவதுதான் மேயருடைய பணி என அந்தக் கடமையைச் செய்தேன்.

இந்தச் சாலை வழியாகச் செல்லும்போதெல்லாம், இந்த ரிப்பன் கட்டடத்தைப் பார்த்துக்கொண்டுதான் செல்வேன். நான் 1996ஆம் ஆண்டு வெற்றி பெற்று மேயராகப் பொறுப்பேற்பதற்காக ஒரு நிகழ்ச்சியை இதே கட்டடத்தில் நடத்தினோம். அதற்கு அழைப்பிதழைத் தயாரித்து தலைவர் கலைஞர் அவர்களிடத்திலே கொண்டுசென்றோம். அந்த அழைப்பிதழைத் தலைவர் கலைஞர் அவர்கள் உற்று உற்றுப் பார்த்துக்கொண்டு இருந்தார். முதல் பக்கத்தில் தலைவர் கலைஞர் அவர்கள் எனக்குப் பொன்னாடை அணிவித்தது போன்ற ஒரு புகைப்படம். கடைசி பக்கத்தில் ரிப்பன் கட்டடத்தின் தோற்றம். அதைப் பார்த்துக்கொண்டே இருந்தார்.

1996ஆம் ஆண்டில் வெற்றி பெற்று நாம் ஆட்சிக்கு வந்தபோது, என்னை அமைச்சராக்க வேண்டும் என்று எல்லோரும் தலைவரிடத்திலே சொன்னார்கள். தலைவர் கலைஞர் அவர்கள்

என்னை அமைச்சர் ஆக்கவில்லை. நானும் அந்த நேரத்தில் அதை விரும்பவில்லை. ஆனால் நம்முடைய தோழர்கள் சென்று கட்டாயப்படுத்தினார்கள். தலைவர் கலைஞர் அவர்கள் முடியாது என்று கூறி மறுத்துவிட்டார்கள். ஆனால் அதற்குப் பிறகு நடைபெற்ற உள்ளாட்சித் தேர்தலில் சென்னை மேயர் பொறுப்புக்கு நான் போட்டியிட்டு, மக்களுடைய வாக்குகளைப் பெற்று, மக்கள் வாக்கைப் பெற்று மேயராகக்கூடிய முதல் மேயராக நான் அன்றைக்குப் பொறுப்பேற்றேன். அந்தக் கட்டடத்தைப் பார்த்துத் தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னார், எல்லோரும் சேர்ந்து சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையில் உள்ள சின்ன அறையில் உன்னை உட்கார வைக்கப் பார்த்தார்கள். ஆனால் நான் உன்னை இந்தப் பெரிய கட்டடத்தில் உட்கார வைத்திருக்கிறேன் என்று தலைவர் கலைஞர் அவர்கள் பெருமையாகச் சொன்னார். இந்த ரிப்பன் மாளிகை வரலாற்றுச் சிறப்புமிக்க கட்டடம் என்று உங்களுக்கு எல்லாம் தெரியும்.

இப்போது சட்டமன்றக் கூட்டத்தொடர் நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. 13ஆம் தேதிதான் முடிவடைய இருக்கிறது. எப்போதும் சட்டமன்றக் கூட்டத் தொடர் நடைபெறும்போது எந்த நிகழ்ச்சிக்கும் நான் ஒப்புக் கொள்வது இல்லை. ஏனென்றால் சட்டமன்றப் பணிகளைக் கவனிக்க வேண்டும் என்பதால் அமைச்சராக இருக்கும்போதும் சரி, அதேதான் நான் செய்துகொண்டு இருந்தேன். ஆனால் நேரு அவர்கள் சட்டமன்றக் கூட்டத்தொடர் நடக்கும்போதே இந்த நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்து, வர வேண்டியது, கொடியசைத்துப் போக வேண்டியது என்று கூறி என்னை அழைத்து வந்தார். ஆனால் இங்கு வந்து பார்க்கும்போதுதான், ஒரு நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து, மேடை அமைத்து, பேசவும் வைத்திருக்கிறார்.

எப்போதும் நேரு அவர்கள் மிகவும் வேகமாக இருப்பார். அதனால் அந்த நகராட்சி நிருவாகத்தை நேரு அவர்களிடம் நாங்கள் ஒப்படைத்திருக்கிறோம். நான் இருந்த பொறுப்பு, இன்றைக்கு அவர் ஏற்றுக்கொண்டு இருக்கிறார்.

1,684 வாகனங்கள் தயார் செய்யப்பட்டு இருக்கிறது. அதில் 300 வாகனங்களை தொடங்கி வைக்கக்கூடிய ஒரு சிறப்பான நிகழ்ச்சியை ஏற்பாடு செய்து நடத்திக்கொண்டு இருக்கிறீர்கள். அதேபோன்று, கருணை அடிப்படையில் 195 வாரிசுதாரர்களுக்குப் பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டு இருக்கிறது.

நான் பொறுப்பேற்றபோது சென்னையைச் சிங்காரச் சென்னையாக மாற்றுவேன் என்ற வாசகத்தைச் சொல்லி அப்பணியில் நாங்கள் ஈடுபட்டோம். இப்போது சிங்காரச் சென்னை மட்டுமல்ல, சென்னை 2.0 என்ற வகையிலே பல திட்டங்கள் எல்லாம் தீட்டப்பட்டுக் கொண்டு இருக்கிறது. இந்தச் சென்னை மாநகரைப் பொறுத்தவரை 3 நாடாளுமன்ற உறுப்பினர்கள், 22 சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த மாநகராட்சிக்கு உட்பட்டு இருக்கிறார்கள். இந்த 22 சட்டமன்ற உறுப்பினர்களையும், 3 நாடாளுமன்ற உறுப்பினர்களையும், அதைப்போல அமைச்சராகப் பொறுப்பேற்றுக்கொண்டு இருக்கிற நேரு அவர்களையும், அதிகாரிகளாகப் பொறுப்பேற்று இருக்கக்கூடிய நமது சிறப்பிற்குரிய அதிகாரிகளையும், நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புவது, டெல்லி, மும்பை, கொல்கொத்தா என்று சொல்லக்கூடிய அந்த வரிசைப் பட்டியலில் சென்னையும் இருக்கிறது. சென்னைக்குப் பெருமை சேர்க்கக்கூடிய வகையிலே ஏற்கெனவே உள்ளாட்சித் துறையினுடைய மானியத்தில், நகராட்சி நிருவாகத் துறை மானியத்தில் அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் பதிலளித்துப் பேசுகின்றபோது அங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல சென்னையில் இருக்கக்கூடிய மக்களுக்கும் பல அறிவிப்புகளை வெளியிட்டு இருக்கிறார்கள். இவையெல்லாம் உடனடியாக நிறைவேற்றுகிற அந்த முயற்சியிலே ஈடுபட வேண்டும் என்று நான் அவர்களை எல்லாம் அன்போடு கேட்டுக்கொண்டு, இந்த சிறப்பான நிகழ்ச்சியிலே பங்கேற்று உங்கள் அனைவரையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றமைக்கு என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை வணக்கத்தைத் தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்”.

“பனை மேம்பாட்டுத் திட்டம்”

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 17.09.2021 அன்று தலைமைச் செயலகத்தில் தொடங்கிவைத்தார்.

தமிழ்நாட்டில் பனைமரங்களின் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்து வருவதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசு தற்போதுள்ள பனை மரங்களைப் பாதுகாப்பதுடன், கூடுதலாகப் பனை மரங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக, நடப்பாண்டு 30 மாவட்டங்களில், 76 இலட்சம் பனை விதைகளையும், ஒரு இலட்சம் பனங்கன்றுகளையும் முழு மானியத்தில் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று 2021–2022ஆம் ஆண்டு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் தனி நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டது. இந்தப் பனை மேம்பாட்டு இயக்கத்திற்கு ரூ.3 கோடி நிதி ஒதுக்கீடும் செய்யப்பட்டுள்ளது.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் ஒரு இலட்சம் பனை விதைகளை வழங்குவதாக வேளாண் நிதிநிலை அறிக்கையின்போது உறுதி அளித்தார். அதன்படி, மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. மு. அப்பாவு அவர்கள் ஒரு இலட்சம் பனை விதைகளை வேளாண் துறைக்கு வழங்குவதைக் குறிக்கும் விதமாகப் பனை விதைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வழங்கினார். வழங்கப்பட்ட ஒரு இலட்சம் பனை விதைகளை ஏரிக்கரை, சாலையோரம் மற்றும் விவசாய நிலங்களில் நடவு செய்யும் பனை மேம்பாட்டுத் திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கிவைத்தார்.

ஒரு இலட்சம் விவசாயிகளுக்கு
புதிய மின் இணைப்புகள் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. ***மு.க. ஸ்டாலின்*** *அவர்கள் 23.09.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகக் கூட்ட அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் சார்பில் விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்கும் திட்டத்தைத் துவக்கிவைத்து, 10 விவசாயிகளுக்குப் புதிய மின் இணைப்புகளுக்கான ஆணைகளை வழங்கினார்.*

எரிசக்தித் துறையின் 2021–2022ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் மாநிலத்தின் விவசாய உற்பத்தியினைப் பெருக்கி, விவசாயிகளின் நலனை மேம்படுத்தும் நோக்குடன் ஒரு இலட்சம் புதிய விவசாய மின் இணைப்புகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அதன்படி, தமிழ்நாட்டிலேயே முதன்முறையாக இதுவரையிலும் இல்லாத அதிகபட்ச அளவாக இந்த ஆண்டு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்புகள் வழங்க முடிவெடுக்கப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் ரூ.3,025 கோடியில் மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்பட உள்ளது.

விவசாயிகளுக்கு ஒரு இலட்சம் விவசாய மின் இணைப்பு ஆணைகளை வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:

“தமிழ்நாடு மின்சார வாரியம், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகம், மின் தொடரமைப்புக் கழகம் ஆகியவற்றின் சார்பில் ஒரு இலட்சம் உழவர்களுக்குப் புதிய மின் இணைப்பு ஆணை வழங்கும் இந்த சிறப்பான விழாவில் நானும் பங்கேற்கக் கூடிய நல்லதொரு வாய்ப்பை எனக்கு உருவாக்கித் தந்த அமைச்சர் அவர்களுக்கும், அதிகாரிகளுக்கும் முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுவும் இந்த நிகழ்ச்சி பேரறிஞர் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் அரங்கத்தில் நடைபெறுவது எனக்கு இன்னும் மகிழ்ச்சியாக இருக்கிறது. காரணம் ‘ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்’ என்று சொன்னவர் பேரறிஞர் பெருந்தகை அறிஞர் அண்ணா அவர்கள்.

இலட்சக்கணக்கான உழவர்களின் முகத்தில் மலர்ச்சியை உருவாக்கக் கூடிய வகையில் ஒரு திட்டமாக, இந்தத் திட்டம் அமைந்துள்ளது. இத்திட்டத்தை விழா நடத்தி நடைபெறக்கூடிய வகையிலே இந்த நிகழ்ச்சி அமைந்திருக்கிறது.

மே மாதம் 7ஆம் நாள் நான் தமிழ்நாட்டின் முதலமைச்சராக பதவியேற்றேன் என்று சொல்ல மாட்டேன், பொறுப்பை ஏற்றேன், அதுதான் சரியாக இருக்கும். அன்று முதல் இன்று வரை நாள்தோறும் ஏராளமான திட்டங்கள் அரசின் சார்பில் அறிவிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறது. அப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்கள் மக்களுடைய பயன்பாட்டிற்குப் போகக்கூடிய வகையிலே இருக்க வேண்டும் என்பதுதான் அரசினுடைய திட்டமாக இருக்கிறது.

அமைச்சரவையில் இருக்கக்கூடிய அனைத்து அமைச்சர்களும் போட்டிப் போட்டுக்கொண்டு செயல்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் கேட்கக்கூடிய தேதியை கூட இப்போது என்னால் உடனடியாக வழங்க முடியாத ஒரு

சூழ்நிலை இப்போது ஏற்பட்டு இருக்கிறது. ஏராளமான திட்டங்களைத் தொடங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அப்படித் தொடங்கக்கூடிய அமைச்சர்களில் வழக்கம்போல மாண்புமிகு செந்தில் பாலாஜி அவர்கள் வேகமாக முந்திக்கொண்டு தேதியை வாங்கி இந்தத் திட்டத்தைத் தொடங்கிவிட்டார். அதற்காக அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள திரு.செந்தில் பாலாஜி அவர்களை மனதார பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன்.

சில திட்டங்கள் அந்த நேரத்துக்குத் தேவையானதாக இருக்கும். சில திட்டங்கள் சில ஆண்டுகளுக்குத் தேவையானதாக இருக்கும். சில திட்டங்கள்தான் தலைமுறை தலைமுறைக்குப் பயனுள்ளதாக இருக்கும். அந்த வரிசையில் தலைமுறை தலைமுறைக்குப் பயனுள்ளதான திட்டம்தான், இங்கே தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது. ஒரு இலட்சம் மின் இணைப்புகள் வழங்கும் திட்டமாக இது தொடங்கி வைக்கப்பட்டு இருக்கிறது.

அதிலும் குறிப்பாக, உழவர்கள் பயன்பெறுவதால், தங்களுக்கு மட்டுமல்ல, இந்த மாநிலத்து மக்களுக்கே உணவுப் பொருட்களை உற்பத்தி செய்து தரப் போகிறார்கள். அத்தகைய மகத்தான திட்டம்தான் இந்தத் திட்டம்.

கடந்த 2006–2011 திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்காலத்தில், எனக்கு முன்னால் பேசிய அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, 2,09,910 பேருக்கு புதிய மின் இணைப்புகள் தரப்பட்டது. ஆனால், 2011–2016ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 82,987 பேருக்கும், அதைத் தொடர்ந்து 2016–2021ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் 1,38,592 பேருக்கும்தான் புதிய இணைப்புகள் தரப்பட்டன. அ.தி.மு.க. ஆட்சிக்கும், தி.மு.க. ஆட்சிக்குமான வேறுபாடு என்பது இதுதான்!

பத்தாண்டுக் காலத்தில் சுமார் 2 இலட்சம் இணைப்புகள்தான் அ.தி.மு.க. ஆட்சியில் தரப்பட்டன. ஆனால் நாம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த நான்கு மாத காலத்தில் ஒரு இலட்சம் இணைப்புகளை நாம் கொடுக்கப் போகிறோம். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டும் என்றால், இதைவிட வேகமான ஆட்சி இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் கிடையாது.

தி.மு.க. ஆட்சி என்பதே உழவர்களின் ஆட்சியாக, வேளாண்மைப் புரட்சி செய்யும் ஆட்சியாகத்தான் எப்போதும் இருந்துள்ளது. இந்த மண்ணையும் மக்களையும் காப்பதில் யாருக்கும் சளைக்காதவர்கள் தான் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் என்பதை நீங்கள் மறந்துவிடக்கூடாது.

இதற்கு ஒரு எடுத்துக்காட்டு; சில நாட்களுக்கு முன்னால், விவசாயச் சங்கப் பிரதிநிதி குறிப்பிட்டுச் சொன்னார், மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகத் துணிச்சலாக, ஒன்றிய அரசின் மீது பயம் கொண்டு அல்ல, ஒன்றிய அரசை எச்சரிக்கக்கூடிய வகையிலே அந்தச் சட்டத்தைத் திரும்பப் பெறவேண்டும் என்று நாம் சட்டமன்றத்திலே தீர்மானமாக நிறைவேற்றி இருக்கிறோம். இதை உழவர் பெருங்குடி பெருமக்கள் நிச்சயம் மறக்க மாட்டீர்கள்.

காவிரி நதிநீர்ப் பங்கீடு போன்ற பெரிய பிரச்சினையாக இருந்தாலும், வேளாண் மக்களின் சிறு கோரிக்கையாக இருந்தாலும், அதற்கு உடனடியாகச் செவி மடுத்து அதனை நிறைவேற்றித் தரக்கூடிய ஆட்சிதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி.

'நான் பிறந்தபோதுதான் காவிரி ஒப்பந்தமும் உருவானது' என்று தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்லி இருக்கிறார். அந்தக் காவிரி பிரச்சினையைத் தீர்ப்பதற்காக முழு முயற்சி எடுத்தவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள்.

காவிரி நடுவர் மன்றம் அமைக்க வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றத்தில் முதன்முதலில் தீர்மானமும் நிறைவேற்றினார்கள். உச்சநீதிமன்றத்தில் காவிரி பிரச்சினை தொடர்பான வழக்கையும் போட்டார்கள்.

அன்றைக்குப் பிரதமராக இருந்த வி.பி.சிங் அவர்களிடம் வலியுறுத்தி காவிரி நடுவர் மன்றத்தை 1990ஆம் ஆண்டு அமைக்க வைத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். இறுதித் தீர்ப்புக்கு முன்னால் இடைக்காலத் தீர்ப்பைப் பெற்றவர் நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்.

பிரதமர் வாஜ்பாய் அவர்களை வலியுறுத்தி 1998ஆம் ஆண்டு காவிரி கண்காணிப்பு ஆணையம் அமைக்கக் காரணமாக இருந்தவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர்!

காவிரி இறுதித் தீர்ப்பும் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான், 2007ஆம் ஆண்டு கொண்டுவந்தது. 192 டி.எம்.சி. மட்டுமே என்றுதான் தீர்ப்பு வந்தது. அதற்குப் பின்னால் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி, அந்தக் கூட்டத்தின் முடிவின்படி நாம் நீதிமன்றத்துக்கும் போனோம்.

2006ஆம் ஆண்டு தேர்தலில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் கூட்டுறவு வங்கிகளில் உழவர்கள் வாங்கிய ரூ.7,000 கோடி கடனை இரத்து செய்தவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்தான். இன்றும் அதை நினைத்துப் பார்க்கிறேன். பதவியேற்ற அன்றைக்கே, ஒரு முதலமைச்சர் பதவியேற்றுக் கொண்டால் நேரடியாகக் கோட்டைக்கு போவார்கள், கோப்புகளைப் பார்த்து அதில் கையெழுத்துப் போடுவார்கள். இதுதான் மரபு வழியாக நடந்து கொண்டு இருக்கிறது. ஆனால், தலைவர் கலைஞர் அவர்கள் கோட்டையில் இருக்கக்கூடிய கோப்பையே விழா மேடைக்கு வரவழைத்து அந்த விழா மேடையிலேயே கையெழுத்துப் போட்டு ரூ.7,000 கோடி கடனை இரத்து செய்தார்கள்.

நிலமற்ற ஏழை உழவுத் தொழிலாளர்களுக்கு நிலம் வழங்குவேன் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில் நிலமும் வழங்கப்பட்டது. 1,89,719 ஏக்கர் நிலத்தை, 1,50,159 பேருக்கு வழங்கிய ஆட்சிதான் கலைஞருடைய ஆட்சி. இவை அனைத்துக்கும் மேலாக உழவர்களுக்கு இலவச

மின்சாரம் அறிவித்ததும் முதலமைச்சராக இருந்த தலைவர் கலைஞர் அவர்கள்தான்.

1978ஆம் ஆண்டுமுதல் உழவர்கள் மின் கட்டணத்தில் சலுகை கேட்டுப் போராடினார்கள். 1990ஆம் ஆண்டு மின் கட்டணத்தில் சலுகை அல்ல; ஒரு பைசா குறைக்க வேண்டும் என்பதுதான் விவசாயிகள் வைத்த கோரிக்கை. மறைந்த நாராயணசாமி நாயுடு அவர்கள் தலைமையிலே ஒரு மிகப் பெரிய போராட்டம் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்றது. ஆட்சிக்கு வருகிறோம், தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக வந்து அமர்கிறார். யாரும் கோரிக்கை வைக்கவில்லை, போராட்டம் நடத்தவில்லை. ஒரு கோரிக்கை மனுவைக் கூட முதலமைச்சரான தலைவர் கலைஞர் அவர்களிடத்தில் கொடுக்கவில்லை. தலைவர் கலைஞர் கோட்டைக்குச் சென்றார், சட்டமன்றத்திலே அவர் எழுந்து அறிவித்தார். கடந்த கால ஆட்சியிலே ஒரு பைசா குறைக்க வேண்டும் என்று போராடினார்கள், இப்போது திமுக ஆட்சியில் ஒரு பைசா கூட தரவேண்டிய அவசியமில்லை என்று தலைவர் கலைஞர் அவர்கள் அந்தத் திட்டத்தை அறிவித்தார்.

இந்த வரிசையில் ஒரு இலட்சம் புதிய இணைப்புகள் என்ற இந்தப் புதிய திட்டத்தை இன்றைக்கு நாம் தொடங்கி வைத்திருக்கிறோம்.

‘ஒரு இலட்சம் புதிய இணைப்புகள் வழங்குகிறோம்’ அதிலும் பெரும்பாலும் இலவசமாக வழங்குகிறோம் என்றால், தமிழ்நாடு மின்சார வாரியம் என்பது செழிப்பாக இருக்கிறது என்று யாரும் நினைத்துவிட வேண்டாம். அது உங்களுக்கே தெரியும். செழிப்பாக அல்ல; கடந்தகால ஆட்சியாளர்கள் சீரழித்துவிட்டுப் போயிருக்கிறார்கள். இதுதான் அ.தி.மு.க. ஆட்சியினுடைய சாதனை. ரூ.1.59 இலட்சம் கோடி கடனில் இருக்கிறது மின்சார வாரியம். ஆண்டுக்கு ரூ.16,000 கோடி வட்டி கட்ட வேண்டிய நிலைமையில் இருக்கிறது. மிக அதிகமான விலை கொடுத்து மின்சாரம் கொள்முதல் செய்துள்ளார்கள். குறுகியகால ஒப்பந்தங்களாக இல்லாமல், மிக நீண்டகால ஒப்பந்தங்களாகப் போட்டுள்ளார்கள். இதைவிடக் கொடுமை என்னவென்றால், அனல் மின் நிலையங்களில் நிலக்கரி பதிவேட்டில் இருப்பதும், இருப்பு இருப்பதும் வித்தியாசமாக உள்ளது. அதிலும் முறைகேடுகள்.

அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போலக் கடந்த 10 வருட ஆட்சியில் பராமரிப்புப் பணிகளே நடைபெறவில்லை. கடந்த 10 ஆண்டுகளில் அ.தி.மு.க. ஆட்சியில் கூடுதலாக நிறுவப்பட்ட நிறுவு சக்தி 1,481 மெகாவாட். அதில் 1,428 மெகாவாட் 2006–2011ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது திட்டமிடப்பட்டவை ஆகும். கூட்டிக் கழித்துப் பார்த்தால் அ.தி.மு.க. ஆட்சியில், 10 ஆண்டுகளில் நிறுவப்பட்ட நிறுவு சக்தி வெறும் 53 மெகாவாட்தான். இப்படிக் கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் மின்சார வாரியத்தின் அவலங்களைச் சொல்லிக் கொண்டே போகலாம்.

ஆனால், இதிலிருந்து மின்சார வாரியத்தைக் காப்பாற்றுவதற்கான பணிகள் இப்போது தொடங்கி இருக்கிறது. பராமரிப்புப் பணிகள் துரிதமாக நடந்து வருகிறது. புதிய மின் திட்டங்களை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். 17,980 மெகாவாட் மின்சாரத்தை வரும் பத்தாண்டுக்காலத்தில் தயாரிக்கத் திட்டப்பணிகள் தொடங்கி இருக்கிறது. ஏற்கெனவே திட்டமிடுதலில் உள்ள பணிகளை விரைந்து முடிக்கச் சொல்லி இருக்கிறோம்.

சூரிய சக்தி மின்சாரம் தயாரிப்புக்கு முன்னுரிமை வழங்க இருக்கிறோம். திருவாரூரில் முதல் சூரிய சக்தி பூங்கா அமைக்கப்பட இருக்கிறது. சூரிய மின் உற்பத்தி, புனல் நீரேற்று மின் உற்பத்தி மற்றும் இயந்திர மின் திட்டங்களைத் தொடங்குவதற்கான ஆலோசனைகளை வழங்கவும், நிதி தேவையான, ரூ.1,32,500 கோடி திரட்டுவதற்கும் இந்திய மரபுசாரா எரிசக்தி மேம்பாட்டு நிறுவனத்துடன் 06.09.2021 அன்று ஒப்பந்தம் போட்டிருக்கிறோம்.

மரபுசாரா எரிசக்தித் துறையில் இவ்வளவு பெரிய ஒப்பந்தத்தைப் போட்ட ஒரே மாநிலம் நம்முடைய தமிழ்நாடு தான் என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்கிறேன். எரிவாயு இயற்கை மின் திட்டங்களை எண்ணூரில் அமைக்கச் சாத்தியக் கூறுகளை ஆராயச் சொல்லி இருக்கிறோம். மின் இழப்பைச் சரிசெய்ய முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்துக்கும் மேலாக நுகர்வோர் குறைகளை உடனடியாகத் தீர்த்து வருகிறோம். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த ஒரு மாதத்துக்குள் ‘மின்னகம்’ என்ற குறைதீர்வு மையத்தை நான் தொடங்கி வைத்தேன். அதில் பதியப்பட்ட புகார்களில் 90 விழுக்காட்டுக்கு மேலான குறைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்பதையும் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

மக்களோடு நேரடியாக இருக்கக்கூடிய துறை மின்சாரத் துறை ஆகும். அந்தத் துறையை யாராலும் குறை சொல்ல முடியாத துறையாக ஆக்க வேண்டும் என்று அமைச்சருக்கும், துறை அதிகாரிகளுக்கும் நான் ஏற்கெனவே உத்தரவு போட்டுள்ளேன்.

இன்றைக்குப் புதிய இணைப்பு பெற்றவர்கள், மின்சாரத்தைத் தேவைக்கு மட்டும் பயன்படுத்துங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். மின்சாரம் தயாரிப்பு என்பதே மிகப்பெரிய செலவு வைக்கும் திட்டமாக இருக்கிறது. அதனால் முடிந்தளவு சிக்கனமாக மின்சாரத்தைப் பயன்படுத்துங்கள்.

கடந்தகாலத் தவறுகளிலிருந்து இத்துறை மீள்வதற்கு அமைச்சர், அதிகாரிகள் மட்டும் உழைத்தால் போதாது பொதுமக்களும் தங்களால் முடிந்த ஒத்துழைப்பைத் தர வேண்டும்.

உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கத்துடன் ஒரு இலட்சம் உழவர்களுக்குப் புதிய மின் இணைப்பு ஆணையை வழங்கி இருக்கிறோம்.

இது தமிழ்நாட்டில் உழவுப் புரட்சிக்கு அடித்தளமாக அமையட்டும்! உற்பத்திப் பரப்பு அதிகமாக இது உதவிகள் செய்யட்டும்!

அனைவரும் சேர்ந்து இம்மண்ணையும், மக்களையும் காப்போம் என்று கூறி விடைபெறுகிறேன்!

சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் "மக்களைத் தேடி மருத்துவ மையம்"

சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் நாள்தோறும் சுமார் 15,000 புறநோயாளிகள், 3,800 உள்நோயாளிகள் மற்றும் அவர்களின் உறவினர்கள் என சுமார் 25,000 நபர்கள் வந்து செல்கின்றனர். அவர்களில் 30 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் உயர் இரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோய்களுக்கான பரிசோதனை மேற்கொள்ளவும், 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் உயர் இரத்த அழுத்தச் சாத்தியக்கூறு மதிப்பீடு செய்யவும், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் நிறுவப்பட்டுள்ள மக்களைத் தேடி மருத்துவ மையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 24.09.2021 அன்று திறந்து வைத்தார்.

காதுகேளாதோர்வாரத்தையொட்டி மருத்துவமனைகளின் பயன்பாட்டிற்காக ரூ.98.80 இலட்சம் மதிப்புள்ள உயர்தரச் செவித்திறன் குறைபாடு கண்டறியும் கருவிகள் மற்றும் உயர்தர அறுவை சிகிச்சை கருவிகளையும், காது கேட்கும் திறன் குறைந்த முதியோர்களுக்கு புதிய காது கேட்கும் கருவிகளையும் வழங்கினார்.

காது நுண் எலும்புக் கருவி பொருத்தும் அறுவை சிகிச்சை மேற்கொண்ட குழந்தைகளுக்கு முதன் முறையாகக் காது கேட்கும் திறனை வெளிப்படுத்தும் கருவியை Switch ON செய்து, அறுவை சிகிச்சை செய்துகொண்டு ஓராண்டு முறையான பயிற்சிக்குப் பின் பேசும் திறன் பெற்ற குழந்தைகளையும் வாழ்த்தினார்.

சென்னை, ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை வளாகத்தில் உள்ள பெருக்க மரம் (Baobab), உலகின் பழமையான மரவகைகளில் ஒன்றாகும். இம்மரம் ஆப்பிரிக்கா கண்டத்தைச் சார்ந்தது. சுமார் 500 ஆண்டுகள் வரை நீண்ட ஆயுட்காலம் கொண்டது. இம்மரத்தின் இலைகள் வைட்டமின் "சி" (Vitamin C) சத்து நிறைந்தது. 37 அடி சுற்றளவு கொண்ட தண்டும், 65 அடி உயரமும் கொண்ட இந்த அரிய மரம் சுமார் 150 ஆண்டுகளுக்கும் மேலான பழமையும் பாரம்பரியமும் மிக்க சென்னை மருத்துவக் கல்லூரியின் மகத்தான புராதானச் சின்னங்களில் ஒன்றாக மிளிர்கிறது. இத்தகைய சிறப்பு வாய்ந்த தன்மைகளைக் கொண்ட பெருக்க மரத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, இம்மரத்தைப் பற்றிய தகவல்கள் அடங்கிய கல்வெட்டினைத் திறந்து வைத்தார்.

"கலைஞர் மு. கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது"



2010 முதல் 2019 வரை
10 ஆண்டுகளுக்கான விருதுகள் அறிவிப்பு
28.09.2021

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தால் வழங்கப்படும் "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது" 2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு வழங்கப்படாமல் இருந்தது. தற்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் புதிய அரசு பொறுப்பேற்றவுடன் செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் வளர்ச்சிக்கான முன்னெடுப்புகள் தொடங்கப்பட்டுள்ளது. அவ்வகையில் நிறுவனத்தின் 8ஆவது ஆட்சிக்குழுக் கூட்டம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் 30.08.2021 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் அமைக்கப் பெற்ற விருதுத் தேர்வுக் குழுவினரால் கீழ்க்காணும் பத்து விருதாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்:

★ 2010 – முனைவர் வீ.எஸ். இராஜம், (Former Senior Lecturer, Department of South Asia Regional Studies, University of Pennsylvania).

★ 2011 – பேராசிரியர் பொன்.கோதண்டராமன் (மேனாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)

★ 2012 – பேராசிரியர் இ.சுந்தரமூர்த்தி (மேனாள் துணைவேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம்)

★ 2013 – பேராசிரியர் ப. மருதநாயகம் (மேனாள் இயக்குநர், புதுவை மொழியியல் பண்பாட்டு நிறுவனம், மேனாள் பதிவாளர், புதுவைப் பல்கலைக்கழகம்)

★ 2014 – பேராசிரியர் கு. மோகனராசு (மேனாள் பேராசிரியர் & தலைவர், திருக்குறள் ஆய்வு மையம், சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை)

★ 2015 – பேராசிரியர் மறைமலை இலக்குவனார் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி)

★ 2016 – பேராசிரியர் கா.ராஜன் (மேனாள் பேராசிரியர், வரலாற்றுத்துறை, புதுவைப் பல்கலைக்கழகம்),

★ 2017 – பேராசிரியர் உல்ரிக் நிக்லாஸ், Professor and Head of the Institute of Indology and Tamil Studies, Cologne University, Germany.

★ 2018 – கவிஞர் ஈரோடு தமிழன்பன் (மேனாள் தமிழ்ப் பேராசிரியர், புதுக் கல்லூரி, சென்னை).

★ 2019 – பேராசிரியர் கு.சிவமணி (மேனாள் முதல்வர், கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சாவூர் & திருவள்ளுவர் கல்லூரி, நெல்லை).

2010 முதல் 2019 வரையிலான பத்து ஆண்டுகளுக்கு உரிய "கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருது", தமிழறிஞர்கள் மற்றும் தமிழ்நாட்டுப் பெருமக்களின் முன்னிலையில் மாநில அளவிலான தமிழ்மொழி சார்ந்த விழாவில் கூடிய விரைவில் வழங்கப்படவுள்ளது. மேலும், 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்கான கலைஞர் மு.கருணாநிதி செம்மொழித் தமிழ் விருதுக்கானப் பணிகள் செம்மொழித் தமிழாய்வு நிறுவனத்தால் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

"தனிப்பெருங்கருணை நாள்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
அறிவிப்பு – 05.10.2021

அருட்பிரகாச வள்ளலார் என்று அழைக்கப்படும் இராமலிங்க அடிகளார், கடலூர் மாவட்டம், சிதம்பரத்திலிருந்து 10 மைல் தொலைவில் உள்ள மருதூரில் 05.10.1823இல் பிறந்தார். கருணை ஒன்றையே வாழ்க்கை நெறியாகக் கொண்டு வாழ்ந்தார். அனைத்து நம்பிக்கைகளிலும் உள்ள உண்மை ஒன்றே என்பதைக் குறிக்கும் வண்ணம் சமரச சுத்த சன்மார்க்கத்தை நிறுவினார். வடலூரில் சத்தியஞான சபையை எழுப்பினார்.

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடிய இவர், மக்களின் பசித்துயர் போக்க சத்தியதர்ம சாலையை நிறுவினார்.

அவர் ஏற்றிய அடுப்பு இன்றுவரை அணையாமல் தொடர்ந்து எரிந்த வண்ணம் பசியோடு இருக்கும் மக்களின் வயிற்றை நிரப்புகிறது.

மனுமுறை கண்ட வாசகம், ஜீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய உரைநடைகளை எழுதினார். இவர் பாடிய பாடல்களின் திரட்டுத் திருவருட்பா என்று அழைக்கப்படுகிறது. இது 6 திருமுறைகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.

திருவருட்பா ஆறாம் திருமுறையில், எந்தச் சமயத்தின் நிலைப்பாட்டையும் எல்லா மதநெறிகளையும் சம்மதம் ஆக்கிக் கொள்கிறேன் என்றார்.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம் நிறுவிய அவர், சத்திய தருமச்சாலையையும், சித்தி வளாகத்தையும் உருவாக்கினார். பசிப்பிணி நீக்கும் மருத்துவராக வாழ்ந்து காட்டினார்.

அருட்பெருஞ்சோதி! அருட்பெருஞ்சோதி!
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி!

என்ற ஆன்மநேய ஒருமைப்பாட்டு ஒளி இன்றும் அறியாமையை நீக்கி அன்பை ஊட்டி வருகிறது. அவர் பிறந்தநாளான அக்டோபர் 5ஆம் நாள் இனி ஆண்டுதோறும் **"தனிப்பெருங்கருணை நாள்"** எனக் கடைப்பிடிக்கப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான பாராட்டு விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
சென்னை, அண்ணா மேலாண்மை நிலையத்தில் நடைபெற்ற விழாவில் ஆற்றிய உரை – 01.10.2021

அகில இந்திய அளவில் நடத்தப்பட்ட குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற்ற இளைஞர்களைப் பாராட்டும் நோக்கத்துடன் நடத்தப்படுகின்ற இந்த இனிய விழாவிற்கு வருகை புரிந்திருக்கின்ற மாண்புமிகு நிதி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்களே!

தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்று மகிழ்ந்திருக்கக்கூடிய தலைமைச் செயலாளர் அவர்களே! பொதுத்துறை செயலாளர் அவர்களே! மனிதவள மேலாண்மைத்துறையின் செயலாளர் அவர்களே! அண்ணா மேலாண்மை நிலையத்தில் பணிபுரிகின்ற அலுவலர்களே! வெற்றியாளர்களாக இங்கே வீற்றிருக்கின்ற பாராட்டுக்குரியவர்களே! அவர்களை ஈன்றதால் பெருமிதத்துடன் அமர்ந்திருக்கின்ற பெற்றோர் பெருமக்களே! உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பார்ந்த வணக்கத்தை, நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அரசுப் பணி என்பது தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு விருப்பமாக இருக்கக்கூடிய பணி. அதிலும் குறிப்பாக இந்திய ஆட்சிப் பணி என்பது எண்ணற்ற இளைஞர்களின் கனவாக இருக்கக்கூடிய நிலை.

இந்தியாவில் இருக்கிற அனைத்து மாநிலத்தைச் சார்ந்த இளைஞர்களும் சிறு வயது முதலே முயன்று உழைத்துக் கடுமையாகப் பாடுபட்டு எழுதக்கூடிய பரிட்சை இது. அதில் பல இளைஞர்களுடைய பெற்றோர் இந்திய ஆட்சிப் பணியிலோ, இந்தியக் காவல் பணியிலோ பணியாற்றக்கூடியவர்களாக இருப்பதும் உண்டு. அவர்கள் நாட்டின் புகழ்ப்பெற்ற பல்கலைக்கழகங்களில் படித்து இந்தத் தேர்வுக்காகக் கல்லூரி வாழ்க்கையிலேயே கவனத்தைச் செலுத்திப் படிப்பவர்களாகவும் இருக்கிறார்கள். எனவே, கடுமையான போட்டிகள் நிறைந்ததாக இந்தத் தேர்வு எப்போதும் திகழ்ந்துகொண்டு இருக்கிறது.

இந்தியாவின் உயர்ந்த பணிகளில் இத்தேர்வின் மூலம் தேர்ச்சி பெறக்கூடியவர்கள் அமர்ந்து நிருவாகத்தைச் செம்மையாக நடத்தக்கூடிய பெரிய பொறுப்பை வகிப்பதுதான் இந்தத் தேர்வின் மீது பல இளைஞர்கள் ஆர்வம் கொள்வதற்கு அடிப்படையாகவும் இருக்கிறது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை அது எப்போதுமே சமூக நீதியை முன்னிறுத்தும்

மாநிலமாகத் திகழ்கிறது. தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகிய அனைவருமே சமூகத்தில் புறக்கணிக்கப்பட்டவர்களுக்காகப் போராடுவதைத் தங்கள் வாழ்நாள் இலட்சியமாகக்கொண்டு வாழ்ந்தவர்கள். வசதி படைத்தவர்கள் மட்டுமே எழுத முடியும் என்றிருந்த இந்தத் தேர்வைக் கடைக்கோடியில் இருப்பவர்களும் எழுத வேண்டும் என்பதற்கு அடித்தளம் அமைக்கக்கூடிய வகையில் தமிழ்நாட்டில் 1966ஆம் ஆண்டு பட்டியலினத்தைச் சார்ந்த இளைஞர்களுக்குப் பயிற்சி அளிக்கத் தேர்வு மையம் தொடங்கப்பட்டது. ஆனால் அது பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கும் போய்ச்சேர வேண்டும் என்பதற்காக 1971ஆம் ஆண்டு இன்னொரு சிறப்பு மையம் அவர்களுக்காக அமைக்கப்பட்டது. இந்த இரண்டு மையங்களையும் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் 2000ஆம் ஆண்டு ஒருங்கிணைத்து அகில இந்தியக் குடிமைப் பணிகள் தேர்வுப் பயிற்சி மையம் என்று பெயரிட்டு, அண்ணா மேலாண்மை நிலையத்தின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவந்தார்.

எளிய குடும்பங்களிலிருந்து வருகிற இளைஞர்களுக்குச் சுட்டுவிரலாகவும், கைப்பிடித்து அழைத்துச் செல்கிற ஆதரவுக்கரமாகவும் அமையும் பொருட்டு இளைஞர்கள் தங்குவதற்காகவும், உணவருந்துவதற்காகவும், பயிற்சியை எதிர்கொள்வதற்காகவும், அரசு செலவில் வசதிகள் செய்து தரப்பட்டன. அவர்கள் கடிவாளமிடப்பட்ட குதிரைகளைப் போலப் போட்டித் தேர்வுகளில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும் என்று தமிழ்நாடு அரசு இந்த மையத்தை மற்ற மாநிலங்களுக்கெல்லாம் முன்மாதிரியாக நடத்தி வருகிறது. இம்மையத்தைப் பற்றிக் கேள்விப்பட்டு மேற்கு வங்கம், தெலுங்கானா போன்ற மாநிலங்களில் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் இதுகுறித்து விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது நமக்கு மகிழ்ச்சியளிக்கக் கூடிய ஒரு செய்தியாக அமைந்திருக்கிறது.

இந்த மையத்தில் வெளிப்படையாக நுழைவுத் தேர்வு நடத்தப்பட்டு 325 தகுதி பெற்ற மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு முதல்நிலைத் தேர்வுப் பயிற்சிக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். அவர்களில் 225 பேர் விடுதியிலேயே தங்கிப் படிக்கிறார்கள். 100 பேர் பகுதிநேரப் பயிற்சியாளர்களாக அனுமதிக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகு, முதல்நிலைத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள் எல்லாம் முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி பெற அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த இரு நேர்வுகளிலும் தமிழ்நாடு அரசு கடைப்பிடிக்கும் இட ஒதுக்கீட்டு முறை கையாளப்பட்டு அனைத்துப் பிரிவைச் சார்ந்தவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்படுகிறது.

உண்ண உணவு, தங்க உறைவிடம், கற்றுத்தரப் பேராசிரியப் பெருமக்கள், அனுபவங்களைப் பகிர ஆட்சிப்பணி அலுவலர்கள், குறிப்புக்களைப் புரட்ட ஆயிரக்கணக்கான புத்தகங்கள், பாதுகாப்பான வளாகம் என்று அனைத்து வசதிகளும் கொண்ட இந்த வளாகம் இத்தேர்வில் வெற்றிபெற விரும்பும் இளைஞர்களுக்குக் கிடைத்த மிகப் பெரிய வாய்ப்பு என்பதை இந்த நேரத்தில் நான் கூற விரும்புகிறேன்.

இந்த மையத்தில் முதன்மைத் தேர்வுக்குப் பயிற்சி பெறுபவர்கள் நூல்களை வாங்கித் தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள மாதம் ஒன்றுக்கு ரூ.3,000 உதவித் தொகையாகவும் வழங்கப்படுகிறது.

முதன்மைத் தேர்வில் வெற்றிபெற்றவர்கள் நேர்காணலை எதிர்கொள்கிற மாதிரி ஆளுமைத் தேர்வுகள் நடத்தப்படுவதோடு அவர்களுடைய செயல்பாட்டைக் காணொலி மூலம் பதிவு செய்து தங்களுடைய குறைநிறைகளை அறிந்துகொள்ளக் குறுந்தகடுகளும் வழங்கப்படுகின்றன. அவர்கள் புதுடில்லியில் ஆளுமைத் தேர்வில் கலந்துகொள்வதற்கு ரூ.5,000 பயணப்படி வழங்குவதுடன் தமிழ்நாடு இல்லத்தில் தங்கும் வசதியும் செய்து தரப்படுகிறது.

இந்த மையம் அனைத்து வசதிகளையும் கொண்ட உயர்தர வழிகாட்டி மையமாகத் திகழ்கிறது என்பதற்கு நான் உள்ளபடியே என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நாம் 2020ஆம் ஆண்டு குடிமைப்பணித் தேர்வில் வெற்றி பெற்றவர்களைப் பாராட்டுவதற்காக இங்குக் கூடியிருக்கிறோம். இதில் பெண்களில் ஏழு பேர், ஆண்களில் ஒன்பது பேர் இம்மையத்தில் பயிற்சி பெற்றவர்கள். இவர்களுள் ஒருவர் மாற்றுத்திறனாளி. மாற்றுத்திறனாளி ஒருவரும் தன் மகத்தான உழைப்பால் இந்த மாபெரும் பணிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார் என்ற தேனினும் இனியச் செய்தி என் செவிகளில் விழுந்தபோது, அதில் எனக்கு என்ன பெருமை என்றால், மாற்றுத்திறனாளிகள் துறையைக் கைவசம் வைத்திருக்கக்கூடியவன்தான் நான். அதனால்தான் அந்த பெருமை எனக்கு.

குடிமைப் பணித் தேர்வுகளில் நீங்கள் வெற்றி பெற்றிருப்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. இலட்சக்கணக்கான இளைஞர்கள் போட்டியிட்ட தேர்வில், நீங்கள் உங்கள் திறமையால், வைராக்கியத்தால், உழைப்பால் வெற்றி பெற்றிருக்கிறீர்கள். உங்கள் பெற்றோர் உங்களுக்கு அளித்த நம்பிக்கையும் உற்சாகமும் உங்களைத் தீவிரமாகப் படிக்கத் தூண்டியிருக்கிறது.

குடிமைப் பணி அலுவலர்கள் அரசின் மூன்று தூண்களான சட்டமன்றம், நிருவாகம், நீதிமன்றம் ஆகியவற்றில் ஒரு தூணாக இருப்பவர்கள். மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகிற அரசு நிறைவேற்றும் சட்டங்களையும், தீட்டித் தரக்கூடிய திட்டங்களையும் சிந்தாமல் சிதறாமல் ஏழை எளிய மக்களிடம் கொண்டுபோய்ச் சேர்க்கிற பெரும் பொறுப்பு அவர்களுக்கு உண்டு. துரிதமான நடவடிக்கை, விரைவான செயல்பாடு, ஓயாத உழைப்பு, சார்நிலை அலுவலர்களை ஊக்கப்படுத்தும் தன்மை, தன்னம்பிக்கையை விட்டுக்கொடுக்காத தலைமைப் பண்பு, பிரச்சினைகளை எதிர்கொள்ளும் துணிச்சல் போன்றவற்றையெல்லாம் அவர்கள் பெற்றிருக்கிறார்களா என்பதைப் பரிசோதிக்கும் பொருட்டுதான் இத்தகைய கடினமான

போட்டித் தேர்வு ஒன்றிய பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்படுகிறது. உலகளவில் மிகக் கடுமையான போட்டித் தேர்வுகளில் ஒன்றாக இது கருதப்படுகிறது.

இத்தகைய போட்டித் தேர்வில் நீங்கள் வெற்றி பெற்றிருப்பது உங்களுக்கு மட்டுமல்ல, உங்கள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிற்கே பெருமை. நீங்கள் எல்லோரும் அரசின் உயர் பதவிகளில் அமர்ந்து பணியாற்றும்போது, தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய நன்மைகள் தடம்புரளாமல் சென்றடைய வேண்டும் என்கிற எண்ணத்தோடு பாடுபடுவீர்கள் என நான் நம்புகிறேன். இந்திய அளவில் உயர் பணிகளில் இருக்கிறபோது நீங்கள் பிறந்த மண்ணை, வளர்ந்த மண்ணை, தவழ்ந்தபோது பேசிய தாய்மொழியை மறக்காமல் செயல்படுவீர்கள் என்பது எனக்குத் தெரியும்.

குடிமைப் பணியில் தேர்வு பெறுவது என்பது கடவுச்சீட்டு மட்டும்தான். அதுவே பயணச் சீட்டாகி விடாது. இது நுழைவாயிலே தவிர இதையே மாளிகை என்று கருதிவிடக் கூடாது. நீங்கள் இனிமேல்தான் அதிகம் உழைக்க வேண்டிய தருணங்களைச் சந்திக்கப் போகிறீர்கள்.

இரண்டு ஆண்டுகள் நீங்கள் ஆற்ற வேண்டிய பணி குறித்து உங்களுக்குப் பயிற்சி அளிக்கப்படவிருக்கின்றது. அந்தப் பயிற்சியின்போது இன்னும் நன்றாக உங்களைப் பட்டை தீட்டிக்கொள்ளுங்கள். உங்கள் திறன்களை வளர்த்துக் கொள்ளுங்கள். நிருவாகத்தின் ஆழத்தை அனுபவம் வாய்ந்த மற்ற அலுவலர்களிடமிருந்து உறிஞ்சிக்கொள்ளுங்கள். உங்கள் உணர்ச்சி மேலாண்மையை உயர்த்திக்கொள்ளுங்கள். சமூக நுண்ணறிவை மேம்படுத்திக்கொள்ளுங்கள். சிக்கல்களில் சிதைந்து போகாமல் சமாளிக்கும் பக்குவத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஒரே நேரத்தில் பல பணிகளை ஆற்றும் ஆற்றலைக் கூர்மைப்படுத்திக்கொள்ளுங்கள். மற்றவரிடமிருந்து எவ்வளவு வாழ்க்கை நெறிகளை நாம் பெற முடியும் என்பதிலும் விழிப்புணர்வோடு இருங்கள்.

நாம் பெற்றிருக்கிற வெற்றி நமக்கானதல்ல, சமூகத்திற்கானது என்று சிந்தியுங்கள். எப்படியெல்லாம் பயிற்சியில் பெறுகிற அறிவைக் களத்தில் பயன்படுத்தலாம் என்று நீங்கள் வாழ்க்கையோடு தொடர்புபடுத்திப் பாருங்கள். அப்போதுதான் அந்தப் பயிற்சி உங்களை மின்னும் வைரமாக, ஒளிரும் மாணிக்கமாக, மங்காத தங்கமாக, மிளிரும் முத்துகளாக மாற்றி அமைக்கும் என்பதை உங்களுக்கு இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது.

இந்திய ஆட்சிப் பணியில் வந்தவுடன் நாம் எந்தச் சிற்றூரிலிருந்து வந்தோம் என்பதை மறந்துவிடக் கூடாது. நாம் அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஒருபோதும் சிந்திக்கக் கூடாது. அரசு வசதிகளை எவ்வாறு துய்க்கலாம் என்று மனக்கணக்கு போடக்கூடாது. நீங்கள் நேர்மையாகவும், தூய்மையாகவும் பணியாற்ற வேண்டிய கடமை உணர்வோடு ஒவ்வொரு நொடியும் திகழ வேண்டும். பணியில் இருக்கும்போது பலர் உங்களைத் தவறான வழிக்குத் தூண்டுபவர்களாக இருப்பார்கள். எந்தவிதமான சபலத்திற்கும் ஆட்பட்டுவிடாமல் நேர்கொண்ட பார்வையுடன் நிமிர்ந்து நடைபோட வேண்டியது உங்களுடைய கடமை.

இந்திய ஆட்சிப் பணியிலோ, மற்ற குடிமைப் பணியிலோ நீங்கள் பணியாற்றும்போது மக்களை நேசிப்பது மிகவும் முக்கியம். அவர்களுக்காகத்தான் நாம் பணியாற்றுகிறோம் என்கிற எண்ணம் உங்களுக்கு எப்போதும் இருக்க வேண்டும். பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஒளியாமல் அவை கிளம்பும் இடத்தைத் தேடிக் கண்டுபிடித்துத் தீர்த்து வைப்பதுதான் நல்ல நிருவாகத்திற்கு அழகு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு வாசகத்தை அடிக்கடி குறிப்பிட்டுச் சொல்வார்.

மக்களிடம் செல், அவர்களோடு வாழ், அவர்களை நேசி, அவர்களிடமிருந்து கற்றுக்கொள், அவர்களுக்குத் தெரிந்ததிலிருந்து தொடங்கு, அவர்களிடம் இருப்பதிலிருந்து கட்டுமானம் செய், பணி முடிந்த பிறகு அவர்களுக்குத் திருப்தியை ஏற்படுத்திவிட்டுத் திரும்பி வா.

இந்த வாசகத்தைக் குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெற்றிருக்கக்கூடிய நீங்கள் அத்தனை பேரும் இதயத்தில் எழுதி ஒட்டிக்கொள்ள வேண்டும். உங்களுக்குப் பணியில் எந்தச் சிக்கல் வந்தாலும் இந்த வாசகத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

உயர்ந்த அலுவலராக, மக்கள் மனதில் நிற்கும் ஒப்பற்ற மனிதராக, செல்லுகிற இடங்களில் எல்லாம் நீங்கள் அந்த இடத்தை அடைவதற்கு முன் உங்கள் நற்பெயர் சென்று சேரக்கூடிய வகையில் நடந்துகொள்ள வேண்டும் என்று உங்களுடைய மூத்தச் சகோதரனாக உங்களிடம் வலியுறுத்தி உங்கள் அத்தனை பேரையும் வாழ்த்தி விடை பெறுகிறேன்.

சென்னை, எழும்பூரில்
தமிழ்நாடு காவல் அருங்காட்சியகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் திறந்து வைத்தார் – 28.09.2021

சென்னை மாவட்டம், எழும்பூரில் பாரம்பரியம் மிக்க பழைய காவல் ஆணையரக கட்டடமானது, ரூ.6.47 கோடி செலவில் தமிழ்நாடு காவல் அருங்காட்சியகமாக 24,000 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளங்களாக அமைக்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தின் தரைதளத்தில் காவல்துறையில் பயன்படுத்தப்பட்ட வாகனங்கள், சீருடைகள், வாத்திய இசைக் கருவிகள், காவல்துறையின் சாதனைகள், காவல்துறையால் மீட்டெடுக்கப்பட்ட சிலைகள், கள்ள நோட்டு அச்சடிக்கும் இயந்திரம், வெடிகுண்டுகள், குண்டுகளைக் கண்டெடுக்க உதவும் கருவிகள், மாதிரி சிறைச்சாலை ஆகியவையும், முதல் தளத்தில், அன்று முதல் இன்று வரை பயன்படுத்தப்பட்டு மற்றும் பயன்படுத்தி வரும் துப்பாக்கிகள், வாள்கள், தோட்டாக்கள் ஆகியவையும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

மேலும், காவல்துறையில் சிறப்பாகப் பணி செய்த காவலர்கள் முதல் உயர் அதிகாரிகள் வரை வழங்கப்பட்டு வரும் மாதிரி பதக்கங்களும் பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இந்த அருங்காட்சியகத்தில் முக்கிய வரலாற்று ஆவணங்கள், காவல்துறை தொடர்பான அக்காலத்தில் இயற்றப்பட்ட அதிமுக்கிய அறிவிப்புகள், ஆங்கிலேயக் காலத்து காவல்துறையினர் பயன்படுத்திய ஆயுதங்கள், தமிழக காவல்துறையின் தொடக்கக் கால சீருடைகள், பெல்ட், மோப்ப நாய்படைகளின் புகைப்படங்கள், வரலாற்றுச் சிறப்பு மிக்க செய்தித்தொகுப்புகள், காவல் ஆணையாளர் அலுவலக அறையில் உள்ள அரிய பழம்பொருட்கள், அணிவகுப்புச் சின்னங்கள், கம்பியில்லாத் தொலைத்தொடர்பு கருவிகள், காவல்துறை சேவைப் பதக்கங்கள், கலைப்பொருட்கள் ஆகியவையும் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. இக்காவல் அருங்காட்சியகத்தில், கூடுதல் வசதிகளாகக் கண்காணிப்பு கேமரா, தீ தடுப்புச் சாதனங்கள், குடிநீர் வசதி, மழைநீர் சேகரிப்பு வசதி, சிற்றுண்டியகம், நுழைவுச் சீட்டு வழங்கும் இடம் உள்ளிட்ட பல்வேறு கட்டமைப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு காவல் அருங்காட்சியகத்தைப் பார்வையிட வந்த பள்ளி மாணவ, மாணவியர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கலந்துரையாடி, இனிப்புகளை வழங்கினார்.

அக்டோபர் 1ஆம் தேதி முதல் அருங்காட்சியகத்தைப் பார்வையிட வரும் அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்கு அனுமதிக் கட்டணம் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மலைவாழ் மக்கள், விவசாயிகளுக்கு ரூ.16.47 கோடியில் நலத்திட்ட உதவிகள்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 30.09.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், வத்தல்மலை, ஆரம்பச் சுகாதார நிலைய வளாகத்தில் மலைவாழ் மக்கள், விவசாயிகள் மற்றும் மகளிர் சுயஉதவிக் குழு உறுப்பினர்களுடன் கலந்துரையாடிப் பேசியதாவது:

அனைவருக்கும் மாலை வணக்கம்.

இந்தச் சிறப்பான கலந்துரையாடல் நிகழ்ச்சி ஏற்பாடு செய்து, அதன்மூலமாக அதிலும் குறிப்பாகப் பழங்குடியினத்தைச் சார்ந்திருக்கக்கூடிய மக்களைச் சந்தித்து, உங்களுடைய கோரிக்கைகளைக் கேட்கக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றமைக்கு நான் உள்ளபடியே பெருமைப்படுகிறேன், மகிழ்ச்சியடைகிறேன்.

எங்களுக்கு இது ஒரு மறக்க முடியாத நாள், எங்களைத் தேடி நீங்கள் வந்திருக்கிறீர்கள், அதற்காக நன்றி சொல்கிறோம் என்று இங்கே பேசியவர்களெல்லாம் குறிப்பிட்டுச் சொன்னீர்கள். உள்ளபடியே உங்களைப் பார்க்கும்போது நான் அதிகமாக மகிழ்ச்சியடைகிறேன். உங்களுடைய கோரிக்கைகளை நீங்கள் எடுத்துச் சொன்னீர்கள். சேலம் மாவட்டத்திலும், தருமபுரி மாவட்டத்திலும் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளக் கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது.

சேலத்தில் ‘கலைஞர் வருமுன் காக்கும் திட்டம்’ என்ற திட்டத்தைத் தொடங்கி வைத்தேன். இந்தத் திட்டம் ஏதோ புதியதாக உருவாக்கப்பட்ட திட்டம் என்று நீங்கள் நினைக்க வேண்டாம். ஏற்கெனவே கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது செயல்பாட்டிற்குக் கொண்டுவந்து பெரிய அளவில், மிகப் பாராட்டுக்குரிய வகையில், மக்கள் பயன்படக்கூடிய வகையில், ஏழை, எளிய மக்கள், நடுத்தர மக்கள் பயன்படக்கூடிய வகையில் அந்தத் திட்டம் நடந்து கொண்டிருந்தது. ஆனால், இடையிலே ஆட்சி மாற்றம் வந்த காரணத்தால் பத்து வருடங்கள் அந்தத் திட்டம் முடக்கி வைக்கப்பட்டது. மீண்டும் கலைஞர் ஆட்சி, நான் எப்போதுமே எல்லா இடத்திலும் சொல்வது உண்டு, இது என்னுடைய ஆட்சி, எங்கள் ஆட்சி என்று நான் சொல்ல மாட்டேன், இது நம் ஆட்சி, நம்முடைய ஆட்சி, நமக்காக நடைபெறக்கூடிய ஆட்சி என்றுதான் தொடர்ந்து சொல்லிக்கொண்டிருக்கிறேன். அந்த அடிப்படையில்தான் ஆட்சியை நடத்திக்கொண்டிருக்கிறோம்.

குக்கிராமங்களில் கூட மருத்துவ முகாம்களை நடத்தி சிகிச்சை தந்துகொண்டிருக்கிறோம். இங்கே ஒரு சகோதரி சொன்னார்கள், வீடு தேடி எங்களுக்கு மருத்துவச் சேவை வந்துகொண்டிருக்கிறது, BPஆக இருந்தாலும், Sugarஆக இருந்தாலும் வீட்டிற்கே வந்து எங்களுக்கு மருந்து கொடுக்கக்கூடிய ஒரு நல்ல ஆட்சியை நடத்திக் கொண்டிருக்கிறேன் என்று பெருமையாக அந்தச் சகோதரி சொன்னார்கள். ஆக, நோய்ப் பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கும் ஏழைகளுக்கு அவர்களுடைய வீட்டிற்கே

சென்று அந்த நோயைக் குணப்படுத்திக் கொண்டிருக்கிறோம், அதற்குரிய மருந்துகளை வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

பணம் இருப்பவர்கள் மட்டும்தான் மருத்துவமனைக்குப் போகமுடியும் என்ற சூழ்நிலை இருந்துவந்தது. அதை இன்றைக்கு மாற்றிக் காட்டியிருக்கிறோம் நம்முடைய ஆட்சியில். காசு, பணம் இருந்தாலும், மருத்துவமனைக்கு வர இயலாத அளவுக்குப் பாதிக்கப்பட்டவர்களையும் குணப்படுத்திக் கொண்டு வருகிறோம்.

இதற்கிடையில் இன்னொன்று, ஏறக்குறைய இரண்டு வருடமாக, ஒன்றே முக்கால் வருடமாக கொரோனா என்ற ஒரு தொற்றுநோயில் சிக்கிக்கொண்டு நாம் பல பிரச்சினைகளைச் சந்தித்துக் கொண்டிருக்கிறோம் என்று உங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட கொரோனாவை, தமிழ்நாட்டைப் பொறுத்தவரை முழுமையாக ஒழித்துவிட்டோம் என்று சொல்லமாட்டேன், ஓரளவுக்குக் கட்டுப்படுத்தி வைத்திருக்கிறோம். இதுவே ஒரு மிகப் பெரிய சாதனையாக இன்றைக்கு எல்லோராலும் பேசப்படுகிறது. ஒரு பக்கம் மருத்துவ நெருக்கடி, இன்னொரு பக்கம் நிதி நெருக்கடி, இந்த இரண்டையும் ஒரே நேரத்தில் நாம் எதிர்கொண்டிருக்கிறோம்.

கொரோனா என்ற கொடுமையான தொற்று பரவிய நேரத்தில் ஆரம்பக்கட்டத்தில், முழு ஊரடங்கு போட்டோம். ஊரடங்கு போட்டால்தான் அந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும். ஊரடங்கு காரணமாக வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய ஏழை, எளிய மக்களுக்கு மட்டுமல்ல, எல்லோருக்கும் நாம் ஆட்சிக்கு வந்தவுடனே, தேர்தல் நேரத்தில் வாக்குறுதியாகச் சொன்னோம், கலைஞருடைய பிறந்தநாள் ஜூன் 3ஆம் தேதி வந்தவுடன், நாம் ஆட்சிக்கு வந்தபிறகு அவருடைய பிறந்தநாள் அன்றைக்கு ரூ.4,000 வழங்குவோம் என்று அன்றைக்குச் சொன்னோம். ஆனால், ஆட்சிக்கு வந்தவுடனே, கலைஞர் பிறந்தநாளுக்காகக் காத்திராமல், வந்தவுடனேயே ரேஷன் அட்டை வைத்திருக்கும் அனைவருக்கும் ரூ.4,000 உதவித்தொகையை வழங்கிய ஆட்சிதான் கலைஞருடைய ஆட்சி என்பது உங்களுக்கேத் தெரியும். தேர்தலுக்கு முன்பு, எல்லாக் கட்சிகளும் தேர்தல் களத்தில் ஈடுபடுகிறபோது, நாங்கள் பதவிக்கு வந்தால், பொறுப்புக்கு வந்தால், ஆட்சிக்கு வந்தால் அதைச் செய்வோம், இதைச் செய்வோம் என்று சொல்வார்கள், அது மரபு. அதை நிறைவேற்றுகிறார்களா, நிறைவேற்றவில்லையா என்ற பிரச்சினைக்கெல்லாம் நான் போக விரும்பவில்லை.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரைக்கும் தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளைச் சொன்னோம். அந்த 505 வாக்குறுதிகளில், நான் நெஞ்சை நிமிர்த்திச் சொல்கிறேன், 202 வாக்குறுதிகளை நாம் நிறைவேற்றி முடித்திருக்கிறோம். அந்த 202 வாக்குறுதிகள் பலவற்றை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம், நிறைவேற்றுவதற்கான அரசாணையை வெளியிட்டிருக்கிறோம். மீதமுள்ள வாக்குறுதிகளையும் படிப்படியாக நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றிக் கொடுப்போம் என்ற அந்த உறுதியை நான் இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன்.

அதில் முக்கியமாக ஆதிதிராவிடர் பழங்குடியினர் ஆணையம் அமைக்கப்படும் என்று தேர்தல் நேரத்தில் சொன்னோம். இத்தகைய ஆணையத்தை அமைத்து அதற்கான சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து, சட்டமன்றத்தில் அதைச் சட்டமாக்கியிருக்கிறோம். மிக விரைவில் அதற்குரிய தலைவர், உறுப்பினர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள். அந்த ஆணையம் சொல்லக்கூடிய ஆலோசனைகளையெல்லாம் பரிசீலித்து நிச்சயமாக அவைகளை நிறைவேற்றுவோம் என்று நான்

உங்களிடத்திலே உறுதியோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர்களிடம் உங்களுடைய கோரிக்கைகளையெல்லாம் நீங்கள் சொல்ல வேண்டும். எல்லோருடைய கோரிக்கைகளையும் கேட்டுச் செயல்படுத்தக் கூடிய அரசுதான் இந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசு.

சேலத்தில் மரவள்ளிக் கிழங்கு உற்பத்தி செய்யும் உழவர்கள், சவ்வரிசி விற்பனையாளர்களைச் சந்தித்து அவர்களுடைய கோரிக்கைகளை நான் கேட்டேன். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் நடத்துபவர்களைச் சந்தித்தேன், அவர்களது கோரிக்கைகளையும் கேட்டிருக்கிறேன். அவர்களது கோரிக்கைகள் அனைத்தையும் தொகுத்து நாம் நிச்சயமாக நிறைவேற்றப்போகிறோம். படிப்படியாக அதை நிறைவேற்றுவோம் என்ற உறுதியை அவர்களுக்குச் சொல்லியிருக்கிறேன்.

மக்களின் தேவையை அறிந்து செயல்படுத்தித் தரும் அரசாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய அரசு. இப்படி உங்களை நான் சந்திக்க வந்திருக்கிறேன் என்றால், உங்களுடைய கோரிக்கைகளைக் கேட்டு, அவைகளை நிச்சயமாக நிறைவேற்றுவேன் என்ற அந்த உறுதியைச் சொல்வதற்காகத்தான் வந்திருக்கிறேன் என்ற அந்த செய்தியை மட்டும் உங்களிடம் எடுத்துச் சொல்லிக்கொள்கிறேன்.

சாலை வசதிகளைப் பற்றிச் சொன்னீர்கள், போக்குவரத்து வசதிகளைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். மகளிர் சுயஉதவிக் குழுவைப் பற்றிக் கூட சில சகோதரிகள் இங்கே பேசுகிறபோது, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி இருந்தபோதுதான், கலைஞர் அவர்கள் முதன்முதலில் மகளிர் சுயஉதவிக் குழுவை எங்கு ஆரம்பித்தார் என்றால், தருமபுரி மாவட்டத்தில்தான் ஆரம்பித்தார் என்பது வரலாறு.

அந்த மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு மானியத் தொகை, வங்கிக் கடன், சுழல் நிதி இதையெல்லாம் தேடித் தேடி, கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, நான் அன்றைக்கு உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தேன், அதற்குப் பிறகு துணை முதலமைச்சராகவும் பொறுப்பு வகித்தேன். அந்தப் பொறுப்பை ஏற்றுப் பணியாற்றிய நேரத்தில், ஒரு மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு இரண்டு முறை, மூன்று முறை நான் சுற்றுப்பயணம் செய்தேன். அப்படிச் சென்று, அந்த சுயஉதவிக் குழுவிற்குச் சுழல் நிதி, வங்கிக் கடன், மானியம் இதையெல்லாம் நேரடியாகவே நானே சென்று, அவர்களுக்கு வழங்கினேன்.

ஒவ்வொரு விழாவிலும், அரசு விழாவிலும் அந்த நிகழ்ச்சியை இணைத்துக்கொண்டு நடத்தினேன். 4,000 பேர் வந்தாலும் சரி, 400 பேர் வந்தாலும் சரி, 4 பேர் வந்தாலும் சரி, அனைவருக்கும் அவர்கள் கையில் நானே என் கையால் கொடுத்துவிட்டுத்தான் சென்றிருக்கிறேன். அந்த அளவிற்கு மகளிர் சுயஉதவிக் குழுவிற்கு முக்கியத்துவம் தந்த ஆட்சி தி.மு.க. ஆட்சி. ஆனால், இடையில் பத்தாண்டுக் காலம் அந்த மகளிர் சுயஉதவிக் குழு வங்கிக்குச் செல்ல முடியவில்லை, கடன் வாங்க முடியவில்லை, சுழல் நிதி பெற முடியவில்லை, மானியத் தொகை பெற முடியவில்லை. ஆக, மீண்டும் அதற்குப் புத்துணர்வு ஏற்படுத்தி, மீண்டும் மகளிர் சுயஉதவிக் குழுவிற்குக் கம்பீரமாக இன்றைக்கு அவர்கள் நடமாடக்கூடிய வகையில் ஒரு சூழலை ஏற்படுத்தியிருக்கிறோம்.

மகளிர் சுயஉதவிக் குழு எதற்காகத் தொடங்கப்பட்டதென்றால், பெண்கள் யாருடைய தயவையும் எதிர்பார்க்காமல் அவர்களுடைய சொந்தக் காலில் நிற்க வேண்டும், தன்மானத்துடன் வாழ வேண்டும், சுய மரியாதையோடு வாழ வேண்டும், யாரையும் எதிர்பார்க்காமல் அவர்கள் வாழ்க்கையை நடத்த வேண்டும் என்பதற்காகத்தான்

தொடங்கப்பட்டது. அந்த சுயஉதவிக் குழுவிற்கு மீண்டும் புத்துணர்வு ஏற்பட்டிருக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆகப் பழங்குடி மக்களாக இருக்கக்கூடிய உங்களையெல்லாம் நான் வேறுபடுத்திப் பார்க்கிறேன் என்று நினைக்க வேண்டாம், எங்களில் ஒருவராகத்தான் நான் உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்.

உங்கள் முகத்தைப் பார்க்கும்போது, எனக்கு அளவில்லாத மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்படுகிறது. எனவே, அந்த நம்பிக்கையோடு உங்களுடைய அடிப்படைத் தேவைகளுக்கான எல்லா வசதிகளையும் நிச்சயமாக, உறுதியாக நிறைவேற்றுவோம், நிறைவேற்றுவோம் என்ற அந்த உறுதியை மட்டும் நிறைவுக் கருத்தாகச் சொல்லி உங்கள் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி கூறி விடைபெறுகிறேன்.

அதனைத் தொடர்ந்து, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 36 பயனாளிகளுக்கு ரூ.14.40 இலட்சம் மதிப்பிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள், 3 பயனாளிகளுக்குப் புதிய மின்னணு குடும்ப அட்டைகள்; சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் 492 பயனாளிகளுக்கு ரூ.99.54 இலட்சம் மதிப்பிலான முதியோர் உதவித்தொகை, இயற்கை மரணம் மற்றும் விபத்து நிவாரண நிதியுதவிகள்; மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 26 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.25.99 இலட்சம் மதிப்பிலான பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலிகள்;

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் 27 பயனாளிகளுக்கு ரூ.22.44 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரம், இலவச வீடு, வீட்டுமனைப் பட்டா, கறவை மாடுகள் உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்; பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 35 பயனாளிகளுக்கு ரூ.1.70 இலட்சம் மதிப்பிலான விலையில்லா சலவைப் பெட்டிகள்; குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 4 பயனாளிகளுக்கு ரூ.44.92 இலட்சம் மதிப்பிலான புதிய தொழில்முனைவோருக்கான மானியத்துடன் கூடிய கடனுதவிகள்;

வேளாண்மை – உழவர் நலத்துறை சார்பில் 5 பயனாளிகளுக்கு ரூ.5.65 இலட்சம் மதிப்பிலான சொட்டுநீர் பாசனக் கருவிகள்; தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் 59 பயனாளிகளுக்கு ரூ.95.73 இலட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கான பல்வேறு மானிய நிதியுதவிகள்; தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 3 ஊராட்சி அளவிலான மகளிர் குழுக் கூட்டமைப்புகளுக்கு ரூ.85 இலட்சம் பெருங்கடன் உதவிகள்; தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் சார்பில் 554 பயனாளிகளுக்கு ரூ.18.23 இலட்சம் மதிப்பிலான பணியிடத்து விபத்து மரண நிதியுதவி, கல்வி உதவித்தொகை, ஓய்வூதியம், திருமண உதவித்தொகை உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள்;

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் 6 பயனாளிகளுக்கு ரூ.38,400 மதிப்பிலான இலவச தையல் இயந்திரங்கள்; ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் 780 பயனாளிகளுக்கு ரூ.9.75 கோடி மதிப்பிலான பசுமை வீடுகள், தனிநபர் கிணறு, மாட்டுக்கொட்டகை மற்றும் ஆட்டுக் கொட்டகைகள் அமைப்பதற்கான நிதியுதவி, சலவைப் பெட்டி, முடிதிருத்தும் உபகரணம், தையல் இயந்திரம், புளி பதப்படுத்தும் இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவிகள்; சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் சமூகப் பாதுகாப்புத்துறையின் சார்பில் கோவிட்–19 தொற்றினால் உயிரிழந்த 86 நபர்களின் குழந்தைகளுக்கு ரூ.2.58 கோடி நிவாரணத்தொகை;

என மொத்தம், 2,116 பயனாளிகளுக்கு ரூ.16.47 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிடும் அடையாளமாக 10 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, பழங்குடியினருக்கு விலையில்லா கறவைப் பசுக்களை வழங்கினார்.

சேலம் மாவட்டத்தில்
வளர்ச்சித் திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.09.2021 அன்று சேலம் மாவட்டம், ஆத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில்,

❖ **போக்குவரத்துத்துறை சார்பில்,** ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஆத்தூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டடம்;

❖ **வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறையின் சார்பில்,** தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் ரூ.2 கோடி மதிப்பீட்டில் மேச்சேரியில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம் மற்றும் தம்மம்பட்டியில் ரூ.40 இலட்சத்தில் கட்டப்பட்டுள்ள துணை வேளாண்மை விரிவாக்க மையக் கட்டடம்;

❖ **மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில்,** ரூ.7.10 கோடி மதிப்பீட்டில் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள மாணவர்களுக்கான விடுதிக் கட்டடம், ரூ.3.10 கோடியில் அதிநவீன புற்றுநோய் சிகிச்சைக் கருவி, ரூ.2.90 கோடியில் இருதய அறுவைச் சிகிச்சைக் கருவிகள், ரூ.5.15 கோடியில் சிறுநீரக அறுவைச் சிகிச்சை மற்றும் சிறுநீரக மாற்று அறுவைச் சிகிச்சைக் கருவிகள்;

❖ **வருவாய்த்துறையின் சார்பில்,** ரூ.28 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மேட்டூர் வட்டாட்சியர் குடியிருப்புக் கட்டடம் மற்றும் ரூ.2.12 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சேலம் வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடம்;

❖ **கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில்,** ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் செட்டிக்காடு மற்றும் வெள்ளரிவெள்ளியில் கட்டப்பட்டுள்ள கால்நடை மருந்தகக் கட்டடங்கள்;

❖ **பள்ளிக் கல்வித்துறையின் சார்பில்,** ரூ.1.46 கோடி மதிப்பீட்டில் வி.மேட்டுப்பாளையம் அரசு மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகங்கள், ரூ.21 இலட்சம் மதிப்பீட்டில் பெத்தநாயக்கன்பாளையம் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள அறிவியல் ஆய்வகங்கள் மற்றும் கழிப்பறைகள், ரூ.33 இலட்சம் மதிப்பீட்டில் கெங்கவல்லி வட்டம், கொண்டையம்பள்ளி அரசு மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள அறிவியல் ஆய்வகம், கலை மற்றும் கைவினை அறைக் கட்டடங்கள்;

❖ **ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில்,** ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் வேப்பிலை மற்றும் அ.தாழையூர் ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், ரூ.22 இலட்சம் மதிப்பீட்டில் சாணாரப்பட்டி ஊராட்சியில் அமைக்கப்பட்டுள்ள நர்சரி, ரூ.60 இலட்சம் மதிப்பீட்டில் நடுப்பட்டி, எம்.காளிப்பட்டி ஊராட்சிகள் மற்றும் மன்னநாயக்கன்பட்டி, கோவலன்காடு ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.36 இலட்சம் மதிப்பீட்டில் பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், பெரியகிருஷ்ணாபுரம்

மற்றும் தளவாய்ப்பட்டி ஊராட்சிகளில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைக் கட்டடங்கள், ரூ.42 இலட்சம் மதிப்பீட்டில் வீரபாண்டி ஊராட்சி ஒன்றியம், வேம்படிதாளம் மற்றும் பெருமாகவுண்டம்பட்டி ஊராட்சிகளில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரம் தயாரிக்கும் மையங்கள், ரூ.45 இலட்சம் மதிப்பீட்டில் மல்லமூப்பம்பட்டி மற்றும் வெள்ளரிவெள்ளியில் அமைக்கப்பட்டுள்ள நுண் உரம் தயாரிக்கும் மையங்கள், ரூ.14 இலட்சம் மதிப்பீட்டில் வாழப்பாடி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் கட்டப்பட்டுள்ள கலையரங்கம்;

- **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில்,** நபார்டு திட்டத்தின்கீழ், ரூ.57 இலட்சம் மதிப்பீட்டில் கல்வராயன் மலை, கருமந்துறை அரசு பழங்குடியினர் நல உண்டு உறைவிட துவக்கப்பள்ளியில் கட்டப்பட்டுள்ள ஆசிரியர் குடியிருப்பு, சமையலறை மற்றும் உணவருந்தும் அறை உள்ளிட்ட கட்டடங்கள் என மொத்தம் ரூ.31.99 கோடி மதிப்பிலான 29 முடிவுற்ற பணிகளைத் திறந்துவைத்தார்.

மேலும், வருவாய்த்துறையின் சார்பில், கொண்டலாம்பட்டி, மேட்டூர் மற்றும் தாரமங்கலம் ஆகிய இடங்களில் ரூ.64 இலட்சம் மதிப்பீட்டில் குடியிருப்புடன் கூடிய வருவாய் ஆய்வாளருக்கான அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள் மற்றும் தின்னப்பட்டி. வெள்ளாளபுரம் மற்றும் கோனேரிப்பட்டி ஆகிய இடங்களில் ரூ.48 இலட்சம் மதிப்பீட்டில் கிராம நிருவாக அலுவலருக்கான அலுவலகக் கட்டடம் கட்டும் பணிகள்;

- **போக்குவரத்துத்துறையின் சார்பில்,** ரூ.1.62 கோடி மதிப்பீட்டில் வாழப்பாடி போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகக் கட்டடம் கட்டும் பணி;
- **பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில்,** ரூ.4.24 கோடி மதிப்பீட்டில் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவியர்களுக்கு விடுதிக் கட்டடம் கட்டும் பணி;
- **தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறையின் சார்பில்,** ரூ.1.6 கோடி மதிப்பீட்டில் சேலம் அரசு மகளிர் தொழிற்பயிற்சி நிலைய வளாகத்தில் மண்டல இணை இயக்குநர் பயிற்சி அலுவலகக் கட்டடம் கட்டும் பணி;
- **பள்ளிக் கல்வித்துறையின் சார்பில்,** இடைநிலை கல்வித் திட்டத்தின்கீழ், ரூ.1.31 கோடி மதிப்பீட்டில் ஜலகண்டாபுரம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிக்கு வகுப்பறைகள் கட்டும் பணி;
- **கால்நடைப் பராமரிப்புத்துறையின் சார்பில்,** ரூ.12.13 கோடி மதிப்பீட்டில் தலைவாசல் கால்நடை ஆராய்ச்சிப் பூங்காவில் பொதுமக்கள் தொடர்பு பகுதி மற்றும் விற்பனை வளாகம் அமைக்கும் பணிகள் மற்றும் ரூ.85 இலட்சம் மதிப்பீட்டில் மேச்சேரியில் செம்மறி ஆட்டின திரவ விந்து உற்பத்தி நிலையக் கட்டடம் கட்டும் பணி;
- **நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை – ஆத்தூர் நகராட்சியின் சார்பில்,** தேசிய நகர்ப்புர வாழ்வாதாரத் திட்டத்தின்கீழ் ரூ.95 இலட்சம் மதிப்பீட்டில் ஆத்தூர் அரசு மருத்துவமனை வளாகத்தில் உள் நோயாளிகளின் பாதுகாப்பாளர்களுக்குத் தங்கும் விடுதிக் கட்டடம் கட்டும் பணி என மொத்தம் ரூ.23.28 கோடி மதிப்பிலான 13 புதிய திட்டப் பணிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 29.09.2021 அன்று, சேலம், கருப்பூர், சிட்கோ மகளிர் தொழிற் பூங்காவில் உள்ள பிபி இன்டர்நேஷனல் ஏற்றுமதி நிறுவனத்தில் ஆயத்த ஆடைகள் தயாரிக்கும் பணிகளை பார்வையிட்டார்.

சவ்வரிசி உற்பத்தியில் சேலம் மாவட்டத்தைச் சர்வதேச அளவிற்கு உயர்த்த வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் குறிக்கோள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் சேலம், சேகோசர்வ் வளாகத்தில் மரவள்ளி விவசாயிகள் மற்றும் சவ்வரிசி உற்பத்தி நிறுவனப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடல் – 29.09.2021

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

மரவள்ளிக் கிழங்கு விவசாயம், சவ்வரிசி உற்பத்தி, ஸ்டார்ச் உற்பத்தி ஆகிய துறைகளின் மூலமாக, தொழில்துறையைப் பலப்படுத்தி வருகிற உங்கள் அனைவருக்கும் முதலில் என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் ஆட்சி மாற்றம் நடந்ததற்குப் பிறகு கடந்த நான்கு மாதங்களில் பல்வேறு திட்டங்களை, குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், தேர்தலுக்கு முன்பு மக்களைச் சந்தித்து வாக்கு கேட்டபோது நாங்கள் வாக்குறுதி கொடுத்தோம், தேர்தல் அறிக்கையாக அச்சிட்டு அதைப் புத்தகமாக வெளியிட்டிருக்கிறோம். 500க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை வழங்கினோம். அதில் கிட்டத்தட்ட 200க்கும் மேற்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றி முடித்திருக்கிறோம் என்பதைப் பெருமையோடு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மக்களோடு கருத்தைக் கேட்டு, மக்களுடைய உணர்வுகளைப் புரிந்து அதற்கேற்ற வகையில் இன்றைக்கு நடைபெறக்கூடிய ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பது உங்களுக்கு எல்லாம் நன்றாகத் தெரியும். நம்முடைய மிகமிக முக்கியமான கொள்கையாகச் சொன்னதை நிறைவேற்ற வேண்டும் என்ற அந்தக் கொள்கையை இன்றைக்கு நாங்கள் கடைப்பிடித்துக் கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லவேண்டுமென்றால், இதுவரைக்கும் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் ஒரு வரலாற்றுச் சிறப்பாக ஒரு தனி பட்ஜெட்டை சட்டமன்றத்தில் தாக்கல் செய்து, அதையும் வெளியிட்டிருக்கிறோம் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதை வெளியிட்டபோதுகூட, ஏதோ தன்னிச்சையாக நானோ அல்லது அமைச்சர்களோ அல்லது அங்கிருக்கக்கூடிய அதிகாரிகளோ மட்டும் கலந்துபேசி, முடிவெடுத்து அந்த

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலம், ஆத்தூர் பழனியாண்டவர் சேகோ ஆலையைப் பார்வையிட்டார்.

பட்ஜெட்டைத் தாக்கல் செய்யவில்லை. உள்ளபடியே உணர்வுகளைப் புரிந்து அந்த அமைப்புகளின் நிருவாகிகளை அழைத்து முதல் கட்டமாக அந்தத் துறையின் அமைச்சரும் அல்லது அந்தத் துறையிலிருக்கும் அதிகாரிகளும் மாவட்டம், மாவட்டமாகச் சென்று அந்தந்த மாவட்டங்களில் இருக்கக்கூடிய விவசாயப் பெருங்குடி மக்களை, பிரதிநிதிகளை, நிருவாகிகளை, அந்தச் சங்கங்களைச் சார்ந்திருக்கக்கூடிய தோழர்களையெல்லாம் ஒன்றுகூட்டி, அவர்களோடு கலந்துபேசி, அவர்களுடைய கோரிக்கைகளையெல்லாம் கேட்டு, அதற்குப் பிறகுதான், சென்னையில் அவர்களை அழைத்துப் பேசி முடிவெடுத்து அதற்குப் பிறகுதான் அந்த பட்ஜெட்டைத் தயாரித்துச் சட்டமன்றத்தில் தாக்கல் செய்தோம்.

இப்போது உங்களுடைய எண்ணங்களை, உங்களுடைய கோரிக்கைகளைக் கேட்பதற்காகத்தான் நான் இங்கு வந்திருக்கிறேன். கேட்பது மட்டுமல்ல, அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றித் தருவதற்காகவும் உறுதி எடுத்துக்கொள்ளக் கூடிய நிலையில்தான் நான் வந்திருக்கிறேன்.

சவ்வரிசி உற்பத்தியாளர்களுடைய கோரிக்கையை ஏற்று புதிய சேமிப்புக் கிடங்குகள் அமைக்கப்படும் என்று சட்டமன்றத்தில் நாம் ஏற்கெனவே அறிவித்திருக்கிறோம். சவ்வரிசி உணவு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும் என்ற கோரிக்கையை நீங்கள் ஏற்கெனவே வைத்திருக்கிறீர்கள், அதையும் தாண்டி, கலப்படத்தைத் தடுக்க, கண்காணிக்க ஒரு குழு அமைக்கப்பட வேண்டும், பொதுமக்களுக்கு நியாயமான விலையில் அது தரப்பட வேண்டும் எனவும் சொல்லியிருக்கிறோம். இந்தக் கோரிக்கைகளையெல்லாம் நிச்சயமாகப் படிப்படியாக நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் முதலில் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி அமைந்து இந்த நான்கு மாதங்களில் தொழில்துறை இன்றைக்கு எந்தளவுக்குப் புத்துணர்வு அடைந்திருக்கிறது என்று நீங்கள் நன்றாக உணர்ந்திருப்பீர்கள். அதில் குறிப்பாக இரண்டு முக்கிய மாநாடுகளை நாம் நடத்தினோம். முதலீட்டாளர்கள் முதல் முகவரி மாநாடு சென்னையில் நடத்தி அதில் தொழில்துறையின் முன்னணியினர் எல்லாம் அதில் கலந்துகொண்டு, அதைச் சிறப்பித்திருக்கிறார்கள். தெற்கு ஆசியாவிலேயே தொழில் புரிவதற்கு உகந்த மாநிலமாகத் தமிழ்நாட்டை உயர்த்துவதுதான் என்னுடைய இலட்சியம் என்று அந்த மாநாட்டில் நான் உறுதியாகச் சொன்னேன். அதற்காகத் தொழில் புரிவதைச் சிறிது எளிமையாக்கி ஒற்றைச் சாளர முறை ஆரம்பித்து, இணையதளம் 2.0வை நான் அன்றைக்குத் தொடங்கி வைத்தேன்.

புதிய தொழில்களைத் தமிழ்நாட்டை நோக்கி இழுக்க வேண்டுமென்றால், உட்கட்டமைப்பை உலகத்தரம் வாய்ந்ததாக நாம் அமைத்தாக வேண்டும். அதற்கான பணிகளையெல்லாம் நாங்கள் தொடங்கியிருக்கிறோம். அந்த மாநாட்டில்தான் புதிய தொழில்களைத் தொடங்குவதற்கு 35 நிறுவனங்களுடன் தமிழ்நாடு அரசு புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்துப் போட்டிருக்கிறோம். அதன்மூலமாக ரூ.17,141 கோடி முதலீடு ஈர்க்கப்பட்டிருக்கிறது. இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், இதன்மூலமாக 55,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலையையும் ஏற்படுத்தப் போகிறோம்.

அதற்கடுத்து, “ஏற்றுமதியில் ஏற்றம் – முன்னணியில் தமிழ்நாடு” என்று அந்த மாநாட்டிற்குத் தலைப்பு வைத்து அடுத்த மாநாட்டை நடத்தினோம். அந்த மாநாட்டின் மூலமாக, ரூ.2,180 கோடி மதிப்பிலான 25 புதிய திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இதன்மூலமாக 42,145 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்க இருக்கிறது. இப்படிப் பல்வேறு நிறுவனங்களை நாம் தொடங்கவிருக்கிறோம்.

ரூ.1.93 இலட்சம் கோடி ஏற்றுமதியுடன், இந்தியாவிலேயே, தமிழ்நாடு மூன்றாவது பெரிய ஏற்றுமதி மாநிலமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. இதை மூன்றாவது இடத்திலிருந்து முதலிடத்திற்குக் கொண்டுவருவதுதான் இந்த ஆட்சியின் இலட்சியமாக அமைந்திருக்கிறது.

அதற்காகத் தமிழ்நாடு ஏற்றுமதி மேம்பாட்டுக் கொள்கையை வெளியிட்டிருக்கிறோம். மாநில ஏற்றுமதி மேம்பாட்டுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. குறு, சிறு மற்றும் நடுத்தர ஏற்றுமதி நிறுவனக் கையேட்டையும் வெளியிட்டிருக்கிறோம்.

திருப்பூர், கரூர், மதுரை, ஆம்பூர், தூத்துக்குடி, பொள்ளாச்சி, காஞ்சிபுரம், சென்னை, கோவை, ஒசூர் ஆகிய பத்து ஏற்றுமதி மையங்கள் மேம்படுத்தப்படவிருக்கின்றன.

இதுபோன்ற ஏராளமான புதிய முன்னெடுப்புகளை அறிவித்திருக்கிறோம். தமிழ்நாட்டில் உற்பத்தியாகக் கூடிய பொருள்களும் அதிகமாக வேண்டும். அதேபோல, ஏற்றுமதி ஆகக்கூடிய பொருள்களும் அதிகமாக வேண்டும். அதற்கான அனைத்துத் திட்டமிடுதல்களையும் தமிழ்நாடு அரசு செய்து கொண்டிருக்கிறது.

நகரம், கிராமம் என்கிற வேறுபாடு, பாகுபாடு இல்லாமல், அந்த மாவட்டம், இந்த மாவட்டம் என்று வேற்றுமை இல்லாமல், அந்தத் தொழில், இந்தத் தொழில் என்று பாகுபாடு காட்டாமல், பெருந்தொழில், சிறு தொழில் என்றெல்லாம் பேதம் பார்க்காமல் தமிழ்நாடு அரசு தன்னுடைய தொழில் கொள்கையை வகுத்து வைத்திருக்கிறது.

தொழில் அதிபர்களும் எந்தப் பேதமும் வேற்றுமையும் பார்க்காமல் அரசின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சவ்வரிசி தொழிலைப் பொறுத்தவரை, இந்தியாவிலேயே முன்னோடியாக விளங்கக்கூடிய சேலம் மாவட்டத்தைச் சர்வதேச அளவிற்கு உயர்த்த வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசினுடைய குறிக்கோள். இதை நிறைவேற்றுவதற்கு மரவள்ளி உழவர்களும், சவ்வரிசி தொழிற்சாலைகளும் இணைந்து செயல்பட்டால்தான் முடியும். இதற்கான முயற்சிகளுக்கு நிச்சயமாக, உறுதியாகச் சொல்கிறேன், எனது அரசல்ல என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன். இது நமது அரசு. எனவே, உங்களுடைய முயற்சிக்கு நம்முடைய அரசு முழு அளவிற்கு ஒத்துழைப்புத் தரும் என்ற அந்த உறுதியை மட்டும் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி என்னுடைய உரையை நிறைவு செய்துகொள்கிறேன்.

முன்னதாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், சேலம் ஸ்டார்ச் சேகோ உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் லிமிடெட் வளாகத்தில் ரூ.1.26 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மின்னணு ஏல மையம் மற்றும் தமிழ்நாடு புத்தாக்கத் திட்டத்தின் கீழ், ரூ.33.60 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள நேரடி விற்பனை முனையக் கட்டடம் ஆகியவற்றைத் திறந்துவைத்தார்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்ட சுத்திகரிப்பு நிலையத்தில் ஆய்வு!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 30.09.2021 அன்று தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல், யானைப்பள்ளத்தில், ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்ட நீர் சுத்திகரிப்பு நிலையத்தைப் பார்வையிட்டுக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், ஒகேனக்கல் காவிரி ஆற்றிலிருந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான தலைமை நீரேற்று நிலையத்தினைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட மக்களுக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் பொருட்டு ஒகேனக்கல் குடிநீர் வழங்கல் மற்றும் புளோரைடு பாதிப்பு குறைப்புத் திட்டம் ஜப்பான் பன்னாட்டுக் கூட்டுறவு நிறுவனத்தின் நிதி உதவியாக ரூ.1,585.60 கோடியும், மாநில அரசின் குறைந்தபட்சத் தேவைத் திட்ட நிதி உதவியாக ரூ.307.48 கோடியும் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் பங்குத் தொகையாக ரூ.35.72 கோடியும், என மொத்தம் ரூ.1,928.80 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த அனுமதி வழங்கப்பட்டது. இத்திட்டம், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 26.02.2008 அன்று அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, அப்போதைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சராகப் பொறுப்பு வகித்த திரு.மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் ஜப்பான் நிதி நிறுவனத்தின் மூலம் நிதி ஒதுக்கீடு ஆணைப் பெறப்பட்டுத் திட்டப் பணிகள் 10.02.2010 அன்று தொடங்கப்பட்டு, சிறப்பாகச் செயல்பட்டு மக்கள் பயன்பாட்டிலிருந்து வருகின்றது.

தருமபுரி மாவட்டத்திலுள்ள தருமபுரி நகராட்சி, 10 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 3,245 ஊரகக் குடியிருப்புகளுக்கும் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டத்திலுள்ள ஒசூர் மாநகராட்சி, கிருஷ்ணகிரி நகராட்சி, 6 பேரூராட்சிகள் மற்றும் 10 ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள 4,337 ஊரகக் குடியிருப்புகளுக்கும், என மொத்தம், 1 மாநகராட்சி, 2 நகராட்சிகள், 16 பேரூராட்சிகள் மற்றும் 7,582 ஊரகக் குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு ஒகேனக்கல் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், தருமபுரி மாவட்டத்தின் மிக அதிக உயரம் உள்ள பகுதிகளில் வசித்து வரும் மலைவாழ் மக்களும் பயன்பெற வேண்டும் என்ற சீரிய நோக்கில், பாறைப் பகுதிகள், உயரமான பகுதிகள், வனப்பகுதிகளில் வனவிலங்குகளால் ஏற்படும் அபாயங்கள் ஆகியவற்றையும் கடந்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அவ்வகையில், கெலமங்களம் ஒன்றியத்திலுள்ள, பெட்டமுகிலாளம் என்ற குக்கிராமம் கடல் மட்டத்திலிருந்து 1,245.186 மீட்டர் உயரத்திலுள்ளது. ஒகேனக்கலில் தண்ணீர் எடுக்கப்படும் ஆற்றுப்படுகை மட்டம் 246.650 மீட்டர் ஆகும். ஏறத்தாழ 1,000 மீட்டர்

உயரத்திற்கு, பல்வேறு நிலைகளில் நீரேற்றத்திற்குப் பின் குடிநீர் கொண்டு செல்லப்படுகிறது.

இத்திட்டப் பணிகள் முடிவுற்று, தற்பொழுது 1 மாநகராட்சி, 2 நகராட்சிகளுக்கும், 16 பேரூராட்சிகளுக்கும் மற்றும் 7,582 ஊரகக் குடியிருப்புகளுக்கும் தற்பொழுது இடைநிலைத் திட்ட வடிவமைப்பின்படி குடிநீர் வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையில் ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தில் தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் சில பகுதிகளில் குடிநீர் சரிவரக் கிடைக்கப்பெறவில்லை எனப் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

- 2021ஆம் ஆண்டிற்கு வடிவமைக்கப்பட்ட குடிநீர் அளவான 127 மில்லியன் லிட்டருக்குப் பதிலாகத் தற்போதுள்ள மக்கள்தொகை அதிகரிப்பைக் கருத்தில்கொண்டு 145 மில்லியன் லிட்டராக ஒகேனக்கல் குடிநீர் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.
- புளோரைடு பாதிக்கப்பட்டதாகக் கண்டறியப்பட்ட 153 குடியிருப்புகளுக்குக் கூடுதலாக 7.70 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.
- அங்கீகாரம் இல்லாத 208 குடிநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

மேலும், சாலை விரிவாக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் குடிநீர்க் குழாய்கள் சேதமடைந்து, தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் 819 குடியிருப்புகளில் நீர் செல்ல இயலாத நிலை இருந்தது. இதில் 283 குடியிருப்புகளுக்குக் குடிநீர்க் குழாய்கள் சீரமைக்கப்பட்டுத் தற்போது குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. மீதமுள்ளவற்றில் 135 குடியிருப்புகளில் பணிகள் நடைபெற்று வருகிறது. 401 குடியிருப்புகளின் குடிநீர்ப் பணிகளுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளது.

இப்பணிகள் அனைத்தையும் ஆய்வு செய்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், இப்பணிகளைத் துரிதப்படுத்தி, விரைந்து முடித்து, இக்குடியிருப்புகளுக்குக் குடிநீர் வழங்க உத்தரவிட்டார்கள்.

ஈரோடு, சம்பத் நகர் பிரதான சாலை "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" ஆக மாற்றம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" எனப் பெயர் சூட்டி, பெயர்ப் பலகையினைக் காணொலிக் காட்சி வாயிலாகத் திறந்து வைத்தார் – 04.10.2021

ஈரோடு மாவட்டத்திலுள்ள சென்னிமலையில் 1904ஆம் ஆண்டு நாச்சிமுத்து, கருப்பாயி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த திருப்பூர் குமரன் என்று அழைக்கப்படும் குமாரசாமி, திருப்பூரில் 1932ஆம் ஆண்டு நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்றுத் தேசத்திற்காகத் தன் உயிரைத் துறந்தார். அவரைப் பெருமைப்படுத்தும் விதமாக ஈரோடு மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில், ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலைக்குத் "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" எனப் பெயர் மாற்றம் செய்ய ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் வழியாக அரசின் அனுமதி பெறத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் பிறந்தநாளைச் சிறப்பிக்கும் பொருட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சம்பத் நகர் பிரதான சாலைக்குத் "தியாகி குமரன் சாலை, சம்பத் நகர்" எனப் பெயர் சூட்டி 03.10.2021 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள் திருப்பூர் மாவட்டம், சுதந்திரப் போராட்டத் தியாகி திருப்பூர் குமரன் நினைவு மண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதியில் திட்டப் பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.09.2021 அன்று கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டப் பகுதிகளில் ரூ.83.55 இலட்சம் மதிப்பீட்டில் நிறைவுற்ற திட்டப்பணிகளைத் திறந்துவைத்தார்.

மாதவரம் நெடுஞ்சாலை, செயின்ட் மேரிஸ் பள்ளிக்கு அருகில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.30 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம்,

பல்லவன் சாலையில் ரூ.24.60 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலைக் கடை மற்றும் சீனிவாசா நகர் 3ஆவது குறுக்குத் தெருவில் ரூ.28.95 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள பெருநகரச் சென்னை மாநகராட்சி சிறுவர் விளையாட்டுத் திடல் மற்றும் பூங்கா ஆகியவற்றைத் திறந்துவைத்து, குழந்தைகளுக்கு இனிப்புகள் வழங்கி, சிறுவர், சிறுமியர்களுடன் உரையாடினார்.

அனிதா அச்சீவர்ஸ் அகாடமியில் Tally பயின்ற 157 மாணவ, மாணவியருக்கு மடிக்கணினிகளையும், சான்றிதழ்களையும் வழங்கினார்.

மேலும், கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில், பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியருக்குக் கல்வி உதவித்தொகை, தொகுதி மக்களுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மாவு அரவை இயந்திரங்கள், இஸ்திரிப் பெட்டிகள், தள்ளுவண்டிகள், மீன்பாடி வண்டிகள் என மொத்தம், 167 பயனாளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நலத்திட்ட உதவிகளையும் வழங்கினார்.

சென்னை கொளத்தூரில் கலையரங்கம், பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.10.2021 அன்று,

கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட செம்பியம், ரங்கசாயி தெரு, சென்னை நடுநிலைப்பள்ளியில் ரூ.15.31 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள கலையரங்கத்தைத் திறந்துவைத்து, மாணாக்கர்களுக்குக் கல்வி உபகரணங்களை வழங்கி, ஆசிரியர்களைப் பாராட்டினார்.

செம்பியம், பார்த்தசாரதி தெருவில் ரூ.26.18 இலட்சம் செலவில் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள், இறகுப் பந்து மைதானம் உள்ளிட்ட வசதிகளுடன் மேம்படுத்தப்பட்ட விளையாட்டுத் திடலைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

கொளத்தூர், எவர்வின் பள்ளியில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் தற்காலிகமாக அமையவுள்ள அரசு கலைக் கல்லூரிக்கான கட்டடங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

திரு.வி.க. நகர், 5ஆவது தெருவில் 7,500 சதுர அடிப் பரப்பளவில், ரூ.56 இலட்சம் செலவில் செயற்கை நீரூற்று, சிறுவர் விளையாட்டுக் கருவிகள், யோகா கூடம், நடைபாதை வசதி உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள கலைஞர் மு.கருணாநிதி பூங்காவைத் திறந்துவைத்துப் பார்வையிட்டார்.

கொளத்தூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்குக் கல்வி உபகரணப் பொருட்கள் மற்றும் கல்வி உதவித்தொகை, தொகுதி மக்களுக்கு மருத்துவ உதவித்தொகை, திருமண உதவித்தொகை, மூன்று சக்கர மோட்டார் வாகனங்கள், தள்ளுவண்டிகள், காதுகேட்கும் கருவிகள், மீன்பாடி வண்டிகள் என 48 பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

வடகிழக்குப் பருவமழை

முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.09.2021 அன்று சென்னை, காந்தி மண்டபம் சாலை, இந்திரா நகர், திருவான்மியூர், பள்ளிக்கரணை, வேளச்சேரி ஆகிய இடங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் வடகிழக்குப் பருவமழை, வெள்ளத் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகள், தூர்வாரும் பணிகள், ஆகாயத் தாமரைகளை அகற்றும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

சென்னை, காந்தி மண்டபம் சாலையில் மழைக்காலங்களில் தேங்கி போக்குவரத்திற்கு மிகவும் இடையூறாக உள்ள வெள்ள நீரையும், அருகில் உள்ள கேன்சர் இன்ஸ்டிட்யூட், அண்ணா பல்கலைக்கழகம் ஆகிய இடங்களிலும் தேங்கும் மழைநீரையும் அகற்றும் வகையில் 1,516 மீட்டர் நீளத்திற்கு ரூ.4.15 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால்கள் தற்போது கட்டப்பட்டுள்ளன. வடிகால்கள் மூலம் வரும் மழைநீர் ஒரு பெரிய கீழ்நிலைத் தொட்டியில் சேமிக்கப்பட்டுப் பின்பு சிறு கால்வாய் வழியாகப் பக்கிங்காம் கால்வாய்க்கு வெளியேற்றத் தற்பொழுது வழிவகை செய்யப்பட்டுள்ளது. இக்கால்வாய்களில் சேர்ந்துள்ள வண்டல்கள், நவீன ஹைட்ராலிக் மற்றும் அதிக உறிஞ்சும் திறன் மற்றும் ஜெட்டிங் வசதி கொண்ட இயந்திரம் மூலம் அகற்றப்பட்டு வரும் பணியினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும், பெருநகரச் சென்னை மாநகராட்சியின் சார்பில் அனைத்து வண்டல் வடிகட்டும் தொட்டிகளைத் (Silt Catch Pit) தூய்மைப்படுத்தி, மழைநீர் வடிகால்கள் சுத்தம் செய்யும் பணியினையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார். இப்பணிகள் அனைத்தும் ஒரு வாரத்திற்குள் முடிக்கப்பட்டு, இப்பகுதியில் வெள்ள நீர் தேங்கா வண்ணம் துரித நடவடிக்கைகளை எடுத்திட அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, இந்திரா நகர் எம்.ஆர்.டி.எஸ். இரயில் நிலையம் மற்றும் திருவான்மியூர் லேட்டிஸ் பாலத்தின் அருகில் பக்கிங்காம் கால்வாயில் ரூ.26.50 இலட்சம் செலவில் ரோபோடிக் எக்ஸ்கவேட்டர் மற்றும் மிதக்கும் ஆம்பிபியன் இயந்திரம் மூலம் ஆகாயத் தாமரைகள் அகற்றும் பணிகள் மற்றும் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 28.09.2021 அன்று வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக நீர்வள ஆதாரத்துறை, நெடுஞ்சாலைத்துறை, பெருநகரச் சென்னை மாநகராட்சி மற்றும் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் ஆகிய துறைகளின் சார்பில் வடசென்னைப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் நீர்நிலைகள் மற்றும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பெருநகரச் சென்னை மாநகராட்சியின், இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பூந்தமல்லி நெடுஞ்சாலையில், நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டுவரும் மழைநீர் வடிகால் தூர்வாரும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ஓட்டேரி நல்லா கால்வாயில் தேங்கியுள்ள குப்பைகள் மற்றும் கழிவுகளை ரூ.44 இலட்சம் மதிப்பில் கனரக வாகனங்கள் மற்றும் மிதவை இயந்திரங்கள் கொண்டு அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திரு.வி.க. நகர் மண்டலம், ஸ்ட்ரான்ஸ் ரோடு மற்றும் கொண்ணூர் நெடுஞ்சாலை சந்திக்கும் இடத்தில் நீர்வள ஆதாரத் துறையின் மூலம் ஓட்டேரி நல்லா கால்வாயில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூர்வாரும் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அண்ணா நகர் மண்டலம், பாபா நகரில் மழைக்காலங்களில் தேங்கும் வெள்ளநீரையும் மற்றும் அருகில் உள்ள பூம்புகார் நகர், ஜானகிராம் காலனி, எஸ்.ஆர்.பி. நகர், சீனிவாசா நகர், செந்தில் நகர், உமாமகேஷ்வரி நகர், செல்வி நகர், அஞ்சுகம் நகர், சரோஜினி நகர், ஐயப்பா நகர், கே.கே. ஆர்.கார்டன், பழனியப்பா நகர் ஆகிய இடங்களில் தேங்கும் மழைநீரையும் வெளியேற்றும் வகையில் 33 கி.மீ. நீளத்திற்கு கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் ரூ.102.18 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மாதவரம் மண்டலம், பிரிட்டானியா நகரில் மழைக்காலங்களில் தேங்கும் வெள்ளநீரையும் மற்றும் கலெக்டர் நகர், செந்தில் நகர், வேலம்மாள் நகர், INTUC நகர், பிர்லா அவென்யூ, ரங்கா அவென்யூ, ராசி நகர் ஆகிய இடங்களில் தேங்கும் மழைநீரையும் வெளியேற்றும் வகையில் 31 கி.மீ. நீளத்திற்கு கொசஸ்தலையாறு வடிநிலப்பகுதியில் ஆசிய வளர்ச்சி வங்கியின் நிதி உதவியுடன் ரூ.122.85 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடிக்க அலுவலர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து மணலி மண்டலம், ஆமுல்லைவாயில் பகுதியில் அமைந்துள்ள புழல் ஏரியின் உபரிநீர் கால்வாயில், நீர்வள ஆதாரத் துறை சார்பில் ரூ.87.50 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் ஆகாயத் தாமரை மற்றும் நீர்த் தாவரங்களை அகற்றும் பணிகளையும், உபரிநீர் கால்வாயின் பாலங்கள் சீர்செய்யும் பணிகளையும், கொசஸ்தலை ஆற்றின் கரைகளைப் பலப்படுத்தும் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

பின்னர், தண்டையார்பேட்டை மண்டலம், கொடுங்கையூர் கால்வாயில் தேங்கியுள்ள சேறு, சகதி, ஆகாயத்தாமரை மற்றும் மிதக்கும் தாவரங்களை ரொபாடிக் மல்டிபர்பஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்களைக் கொண்டு அகற்றும் பணிகளையும், கேப்டன் காட்டன் கால்வாய் மற்றும் கொடுங்கையூர் கால்வாய் இணையும் இணைப்புக் கால்வாயில் ஆம்பிபியன் வாகனங்கள் கொண்டு ஆகாயத்தாமரை அகற்றும் பணி மற்றும் தூர்வாரும் பணிகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், வடகிழக்குப் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாகச் சென்னை மாநகரில் மேற்கொள்ளப்பட்டுவரும், மழைநீர் வடிகால்கள் தூர்வாருதல் மற்றும் நீர் நிலைகளில் மிதக்கும் தாவரங்களை அகற்றி, தூர்வாரும் பணிகளைப் பருவமழைக் காலத்திற்கு முன்னதாகவே விரைந்து முடிக்க அறிவுறுத்தினார்.

செப்டம்பர் 24 : டாக்டர் சிவந்தி ஆதித்தனார் பிறந்தநாள்

சாதனையாளர்

இந்தியத் துணைக்கண்டத்தில் பத்திரிகை, விளையாட்டு, கல்வி, தொழில் முதலான பல்வேறு துறைகளிலும் பெரும் சாதனையாளராகத் திகழ்ந்தவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தனார் அவர்கள்.

பத்திரிகை உலகில் பெரிய திருப்பத்தை ஏற்படுத்திய சி.பா.ஆதித்தனார் அவர்கள், 1959ஆம் ஆண்டு தினத்தந்தியின் நிருவாகப் பொறுப்பை பா. சிவந்தி ஆதித்தனார் அவர்களிடம் ஒப்படைத்தார். சிவந்தி ஆதித்தனாரின் நிருவாகத் திறமையால் 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தொடர்ந்து சிறப்பாகச் செயல்பட்டு, சிறப்பான நாளிதழ் என்ற பெருமையைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது.

திருச்செந்தூரில் ஆதித்தனார் நிறுவிய கல்லூரியைப் பல்கலைக்கழகம் அளவுக்குச் சிவந்தி ஆதித்தன் உயர்த்தினார்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் 1994ஆம் ஆண்டிலும், அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 1995ஆம் ஆண்டிலும், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 2004ஆம் ஆண்டிலும், டாக்டர் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது.

1982 மற்றும் 1983ஆம் ஆண்டும் தொடர்ந்து இரண்டு முறை சென்னை மாநகர செரீப் ஆக நியமிக்கப்பட்டார்.

இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் வாழ்நாள் தலைவராக 2000ஆவது ஆண்டு நவம்பர் 3ஆம் தேதி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இலக்கியம் மற்றும் கல்வித்துறையில் சிறந்த சேவை புரிந்ததற்காகச் சிவந்தி ஆதித்தனுக்குக் கடந்த 2008ஆம் ஆண்டில் மத்திய அரசு பத்மஸ்ரீ விருது வழங்கிச் சிறப்பித்தது.

அக்டோபர் 4 :
தியாகி சுப்பிரமணிய சிவா பிறந்தநாள்

“எனது தர்மம்”

“எப்பொழுது எங்கே சுதந்திரம்
நசுக்கப்படுகிறதோ,
நசுக்கப்பட முயற்சிக்கப்படுகிறதோ
அப்பொழுதங்கே என்னால் முடிந்த வன்மையுடன்
எனது எதிர்ப்புக்குரலைக் கிளப்புவதும், சிரமப்பட்டுச்
சுதந்திரம் ஒளிர்விடப் பாடுபடுவதும் எனது தர்மமாகும்.
உலகிலே அடிமைப்பட்டுக் கிடக்கும் சகல மக்களுக்கும்
நியாயத்தை எடுத்துரைப்பது எனது தர்மமாகும்.”

நன்றி : *சிவாவின் கடிதங்கள் என்னும் நூலிலிருந்து...*

பகுத்தறிவுக் கவிராயர்

தமிழ்த் திரைப்பாடல் உலகின் முடிசூடா மன்னராகத் திகழ்ந்த உடுமலை நாராயணகவி அவர்கள், திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், பூளவாடி கிராமத்தில் 25.09.1899இல் பிறந்தார். இவரது இயற்பெயர் நாராயணசாமி,

இவர் தனது 15ஆவது வயதில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரைச் சந்தித்த பிறகு அவர் மனதில் கனன்று கொண்டிருந்த தமிழ் ஆர்வம் சுடர்விட்டுப் பிரகாசிக்கத் தொடங்கியது. பொதுவுடமை, சமத்துவம், பெண் விடுதலை, சுயமரியாதை போன்ற முற்போக்கான சிந்தனைகளைப் பெரியாரிடமிருந்து கற்றறிந்தார். இவருக்குத் தமிழ் மீது இருந்த ஈடுபாட்டால் மதுரை சென்று நாடகத்துறையில் ஈடுபட்டார். இதில், கிடைத்த நற்பெயர், புகழ் மற்றும் பாராட்டின் விளைவாகச் சென்னை சென்று திரைப்படங்களுக்குப் பாடல்கள் எழுதினார். கருத்தாழம் மிக்க இவரது பாடல்கள் மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பினைப் பெற்றன.

26.06.1944இல் திருச்சியில் நடைபெற்ற அண்ணாவின் ஓர் இரவு நாடகத்தில் இவரது பாடல் இடம் பெற்றது. இவரது பாடல்களில் கண்ணகி, மகாமாயா, கிருஷ்ணபக்தி, வேலைக்காரி, சொர்க்கவாசல், பராசக்தி முதலான பல்வேறு திரைப்படங்களின் பாடல்கள் மிகவும் புகழ்பெற்றவை. இவரது பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 22.04.1967ஆம் ஆண்டு சங்கீத நாடக சங்கத்தின் சார்பில் ‘சாகித்ய ரத்னா’ விருது வழங்கப்பட்டது. அதே ஆண்டில் தமிழ்நாடு அரசு இயல், இசை, நாடக மன்றம் சார்பில் ‘கலைமாமணி’ விருது வழங்கிச் சிறப்பித்தது.

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ. சாமிநாதன் அவர்கள் மற்றும் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் பகுத்தறிவுக் கவிராயர் உடுமலை நாராயணகவி அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு 25.09.2021 அன்று, திருப்பூர், உடுமலைப்பேட்டை மணிமண்டபத்திலுள்ள அன்னாரின் திருவுருவச்சிலைக்கு மாலையணிவித்து மரியாதை செலுத்தினார். மேலும், உடுமலை நாராயணகவி அவர்களின் வாரிசுதாரருக்குப் பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தனர்.

செப்டம்பர் 29: **சென்னை மேயர் சிவராஜ் பிறந்தநாள்**

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைக்காக உழைத்தவர்

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகப் போராடிய தமிழ்நாட்டுத் தலைவர்களுள் மேயர் சிவராஜ் அவர்கள் முதன்மையானவர் ஆவார். இவர் 1892ஆம் ஆண்டு பிறந்தார்.

சென்னை மாநிலக் கல்லூரியில் உயர்கல்வி பயின்று 1911ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பின்னர், சென்னை சட்டக்கல்லூரியில் சட்டம் பயின்று 1915ஆம் ஆண்டு வழக்குரைஞரானார். அதனையடுத்துச் சென்னை சட்டக்கல்லூரியில் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

ஆதிதிராவிட மகாஜன சபை, நீதிக்கட்சி, பெரியாரின் சுயமரியாதை இயக்கம் ஆகிய இயக்கங்களில் பணியாற்றி ஜாதி ஒழிப்பு, இந்தி எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டார்.

1942ஆம் ஆண்டு அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தின் முதல் தலைவராக மேயர் என். சிவராஜ் அவர்கள் இருந்தார். அதன் பின்னர் டாக்டர் அம்பேத்கர் அவர்கள் அகில இந்திய குடியரசுக் கட்சியை அமைத்தபோது, அக்கட்சியின் முதல் தலைவராக 1959ஆம் ஆண்டு என்.சிவராஜ் அவர்கள் பொறுப்பேற்றுத் தமது இறுதிக்காலம் வரை அப்பொறுப்பில் தொடர்ந்தார்.

1957ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தலில் செங்கல்பட்டுத் தொகுதியில் போட்டியிட்டு வென்று 1961ஆம் ஆண்டு வரை நாடாளுமன்ற மக்களவை உறுப்பினராகப் பணியாற்றினார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் உயர்வுக்காகப் பாடுபட்ட மேயர் என்.சிவராஜ் அவர்கள் 29.09.1964 அன்று இயற்கை எய்தினார்.

முன்னாள் மேயர் சிவராஜ் அவர்களின் 130ஆவது பிறந்தநாளை முன்னிட்டு 29.09.2021 அன்று, சென்னை தங்கச் சாலை சந்திப்பில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச்சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

செப்டம்பர் 27 : சி.பா. ஆதித்தனார் பிறந்தநாள்

தமிழ் இதழியலின் முன்னோர்



தமிழ் இதழியலின் முன்னோர்
சி.பா.ஆதித்தனார் அவர்களின்
117ஆவது பிறந்தநாள்!
தினத்தந்தி தொடங்கி
எளிய மக்களுக்கு எழுத்தறிவித்து
உலக நடப்புகளை அறியத்தந்த அவர்;
கழக அரசில் பேரவைத் தலைவராகவும்,
அமைச்சராகவும்
திறம்படச் செயலாற்றியவர்.
அறம் பிறழாது செய்தி வெளியிடுவதே
அவரைப் போற்றுவதாகும்!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு சமூக நலன்–மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதாஜீவன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் ஆகியோர் ‘தமிழர் தந்தை’ சி.பா.ஆதித்தனார் அவர்களின் 117ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 27.09.2021 அன்று, எழும்பூரில் அமைந்துள்ள அன்னாரது சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

வெளிநாடு வாழ் தமிழர்களின் நலன் காக்க "புலம்பெயர் தமிழர் நல வாரியம்"

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 06.10.2021

உலகளாவிய இனம் ஒன்று உண்டென்றால் அது தமிழினம்தான். தொன்மைமிக்க இந்தத் தமிழினம், பரவிய நாடுகளின் பட்டியல் பெரிது. தொல் பழமை நாகரிகப் பாரம்பரியம் உள்ள சில இனங்களில் தமிழினமும் ஒன்று. அப்படிக் கடல் கடந்து, நாடுகள் கடந்து வாழும் வெளிநாடு வாழ் தமிழினத்துக்கு நம்பிக்கை தரும் வகையில் ஒரு முக்கிய அறிவிப்பு வெளியிடப்படுகிறது.

உலகின் பெரும்பான்மை நாடுகளில் வாழும் இனமாக நம்முடைய தமிழினம்தான் இருக்கிறது. 30க்கும் மேற்பட்ட நாடுகளில் அதிக எண்ணிக்கையிலும், 60க்கும் மேற்பட்ட நாடுகளில் குறைந்த எண்ணிக்கையிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். வணிகம் செய்வதற்காகச் சென்றார்கள். வாழ்வதற்காகச் சென்றார்கள். வேலைகள் தேடிச் சென்றார்கள். கடற்கோள்களில் இருந்து தப்புவதற்காகச் சென்றார்கள். தப்பிச் செல்வதற்காகச் சென்றார்கள். புதிய இடங்களை அறிவதற்காகச் சென்றார்கள். இப்படிப் பலருக்கும் பல நோக்கங்கள் இருந்திருக்கும். இத்தகைய இடப்பெயர்வுகள் காலம் காலமாக நடந்து வருகின்றன.

எங்கே தமிழர்கள் வாழ்ந்தாலும், அவர்களுக்குத் தமிழ்நாடுதான் தாய்வீடு. அவர்கள் மீது அன்பு செலுத்துவது மட்டுமல்ல, அரவணைப்பதும், பாதுகாப்பதும் தாய்த் தமிழ்நாட்டின் கடமையாகும். இப்படிப் பல்வேறு நாடுகளுக்குச் சென்று வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்கவும், உதவிகளைச் செய்யவும் தமிழ்நாடு அரசு முன்வந்துள்ளது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் உளப்பூர்வமான மற்றும் பல்வேறு தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடு வாழ் தமிழர் நலச்சட்டம் 2011ஆம் ஆண்டு மார்ச் 1ஆம் நாள் கழக அரசால் இயற்றப்பட்டுள்ளது.

"புலம்பெயர் தமிழர் நல வாரியம்" ஒன்றை உருவாக்கி அவர்களுக்கு நலத்திட்டங்களைச் செயல்படுத்துவோம் என்று அறிவித்தோம். ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் காரணமாக நம்மால் அமைக்க முடியவில்லை. அடுத்து வந்த ஆட்சியாளர்களும் இதனை அமைக்கவில்லை. இந்த நிலையில், "புலம்பெயர் தமிழர் நல வாரியம்" அமைக்கப்படும். அரசு மற்றும் புலம்பெயர்ந்த தமிழர் பிரதிநிதிகள் பதின்மூன்று பேரைக் கொண்டு இந்த வாரியம் அமைக்கப்படும். ரூ.5 கோடி, "புலம்பெயர் தமிழர் நலநிதி" என மாநில அரசின் முன்பணத்தைக் கொண்டு உருவாக்கப்படும்.

மூலதனச் செலவினமாக ரூ.1.40 கோடி மற்றும் தொடர் செலவினமாக, நலத்திட்டங்கள் மற்றும் நிருவாகச் செலவினங்களுக்காக ரூ.3 கோடி ஆண்டுதோறும் ஒதுக்கப்படும்.

- புலம்பெயர் தமிழர் குறித்த தரவுத் தளம் (Database) ஏற்படுத்தப்படும். இவ்வாரியத்தில் பதிவு செய்பவர்களுக்கு விபத்து, ஆயுள் காப்பீடு திட்டம் மற்றும் மருத்துவக் காப்பீடு திட்டம் அடையாள அட்டையுடன் வழங்கப்படும்.
- வெளிநாட்டிற்குச் செல்லும் குறைந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த தமிழர்கள் பணியின்போது இறக்க நேரிட்டால் அவர்கள் குடும்பத்தில் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு, கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை வழங்கப்படும்.

- கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காகத் தமிழர்கள் புலம்பெயரும்போது, பயணப் புத்தாக்கப் பயிற்சி அளிக்கப்படுகின்றது. ஆனால், இப்பயிற்சியானது சென்னை மட்டுமின்றி, இராமநாதபுரம், புதுக்கோட்டை, கன்னியாகுமரி, தஞ்சாவூர், பெரம்பலூர், சிவகங்கை மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலும் நடத்தப்படும்.

- வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு ஆலோசனை பெற வசதியாகக் கட்டணமில்லாத் தொலைப்பேசி வசதி மற்றும் வலைதளம், கைப்பேசி செயலி (Mobile application) அமைத்துத் தரப்படும்.

- வெளிநாடுகளில் புலம்பெயர்ந்துள்ள தமிழர்களுக்கு எனத் தனியாகச் சட்ட உதவி மையம் அமைக்கப்படும்.

- கோவிட்–19 பெருந்தொற்றுக் காரணமாகச் சுமார் ஏழு இலட்சம் தமிழர்கள் தாயகம் திரும்பியுள்ளனர். இவர்களில் பலர் வேலையிழந்தும் திரும்பியுள்ளனர். இவர்களுக்கு உதவி செய்யும் நோக்கத்தில், தமிழ்நாடு திரும்பியவர்களுக்குக் குறு தொழில்கள் செய்திட, அதிகபட்சமாக ரூ.2.50 இலட்சம் மானியத்துடன் கூடிய கடன் வசதி செய்து தரப்படும். இதற்கென ரூ.6 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

- வெளிநாடு வாழ் தமிழர்களில் பெரும்பாலானோர் தங்களது சேமிப்பினைத் தாய்நாட்டில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஆர்வத்துடன் உள்ளனர். இதற்காகப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ஏற்படுத்தி, இவர்களது முதலீடுகளை அரசு மற்றும் தொழில் நிறுவனங்களில் பாதுகாப்பான முதலீடு செய்ய ஏதுவான சூழல் உருவாக்கப்படும்.

- புலம்பெயர்ந்த தமிழர்கள், தாம் பிறந்து வளர்ந்த சொந்த ஊரில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்திடவும், ஊர்மக்களின் கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தி செய்திடவும் “எனது கிராமம்” என்கின்ற திட்டம் துவங்கப்படும். இதில் பள்ளி, மருத்துவமனை, நூலகம் போன்ற கட்டடங்களைக் கட்டித் தரவும், சீரமைத்திடவும் புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கப்படும். இதற்கான அனைத்து ஒருங்கிணைப்பும் அரசின் தரப்பில் எளிய முறையில் செய்து தரப்படும்.

- கல்வி மற்றும் வேலைவாய்ப்பிற்காக வெளிநாடுகளுக்குச் சென்று அங்கே நிரந்தரமாகக் குடியுரிமை பெற்றுள்ள தமிழர்களின் வாரிசுகளுக்குத் தமிழ் கற்கும் ஆர்வத்தை உருவாக்கிடவும், தமிழ் மொழியினைக் கற்றிட ஏதுவாகவும், தமிழ் இணையக் கல்விக் கழகம் மூலமாகக் குழந்தைகளுக்குத் தமிழ் கற்றுக் கொடுக்கப்படும். அதுமட்டுமின்றி, அங்குள்ள கல்வி நிறுவனங்களில் தமிழ் பயிற்றுவிப்பதற்காக ஊக்கத்தொகை மற்றும் தமிழ்க் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படும்.

- புலம்பெயர்ந்துள்ள தமிழர்கள் அந்தந்த நாடுகளில் உருவாக்கியுள்ள நலச்சங்கங்கள் ஒருங்கிணைக்கப்படும். இச்சங்கங்களின் மூலமாக நம்முடைய கலை, இலக்கியம் மற்றும் பண்பாடு பரிமாற்றங்கள் நடைபெறும். இதற்காக ரூ.4 கோடி ஒதுக்கீடு செய்யப்படும்.

- பல்வேறு நாடுகளில் உள்ள தமிழர்களை ஒருங்கிணைக்கும் விதமாகவும், அவர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கும் விதமாகவும், வெளிநாடுகளில் உள்ள தமிழ்ச் சங்கங்களுடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 12ஆம் நாள் “புலம்பெயர்ந்த உலகத்தமிழர் நாளாகக்” கொண்டாடப்படும்.

வெளிநாட்டில் உள்ள தமிழர் நலனைப் பேணிட, புலம்பெயர் தமிழர் நல வாரியம் மற்றும் புலம்பெயர் தமிழர் நலநிதிக்காக ரூ.6.40 கோடி, அவர்களுக்கான நலத்திட்டங்களுக்காக ரூ.8.10 கோடி மற்றும் வெளிநாட்டில் தமிழ்க் கல்வி, கலை, பண்பாடு மற்றும் கருத்துப் பரிமாற்றத்திற்காக ரூ.5.50 கோடி என மொத்தம் ரூ.20 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்படும். ‘தொண்டு செய்வாய் துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்தே’ என்ற வாசகத்தை நெஞ்சில் நிலைநிறுத்தி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்பட்டு வரும் இந்த அரசு என்றென்றைக்கும், தமிழர்களின் வாழ்வில் ஒளியேற்றும் விளக்காகவும், அவர்களின் உற்றத் தோழனாகவும் விளங்கும் என்பதில் ஐயமில்லை.

திருச்செந்தூர், சமயபுரம், திருத்தணி திருக்கோயில்களில்
நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.09.2021 அன்று தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக, இந்து சமய அறநிலையத் துறை சார்பில் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கும் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

இறையருள் பெறத் திருக்கோயில்களுக்கு வருகைதரும் பக்தர்களுக்கு உணவளிக்கும் அன்னதானத் திட்டத்தில் 754 திருக்கோயில்களில் மதியவேளை அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இதனைப் பின்பற்றிக் கொரோனா பெருந்தொற்றுக் காலத்தில், ஏழை, எளிய மக்களின் பசியினைப் போக்கும் விதமாகத் திருக்கோயில்கள் சார்பாக 44 இலட்சம் பேருக்கு உணவுப் பொட்டலங்கள் வழங்கப்பட்டன.

தற்போது, பழநி, அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில், திருவரங்கம், அருள்மிகு அரங்கநாத சுவாமி திருக்கோயில் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டமானது விரிவுபடுத்தப்பட்டு, திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கில் 04.09.2021 அன்று இந்து சமய அறநிலையத்துறையின் மானியக் கோரிக்கையில் திருச்செந்தூர், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில், சமயபுரம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், திருத்தணி, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் ஆகிய மூன்று திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானம் வழங்கப்படும் என்ற அறிவிப்பு வெளியிடப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட அன்னதானத் திட்டத்தின் வாயிலாக இம்மூன்று திருக்கோயில்களிலும் நாள்தோறும் சுமார் 7,500 பக்தர்கள் பயனடைவார்கள் இந்த அன்னதானத் திட்டத்தின் கீழ் பக்தர்களுக்குக் காலை 8 மணி முதல் இரவு 10 மணிவரை உணவு பரிமாறப்படும்.

முக அடையாளம் கண்டறியும் மென்பொருள் அறிமுகம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார் – 04.10.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 04.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், காவல்துறையின் பயன்பாட்டிற்காக முக அடையாளம் கண்டறியும் மென்பொருளை (Face Recognition Software) தொடங்கி வைத்தார்.

இந்த முக அடையாளம் கண்டறியும் மென்பொருளானது (FRS), ஒரு தனி நபரின் புகைப்படத்தினைக் காவல் நிலையங்களில் (Crime and Criminal Tracking Network & Systems) CCTNSஇல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள நபர்களின் புகைப்படத் தரவுகளோடு ஒப்பிட்டு அடையாளம் கண்டறியப் பயன்படுகிறது. இதுவரை, 5.30 இலட்சம் புகைப்படங்கள் CCTNSஇல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

FRS மென்பொருளைக் காவல் நிலையத்தில், இணையதள வசதியுள்ள கணினியிலும், களப்பணியின்போது FRS செயலியைக் கைப்பேசியிலும் காவல் அலுவலர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம். இச்செயலியின் மூலம் குற்றவாளிகள், சந்தேக நபர்கள், காணாமல் போனவர்கள் மற்றும் அடையாளம் தெரியாத உடல்கள் ஆகிய புகைப்படங்களைத் தரவுகளில் உள்ளப் புகைப்படங்களுடன் ஒப்பிட்டு அடையாளம் கண்டறியலாம். இச்செயலியின் மூலம் ஒப்பீடு செய்யப்பட்ட புகைப்படத்தில் உள்ள நபர், வேறொரு காவல் நிலைய வழக்கில் தொடர்புடையவராக இருந்தால், காவல் அலுவலர்கள் இச்செயலியின் மூலமே சம்பந்தப்பட்ட காவல் நிலையங்களுக்கு அந்நபரைப் பற்றிய தகவல் அனுப்பும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இச்செயலியைப் பயன்படுத்தி, காவல் அலுவலர்கள் ரோந்துப் பணி, வாகனத் தணிக்கை மற்றும் இதரக் காவல் பணிகளை மேற்கொள்ளும்போது, குற்றவாளிகள் / சந்தேகத்திற்குரிய நபர்களின் புகைப்படம் மூலமாக அவர்களின் முழு குற்றப் பின்னணியினையும் எளிதாகத் தெரிந்துகொள்ளலாம். மேலும், சந்தேக நபர்களைப் பிடித்து விசாரிக்கும்போது, அவர்களின் மீது பிடியாணை பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் உள்ளதா என்பதனைக் கண்டறிந்து கைது நடவடிக்கையை மேற்கொள்ளலாம். அத்துடன் காணாமல் போன நபர்களையும் இச்செயலி மூலம் கண்டறிந்து உரியவர்களிடம் ஒப்படைக்க வழிவகை ஏற்படும். இந்த FRS செயலியானது, குற்றங்களைக் கண்டுபிடிக்கவும், குற்றத் தடுப்புப் பணிகளைச் செவ்வனே மேற்கொள்ளவும் காவல்துறையினருக்கு மிகவும் உதவிகரமாக இருக்கும்.

வருங்காலங்களில் CCTV வீடியோ பதிவுகளில் உள்ள ஒரு நபரின் முகத்தினை அடையாளம் கண்டறிய ஏதுவாக, FRS செயலியில், வீடியோ பகுப்பாய்வு வசதி ஏற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன்மூலம், சந்தேகத்துக்குரிய நபர்களோ, தேடப்படும் குற்றவாளிகளோ அல்லது காணாமல் போனவர்களோ பேருந்து நிலையம், இரயில் நிலையம், விமான நிலையம் மற்றும் திருவிழாக்கள் போன்ற பொது இடங்களில் நடமாடினால், அவர்களை எளிதாகக் கண்டுபிடிக்க இயலும். மேலும், கலவரம் அல்லது பெருந்திரளாக மக்கள் கூடியுள்ளப் பகுதிகளில் உள்ள மக்களின் எண்ணிக்கை விவரத்தினைக் கண்டுபிடித்து, சம்பந்தப்பட்ட பகுதியின் பாதுகாப்பிற்குத் தேவையான காவலர்களைப் பணியமர்த்தப் பயன்படும்.



அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவிகித இடஒதுக்கீடு வாயிலாக தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுடைய கல்விக் கட்டணம், உட்பட அனைத்துக் கட்டணங்களையும் அரசே ஏற்கும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 20.09.2021 அன்று சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 7.5 சதவிகித சிறப்பு உள் ஒதுக்கீட்டின் அடிப்படையில் பொறியியல் படிப்பிற்குத் தேர்வு செய்யப்பட்ட அரசுப் பள்ளி மாணாக்கர்களுக்குச் சேர்க்கை ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக, 50 மாணாக்கர்களுக்கு வழங்கி ஆற்றிய உரை – 20.09.2021

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களே, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நலத்துறை அமைச்சர் அவர்களே, அண்ணா பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, உயர்கல்வித் துறைச் செயலாளர் அவர்களே, வருகை புரிந்திருக்கும் அரசு அலுவலர்களே, என் அன்பான மாணவச் செல்வங்களே, மாணவச் செல்வங்களின் பெற்றோர்களே, உங்கள் அனைவருக்கும் வணக்கம்.

அரசுப் பள்ளியில் படித்த மாணவர்களுக்குத் தொழில் கல்வியில் சேர்வதற்காக 7.5 சதவிகித இடஒதுக்கீட்டைத் தமிழ்நாடு அரசு வழங்கி உள்ளது.

அந்த அடிப்படையில் தொழிற்கல்வி படிப்புகளில் சேர்வதற்கான ஆணைகளைப் பெறுவதற்காக இங்கு வந்திருக்கும் மாணவ, மாணவியர் அனைவர்க்கும் எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொறியியல் பட்டதாரியாக ஆகவேண்டும் என்ற உங்களது கனவு நிறைவேறும் நாள் இது!

உங்கள் கனவு நிறைவேறுவதன் மூலமாக உங்களது பெற்றோரது கனவும், உங்களது குடும்பத்துக் கனவும் நிறைவேறக்கூடிய நாளாக இது அமைந்திருக்கிறது.

போட்டிகள் நிறைந்த இந்த உலகத்தில் நமக்கு இடம் கிடைக்குமா? அதுவும் அரசுக் கல்லூரியில் இடம் கிடைக்குமா என்ற ஏக்கம் சில மாதங்களுக்கு முன்பு வரை உங்களுக்கு இருந்திருக்கும். அந்த ஏக்கம் மறைந்து, ஏற்றம் பிறக்கும் நாள்தான் இந்த நாள் என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்த நாட்டின் நிலையான செல்வம் பொறியியல் பட்டதாரிகளும், மருத்துவ நிபுணர்களும்,

கல்வியாளர்களும்தான் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அதனால்தான் அறிஞர் அண்ணா அவர்கள் அதிகமாக மாணவர்கள் மத்தியில் உரையாற்றினார்கள். கல்லூரிகளிலும் பல்கலைக்கழகங்களிலும் பேசினார்கள். கல்விச் செல்வம், கடைசி மனிதனுக்கும் கிடைக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

திராவிட இயக்கத்தின் நோக்கமே அனைவர்க்கும் கல்வி, அனைவர்க்கும் அவர் தகுதிக்கேற்ற வேலை தரப்பட வேண்டும் என்பதுதான். இந்த இயக்கமே அதற்காகத்தான் உருவாக்கப்பட்டது. ஆட்சியைப் பிடித்தபிறகு அந்த நோக்கத்தை நிறைவேற்றும் காரியங்களையே அதிகம் செய்தும் வருகிறது, நிறைவேற்றியும் வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

தமிழகத்தின் இளைய சக்தி அனைத்தும் உயர் கல்வியை அடைந்ததாக மாற்றுவதுதான் இந்த அரசின் உயரிய இலக்கு ஆகும்.

கல்லூரிச் சாலைக்குள் செல்லும் மாணவர்களுக்கு மூன்று முக்கிய இலக்குகள் இருக்க வேண்டும் என்று புரட்சியாளர் லெனின் அவர்கள் சொன்னார்கள்.

படிப்பு, படிப்பு, படிப்பு – ஆகிய மூன்றையும்தான் இலக்காகச் சொன்னார்கள்.

மூன்று முறை சொன்னதற்குக் காரணம், படிப்புக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான்.

நீங்கள் இந்த இடத்துக்கு வந்திருக்கிறீர்கள் என்றால் அதற்காக உங்கள் வாழ்க்கையில் எவ்வளவு எல்லாம் சிரமப்பட்டு இருப்பீர்கள் என்பதை நான் அறிவேன்.

உங்களை இந்தப் பதினேழு வயது வரைக்கும் படிக்க வைக்க உங்கள் பெற்றோர் எவ்வளவு சிரமப்பட்டு இருப்பார்கள் என்பதை நினைத்துப் பாருங்கள். அவர்கள் தங்களது சுகங்களை, சிரமங்களையும் மறந்து, ஒதுக்கி வைத்துவிட்டு, உங்களை முன்னேற்றுவதற்கு வழிவகை செய்து கொடுத்துள்ளார்கள்.

நம் பிள்ளை பெரிய கல்லூரிக்குள், பெரிய படிப்பு படிக்கப் போகிறான், பெரிய ஆளாய் வருவான், பெரிய வேலைக்குப் போவான் என்ற நம்பிக்கையுடன் உங்களை அனுப்பி வைத்துள்ளார்கள். அவர்களது நம்பிக்கையைக் காப்பவர்களாக நீங்கள் உங்களை இன்னும் சிறப்பாக உயர்த்திக்கொள்ள வேண்டும் என்று உரிமையோடு, அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களது அன்புச் சகோதரனாக நான் உங்களைக் கேட்டுக் கொள்கிறேன். பள்ளிக் காலத்திலிருந்து கல்லூரிக் காலத்துக்குள் நுழைகிறீர்கள். உங்கள் வாழ்க்கையின் அடுத்த கட்டத்துக்குச் செல்கிறீர்கள். சிறந்த வேலை வாய்ப்பை நீங்கள் பெற வேண்டும். வேலை தேடுபவர்களாக மட்டுமல்ல, வேலை கொடுப்பவர்களாகவும் உயர வேண்டும்.

அதற்காக உங்களை முழுமையான திறமைசாலிகளாக, பன்முக ஆற்றல் உள்ளவர்களாக வளர்த்துக்கொள்ள வேண்டும். தொழிற்கல்வி என்பது பட்டம் பெறும் கல்வியாக மட்டும் கருதாதீர்கள். உங்களது தொழில் அறிவை கூர்மையாக்கவும் அதைப் பயன்படுத்த வேண்டும்.

உங்களில் பலரும் நாளைய தினம் சொந்தமாக ஏதாவது தொழில் தொடங்கலாம். அறிவுடன் சேர்ந்து அறிவின் கூர்மையும் வேண்டும். எதனையும் அறிவியல் பார்வையுடன் அணுகுபவர்களாக நீங்கள் இருக்க வேண்டும். இந்தக் கல்விச் செல்வம்தான் என்றும் அழியாத செல்வம் ஆகும்.

இத்தகைய அழியாத அறிவுச் செல்வமானது, அனைத்துத் தரப்பு மக்களையும் சென்றடைய வேண்டும் என்பதே இந்த அரசின் நோக்கமாகும். அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்களும் உயர்கல்வி நிலையங்களுக்குள் நுழைய வேண்டும்.

கிராமப்புற மாணவர்களும் நகர்ப்புறங்களில் இருக்கும் மிகப்பெரிய கல்வி நிலையங்களில் சேர வேண்டும். அதற்காக ஏராளமான திட்டங்களைக் கழக ஆட்சி அமையும் போதெல்லாம் நிறைவேற்றினோம்.

மருத்துவம், பொறியியல் படிப்புகளில் கிராமப்புற மாணவர்கள் நுழைய, நுழைவுத்தேர்வு தடையாக இருக்கிறது என்பதை அறிந்த அன்றைய முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அதனை இரத்து செய்தார்கள் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

இன்று நீட் தேர்வுக்கு எதிராக இந்த அரசும் சட்டப் போராட்டம் நடத்தி வருகிறது. சமூகநீதி உத்தரவுகளால்தான் சமநிலைச் சமுதாயம் அமைப்பதற்கான அடித்தளம் இடப்படுகிறது.

அரசுப் பள்ளிகளில் படிப்பவர்களில் 69 சதவிகிதம் பேர் கிராமப்புற மாணவர்கள்தான். அந்த வகையில் பார்த்தால் கிராமப்புறக் கல்வியின் மேம்பாட்டுத் திட்டமாக இது அமைந்துள்ளது. அரசுப்பள்ளிகளில் பயின்ற மாணவர்களுக்கு, பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழிற்கல்வி படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையில், 7.5 சதவிகித இடங்கள் முன்னுரிமையின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய இந்த அரசால் கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரில் சட்டம் இயற்றப்பட்டது.

அந்த அடிப்படையில்தான் நீங்கள் கல்விச் சாலைகளுக்குள் நுழைகிறீர்கள்.

அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள், நகராட்சிப் பள்ளிகள், ஊராட்சி ஒன்றிய பள்ளிகள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகள், கள்ளர் சீர்திருத்தப் பள்ளிகள், வனத்துறைப் பள்ளிகள் மற்றும் அரசுத்துறைகளினால் நிருவகிக்கப்படும் பிற பள்ளிகளில் 6 முதல் 12ஆம் வகுப்பு வரை பயின்ற மாணாக்கர்கள் இந்த இடஒதுக்கீட்டின்கீழ் பயன்பெறுகிறார்கள்.

நடப்புக் கல்வியாண்டில், இந்தச் சிறப்பு உள்ஒதுக்கீட்டு மூலம் பொறியியல் படிப்புகளில் சுமார் 10,000 அரசுப் பள்ளி மாணாக்கர்கள் பயன்பெறுவர். அதேபோல, அரசுப் பள்ளிகளில் பயின்ற சுமார் 350 மாணவர்கள் வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம் மற்றும் சட்டப் படிப்புகளிலும் பயன்பெறுவார்கள் என்பதையும் நான் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மாணவர்கள் மூலமாக, அவர்களது குடும்பமும், அவர்களது ஊரும் முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லப்படுகிறது. இதன் மூலமாக அவர்களது தலைமுறை தலைநிமிர்ந்து நிற்கப் போகிறது. அதன் மூலமாக இந்த மாநிலம் பயனடையப் போகிறது. இப்படிப்பட்ட நிலையில் உங்களுக்குக் கல்வி ஆணை வழங்குவதை நான் எனக்குக் கிடைத்த பெருமையாகக் கருதுகிறேன்.

நாட்டுக்குப் பெருமை ஏற்படுத்தித் தருபவர்களாக நீங்கள் வளருங்கள்! வாழுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

கல்வி ஆணையைக் கொடுத்து ஒரு தலைமுறையை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்வதன் மூலமாகக் கிடைக்கும் பெருமை என்பது மிகப் பெரியது. அந்தப் பெருமையைப் பெற்றுள்ள மாண்புமிகு அமைச்சர் பொன்முடி அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன், துறை அலுவலர்களைப் பாராட்டுகிறேன்.

பள்ளிக் கல்வித்துறையாக இருந்தாலும், உயர்கல்வித் துறையாக இருந்தாலும், இதன் மூலமாகத் தமிழ்ச் சமுதாயம் முழுமையான முன்னேற்றத்துக்கு அடித்தளம் அமைக்கவேண்டும் என்று பள்ளிக்கல்வித்துறை அமைச்சரையும், உயர்கல்வித்துறை அமைச்சரையும் கேட்டுக்கொள்கிறேன்.

பெருந்தலைவர் காமராஜர் காலம் என்பது பள்ளிக் கல்வித்துறையின் பொற்காலமாகச் சொல்லப்படுகிறது. இன்றும் சொல்கிறோம். நம்முடைய தலைவர் கலைஞர் அவர்களது ஆட்சிக் காலம் கல்லூரிக் கல்வியின் பொற்காலமாகப் போற்றப்படுகிறது.

இந்த ஆட்சிக் காலம் உயர்கல்வி, தொழிற்கல்வி, ஆராய்ச்சிக் கல்வியின் பொற்காலமாக மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மீண்டும், மீண்டும் மாணவர்கள் அனைவர்க்கும் எனது வாழ்த்துக்களை, முதலமைச்சராக மட்டுமல்ல, உங்களின் ஒருவனாக இருந்து வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்னும் சில ஆண்டுகள் கழித்து, எங்கோ ஒரு ஊரில் என்னைச் சந்தித்து, நீங்கள் கொடுத்த அரசாணையால் கல்வி பெற்ற நான், மிகப்பெரிய நிறுவனத்தில் வேலை பார்க்கிறேன், சொந்தமாகத் தொழில் செய்கிறேன் என்று நீங்கள் சொல்வீர்களானால் அதைவிட எனக்கு மகிழ்ச்சி இருக்க முடியாது.

இந்த நிகழ்ச்சிக்கு நான் தயாராகிக் காத்துக் கொண்டிருந்த நேரத்தில் தொலைக்காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தேன். என்ன காட்சியைப் பார்த்தேன் என்றால், இந்த நிகழ்ச்சியைப் பற்றி, இப்படி ஒரு நிகழ்ச்சி அண்ணா பல்கலைக்கழகத்தின் வளாகத்திற்குள் நடக்கப் போகிறது, அதில் முதலமைச்சர், கல்வித்துறை அமைச்சர்களெல்லாம் கலந்துகொள்ளப்

போகிறார்கள் என்கிற செய்தியைப் போட்டு, அதில் ஒரு மாணவரின் பேட்டியைக் கேட்கிறார்கள், அந்த மாணவர் பேட்டி கொடுக்கிறார். என்னுடைய படிப்பை எப்படி முடிக்கப் போகிறேன் என்கிற கவலையைத் தெரிவித்து, மாணவர் மட்டுமல்ல ஒரு மாணவியும் சொல்கிறார். அவர்களுடைய பெற்றோர்கள் மட்டுமல்ல, அவர்களுடைய கவலைகளையும் பகிர்ந்து கொள்ளக்கூடிய தாயுள்ளம் கொண்ட அரசாக நம்முடைய அரசு இப்போது திகழ்ந்து கொண்டிருக்கிறது, அந்தக் கோரிக்கையைக் கேட்டுவிட்டுத்தான் இந்த நிகழ்ச்சிக்கே வந்தேன். அந்த வகையில், இங்கே நான் இப்போது அறிவிப்பு வெளியிடப் போகிறேன்.

இந்த 7.5 சதவிகித இடஒதுக்கீட்டில் தொழிற்படிப்புகளில் கல்லூரியில் சேரக்கூடிய மாணவர்கள் மற்றும் அவர்களுடைய பெற்றோர்கள் மனம் மகிழக்கூடிய வகையில் ஒரு செய்தியை, ஒரு அறிவிப்பை மகிழ்ச்சியோடு நான் வெளியிடக் காத்திருக்கிறேன். அது என்னவென்றால், அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவிகித இடஒதுக்கீடு மூலம் தொழிற் கல்லூரிகளில் சேரும் மாணவர்களுடைய கல்விக்காக ஆகக்கூடிய செலவு கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், ஏன் கலந்தாய்வுக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் இந்த அரசு ஏற்றுக்கொள்ள முன்வந்திருக்கிறது என்பதை இந்த இனிய விழாவில், இந்த அறிவிப்பைத் தெரிவித்து, உங்கள் அத்தனை பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகளைச் சொல்லி என் உரையை நிறைவு செய்கிறேன்.

திருக்கோயில்களில் தலைமுடி மழிக்கும் பணியாளர்களுக்கு மாத ஊக்கத்தொகையாக ரூ.5,000 வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.10.2021 அன்று, சென்னை, வேப்பேரி, பி.கே.என். அரங்கத்தில், திருக்கோயில்களில் தலைமுடி மழிக்கும் பணியாளர்களுக்கு ரூ.5,000 மாத ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தைத் தொடங்கிவைக்கும் அடையாளமாக 25 பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கித் தொடங்கிவைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு, இந்து சமய அறநிலையத்துறையின் வாயிலாக

அனைத்துச் சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்புமிக்கத் திட்டம்,

திருக்கோயில் நிலங்கள் மீட்பு,

மூன்று திருக்கோயில்களில் நாள் முழுவதும் அன்னதானத் திட்டம் தொடக்கம்,

ஒரு இலட்சம் தல மரக்கன்றுகள் திருக்கோயில்களில் நடும் திட்டம்,

அர்ச்சகர்கள், ஓதுவார்கள், பட்டாச்சாரியார்களுக்கு ரூ.1,000 மாத ஊக்கத்தொகை வழங்கும் திட்டம்,

பல்வேறு திருக்கோயில்களில் திருப்பணிகள் தொடங்கப்பட்டு விரைவில் குடமுழுக்கு நடைபெறவுள்ள நிகழ்வு,

அன்னைத் தமிழில் அர்ச்சனை, தமிழில் அர்ச்சனை செய்வதற்காக 14 போற்றி நூல்கள் வெளியீடு போன்ற பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

அதன் தொடர்ச்சியாக, திருக்கோயில்களில் பக்தர்கள் முடிக்காணிக்கைக்கான கட்டணம் வசூலிக்கப்படமாட்டாது எனவும், அப்பணியில் ஈடுபட்டுள்ளவர்களுக்குத் திருக்கோயில் நிருவாகமே செலுத்தும் என்றும், 2021–2022ஆம் ஆண்டு இந்து சமய அறநிலையத் துறையின் மானியக் கோரிக்கையின்போது அறிவிக்கப்பட்டு, 05.09.2021 முதல் அனைத்துத் திருக்கோயில்களிலும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், 07.09.2021 அன்று சட்டப்பேரவையில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், திருக்கோயில்களில் பணிபுரியும் தலைமுடி மழிக்கும் பணியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மாத ஊக்கத்தொகையாக ரூ.5,000 வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அதன்படி, திருக்கோயில்களில் பணிபுரியும் 1,744 முடி திருத்தும் பணியாளர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு, அவர்களுக்கு மாதந்தோறும் ரூ.5,000 ஊக்கத்தொகை அந்தந்தத் திருக்கோயில்களிலிருந்து வழங்கப்படும். இதற்காக ஆண்டொன்றுக்கு ரூ.10.47 கோடி செலவிடப்படும். இதனால் திருக்கோயில் முடிதிருத்தும் பணியாளர்களின் வாழ்வாதாரம் மேம்படும்.

மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு

ஒன்றிய அரசின் திட்டங்கள் மாவட்ட அளவில் நடைமுறைப்படுத்துவதைக் கண்காணிக்க, ஒன்றிய அரசின் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சகத்தால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகக் கொண்டு மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழு (DISHA Committee) அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் துணைத் தலைவராகவும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் முதன்மைச் செயலாளர் அவர்கள் உறுப்பினர் செயலாளராகவும், உறுப்பினர்களாக ஒன்றிய அரசால் பரிந்துரைக்கப்பட்ட மக்களவை உறுப்பினர்களான திரு.டி.ஆர்.பாலு, திரு.எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், திரு.ஆ.ராசா, திரு.எம்.செல்வராஜ், திரு.பி.ஆர். நடராஜன், திரு.சு.திருநாவுக்கரசர், திரு.தொல்.திருமாவளவன், திரு.பி.ரவீந்திரநாத்குமார், திரு.கே.நவாஸ்கனி ஆகியோரும், மாநிலங்களவை உறுப்பினர்களான திரு.திருச்சி சிவா, திரு.ஆர்.எஸ்.பாரதி, திரு.எ.நவநீதகிருஷ்ணன், திரு.எஸ்.ஆர்.பாலசுப்ரமணியன் ஆகியோரும்;

மாநில அரசால் பரிந்துரைக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.ஜி.ராஜேந்திரன், டாக்டர் நா.எழிலன், திரு.டி.கே.ஜி.நீலமேகம், திரு.மு.பூமிநாதன், திரு.ஜெ.எம்.எச்.அசன் மௌலானா, திரு.கே.ஏ.செங்கோட்டையன் ஆகியோர் உள்ளனர்.

மேலும், இக்குழுவில் பல்வேறு அரசுத் துறை செயலாளர்கள், துறைத் தலைவர்கள், அரசு சாராத் தொண்டு நிறுவனப் பிரதிநிதிகள், மாநில அளவிலான வங்கியாளர் குழுவின் மேலாண்மை இயக்குநர் ஆகியோர் உறுப்பினர்களாக உள்ளனர்.

இக்குழு ஒன்றிய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, மாவட்ட அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுக்களில் எடுக்கப்பட்ட முடிவுகளைப் பொறுத்து திட்டங்கள் செயல்படுத்தப்படும் நிலையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் மாநில அரசால் ஈடுபடுத்தப்பட்டுள்ள மனித வளங்களின் செயல்திறனை வரிசைப்படுத்தி மதிப்பாய்வு செய்தல், வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள தடைகளை நிவர்த்தி செய்து, அங்கீகரிக்கப்பட்டத் திட்டங்களின் வடிவமைப்புகளை மேம்படுத்த அல்லது நடுநிலைப்படுத்த உரியத் திருத்தங்களைச் செய்யப் பரிந்துரைகளை வழங்குதல் ஆகியன இக்குழுவின் பணியில் அடங்கும்.

மேலும், வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நிதி நிலைமையை மதிப்பாய்வு செய்தல், பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலப் பிரச்சினைகள் தொடர்பாக மாநில அலுவலர்களால் தேவையான தெளிவை நீட்டிப்பதில் காலக்கெடுவை உறுதி செய்யும் நோக்கில் பல்வேறு திட்டங்களைச் சரியான நேரத்தில் செயல்படுத்தவுள்ள தடைகளை மீளாய்வு செய்தல், திட்டங்களைச் செயல்படுத்துவதில் பெறப்பட்ட புகார்கள் / முறைகேடுகள், பயனாளிகளின் தவறானத் தேர்வு, முறைகேடான நிதி / திசைதிருப்புதல் போன்ற புகார்களைப் பின்தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப் பரிந்துரை செய்தல் ஆகியவையும் இக்குழு மேற்கொள்ளும்.

பல்வேறு திட்டங்களின்கீழ் அடையாளம் காணப்பட்ட பயனாளிகளின் ஆதார் எண்ணோடு இணைக்கப்பட்ட வங்கிக் கணக்குகளுக்கு நிதி உதவி வழங்குவது குறித்து உரிய வழிகாட்டுதல்களை வழங்குதல், ஒன்றிய துறைத் திட்டங்கள், சம்மந்தப்பட்ட ஒன்றிய நிறுவனங்கள் முறையாகச் செயல்படுத்துவதில் உள்ள சிக்கல்களை அடையாளம் காணுதல் மற்றும் மாநில அளவிலான வளர்ச்சி ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின்கீழ் கண்காணிக்கப்படும் திட்டங்கள் தொடர்பாக நிகழ்வுகள் ஒன்றிய ஊரக வளர்ச்சி அமைச்சகத்தின் பார்வைக்குக் கொண்டு செல்லுதல் போன்ற பணிகளை இந்தக் குழு மேற்கொள்ளும்.

08.10.2021

மக்களின் பக்கம் நமது முதல்வர்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 05.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில் உள்ள முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு நேரில் சென்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், முதலமைச்சரின் தனிப் பிரிவிற்கு மனு அளிக்க வந்திருந்த பொதுமக்களிடம் அவர்களது கோரிக்கைகளைக் கேட்டறிந்தார். மனுதாரர்களில் ஒருவர் காணாமல் போன தனது மகனைக் கண்டுபிடித்துத் தருமாறு கோரிக்கை வைத்தார். இம்மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, காணாமல் போன அப்பெற்றோரின் மகனைக் கண்டுபிடித்திடத் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

மேலும், பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், அனைத்து மனுக்கள் மீதும் உரிய நடவடிக்கை எடுத்து, தீர்வு காணப்படுவதைக் கண்காணித்து உறுதி செய்திட வேண்டும் என்றும், மனுதாரர்களுக்கு, மனுக்கள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து உரியப் பதில்களை உடனுக்குடன் அளித்திட வேண்டும் என்றும் அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பதக்கங்கள் வென்ற விளையாட்டு வீரர்களுக்கு ரூ.3.98 கோடி ஊக்கத்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், பாராலிம்பிக் போட்டிகள், ஃபிடே உலகச் சதுரங்க ஆன்லைன் ஒலிம்பியாடு போட்டிகள் மற்றும் பல்வேறு சதுரங்கப் போட்டிகளில் பதக்கங்களையும், பட்டங்களையும் வென்ற 15 தமிழ்நாட்டு விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளையும், பயிற்சியாளர்களையும் ஊக்குவிக்கும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் ஊக்கத்தொகையாக மொத்தம் ரூ.3.98 கோடிக்கான காசோலைகளை வழங்கிச் சிறப்பித்தார்.

ஜப்பான் தலைநகர், டோக்கியோவில் நடைபெற்ற மாற்றுத் திறனாளர்களுக்கான பாராலிம்பிக் 2020 போட்டிகளில் உயரம் தாண்டுதல் போட்டியில், T–63 பிரிவில், 1.86 மீட்டர் உயரம் தாண்டி வெள்ளிப் பதக்கம் வென்ற திரு.டி.மாரியப்பன் அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகையாக ரூ.2 கோடிக்கான காசோலை;

2020ஆம் ஆண்டு சர்வதேசச் சதுரங்கக் கூட்டமைப்பின் (FIDE) மூலம் நடைபெற்ற ஃபிடே உலகச் சதுரங்க ஆன்லைன் ஒலிம்பியாடு போட்டியில், இந்திய அணியின் சார்பாகக் கலந்து கொண்டு தங்கப் பதக்கம் வென்ற திரு. விஸ்வநாதன் ஆனந்த், திரு. விஆர். அரவிந்த் சிதம்பரம், திரு. ஆர். பிரக்ஞானந்தா, செல்வி ஆர்.வைஷாலி ஆகியோருக்குத் தலா ரூ.20 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.80 இலட்சத்திற்கான காசோலைகள் மற்றும் மேற்கண்ட போட்டியின் அணியின் பயிற்சியாளர் திரு. ஸ்ரீநாத் நாராயணன் அவர்களுக்கு ரூ.12 இலட்சம் என மொத்தம் ரூ.92 இலட்சத்திற்கான காசோலைகள்;

2021ஆம் ஆண்டு சர்வதேசச் சதுரங்கக் கூட்டமைப்பின் மூலம் நடைபெற்ற ஃபிடே உலகச் சதுரங்க ஆன்லைன் ஒலிம்பியாடு போட்டியில், இந்திய அணியின் சார்பாகக் கலந்துகொண்டு வெண்கலப் பதக்கம் வென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு.விஸ்வநாதன் ஆனந்த், திரு.பா.அதிபன், திரு.ஆர்.பிரக்ஞானந்தா, செல்வி ஆர்.வைஷாலி, செல்வி பா.சவிதா ஸ்ரீ ஆகியோருக்கு தலா ரூ.10 இலட்சம் வீதம், மொத்தம் ரூ.50 இலட்சத்திற்கான காசோலைகளும் மற்றும்

மேற்கண்ட போட்டியின் ஆண்கள் அணியின் பயிற்சியாளர் திரு.ஸ்ரீநாத் நாராயணன் அவர்களுக்கு ரூ.4.50 இலட்சம் மற்றும் பெண்கள் அணியின் பயிற்சியாளர் திரு.மோ.ஷ்யாம் சுந்தர் அவர்களுக்கு ரூ.3 இலட்சம் என மொத்தம் ரூ.57.50 இலட்சத்திற்கான காசோலைகள்;

கடந்த 04.03.2019 முதல் 15.03.2019 வரை கஜகஸ்தான் நாட்டின், அஸ்தானா நகரில் நடைபெற்ற ஃபிடே உலக சதுரங்க குழு வாகையர் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றதற்காகத் திரு.பா.அதிபன் அவர்களுக்கு ரூ.20 இலட்சத்திற்கான காசோலை;

2019ஆம் ஆண்டில் சதுரங்க விளையாட்டில் சர்வதேச கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற திரு. ப. இனியன், 2019ஆம் ஆண்டில் சதுரங்க விளையாட்டில் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி ஸ்ரீஜா சேஷாத்திரி, 2020ஆம் ஆண்டில் சதுரங்க விளையாட்டில் மகளிர் கிராண்ட் மாஸ்டர் பட்டங்கள் வென்ற செல்வி வி.வர்ஷினி, செல்வி பி.வி.நந்திதா ஆகியோருக்குத் தலா ரூ.5 இலட்சத்திற்கான காசோலைகள்;

2020ஆம் ஆண்டில் சதுரங்க விளையாட்டில் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற திரு. வி.எஸ். ரத்தன்வேல் மற்றும் திரு. மு. பிரனேஷ், 2021ஆம் ஆண்டில் சதுரங்க விளையாட்டில் மகளிர் சர்வதேச மாஸ்டர் பட்டம் வென்ற செல்வி பா.சவிதா ஸ்ரீ ஆகியோருக்குத் தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகள்;

என மொத்தம், ரூ.3.98 கோடிக்கான காசோலைகளை 15 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் பயிற்சியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

*மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைத் தலைமைச் செயலகத்தில், சங்கரன்கோவில் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ராஜா அவர்கள், மாநில அளவிலான வலுதூக்கும் போட்டியில் முதலிடம் வென்றதற்காகவும், காமன்வெல்த் போட்டியில் தகுதிபெற்றதற்காகவும் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். (11.10.2021)*

மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் மற்றும் மாதாந்திரப் பராமரிப்பு உதவித்தொகை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமைச் செயலகத்தில் வழங்கினார் – 09.10.2021

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிகள் தன்னிச்சையாகச் செயல்படும் வகையில் உதவி உபகரணங்கள் வழங்கும் திட்டத்தின்கீழ், இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள், சக்கர நாற்காலிகள், மூன்று சக்கர வண்டிகள், காதொலிக் கருவிகள், பார்வையற்றோருக்கான கருப்புக் கண்ணாடி, ஒளிரும் மடக்குக் குச்சிகள், மனவளர்ச்சிக் குன்றியோருக்கான மாற்றுவழியில் தொடர்புகொள்ளும் சாதனங்கள் உட்பட 24 வகையான உதவி உபகரணங்கள் பயனாளிகள் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன.

மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்கப்படும் உதவி உபகரணங்கள் வேண்டி விண்ணப்பித்துக் காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைவருக்கும் உதவி உபகரணங்கள் வழங்கும் பொருட்டு 2021–2022ஆம் ஆண்டிற்கு ரூ.62.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்று 01.09.2021 அன்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 2020–2021ஆம் ஆண்டில், உதவி உபகரணங்கள் வேண்டி விண்ணப்பித்துக் காத்திருப்போர் பட்டியலிலிருந்த

10,107 மாற்றுத்திறனாளிகளின் கோரிக்கைகளை நிறைவேற்றும் வகையில், ரூ.21.11 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அக்காத்திருப்போர் பட்டியலில் இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் வேண்டி விண்ணப்பித்த 1,228 மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கிடும் விதமாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 5 பயனாளிகளுக்கு இணைப்புச் சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களுக்கான சாவிகளை வழங்கினார்.

கடுமையாகப் பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகள், மனவளர்ச்சிக் குன்றியோர், தசைச்சிதைவுநோயினால் பாதிக்கப்பட்டோர், தொழுநோயினால் பாதிப்படைந்தோர், தண்டுவட மரப்பு நோயினால் பாதிப்படைந்தோர், பார்கின்சன்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டோர் மற்றும் முதுகுத் தண்டுவடம் பாதிக்கப்பட்டோர் ஆகியோருக்குப் பராமரிப்பு உதவித்தொகையாக மாதந்தோறும் ரூ.1,500 அப்பயனாளிகளின் வங்கிக் கணக்கில் சேர்க்கப்படுகிறது.

பராமரிப்பு உதவித்தொகை கோரி விண்ணப்பித்துக் காத்திருப்போர் பட்டியலிலுள்ள அனைத்து மாற்றுத்திறனாளிகளுக்கும் நடப்பாண்டு முதல் மாதாந்திர உதவித்தொகையை வழங்கும் விதமாக நிதி ஒதுக்கீடு ரூ.404.64 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்று 01.09.2021 அன்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது அறிவிக்கப்பட்டது.

அதன்படி, கடந்த 2020 பிப்ரவரி முதல் இதுநாள் வரை பராமரிப்பு உதவித்தொகை வேண்டிக் காத்திருப்போர் பட்டியலிலிருந்த 9,173 நபர்களுக்குப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கிடச் சிறப்பு நிதியாக ரூ.29.64 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அம்மாற்றுத்திறனாளிகளுக்குப் பராமரிப்பு உதவித்தொகை வழங்கிடும் அடையாளமாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், 5 பயனாளிகளுக்கு ரூ.1,500 மாதாந்திரப் பராமரிப்பு உதவித்தொகைக்கான காசோலைகளை வழங்கித் தொடங்கிவைத்தார்.

மேலும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையில் பணியாற்றி பணிக்காலத்தில் உயிரிழந்த 4 பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் 3 இளநிலை உதவியாளர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான பணிநியமன ஆணைகளையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

டோக்கியோ ஒலிம்பிக் போட்டி 2020இல் பங்கேற்றுத் தமிழ்நாட்டிற்கு பெருமைசேர்த்த வீராங்கனைகளுக்குப் பணிநியமன ஆணை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமைச் செயலகத்தில், டோக்கியோ ஒலிம்பிக் போட்டி 2020இல் கலப்புத் தொடர் ஓட்டத்தில் பங்கேற்றுத் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்த வீராங்கனைகள் செல்வி வெ.சுபா, செல்வி எஸ்.தனலட்சுமி ஆகியோருக்குத் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தில் விளையாட்டு அலுவலர் பணியிடத்திற்கான பணிநியமன ஆணைகளை வழங்கினார் – 11.10.2021

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களைத் தமிழ்நாடு இளைஞர் கள வில்வித்தை சங்கம் சார்பாக மாநில மற்றும் தேசியப் போட்டியில் 3 தங்கம், 2 வெள்ளி மற்றும் 2 வெண்கலம் வென்ற திருவாரூர் மாவட்ட பள்ளி மாணாக்கர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள் – 11.10.2021

சென்னை மெட்ரோ இரயில் திட்டப்பணிகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் ஆய்வு - 08.10.2021

சென்னை பெருநகரில் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திடவும், மக்களின் பயண நேரத்தைக் குறைத்து, பயணத்தை எளிமையாகவும், அதிநவீன வசதியாக அமைத்திடவும் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்திற்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசால் 2007ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு, முதல்கட்ட திட்டத்தின் கட்டுமானப் பணிகளை அப்போதைய மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் தொடங்கிவைக்கப்பட்டு, தற்போது சிறப்பான முறையில் செயல்பட்டு வருகிறது.

சென்னை மெட்ரோ இரயிலின் இரண்டாம் கட்ட திட்டத்தின்கீழ், மாதவரம் முதல் சிறுசேரி சிப்காட் வரையிலான வழித்தடம் (45.8 கி.மீ.), கலங்கரைவிளக்கம் முதல் பூந்தமல்லி புறவழிச் சாலை வரையிலான வழித்தடம் (26.1 கி.மீ.) மற்றும் மாதவரம் முதல் சோழிங்கநல்லூர் வரையிலான வழித்தடம் (47.0 கி.மீ.) என மொத்தம் 118.9 கி.மீ. நீளத்திலான 3 வழித்தடங்களை ரூ.61,843 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்துவதற்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.10.2021 அன்று சென்னை, சென்ட்ரல் இரயில் நிலையம் அருகில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் நிதியுதவியுடன், சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தால் ரூ.389.42 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய சதுக்கத் திட்டப் பணிகளைப் (Central Square) பார்வையிட்டு ஆய்வு செய்தார். இத்திட்டத்தின்கீழ், வெளியூர் இரயில், புறநகர் இரயில், பறக்கும் இரயில், மெட்ரோ இரயில், மாநகரப் போக்குவரத்து மற்றும் இதரப் பொதுப் போக்குவரத்துகளை ஒருங்கிணைத்தல், பூந்தமல்லி நெடுஞ்சாலையின் குறுக்கே 2 சுரங்க நடைபாதைகள், நிலத்தடி வாகன நிறுத்தங்கள், பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கட்டடம், அருகில் உள்ள ரிப்பன் மாளிகை, விக்டோரியா பொதுக்கூடம், சென்ட்ரல் புறநகர் இரயில் நிலையம், சென்ட்ரல் இரயில் நிலையம், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை ஆகியவற்றிற்கிடையே உள்ள பகுதியை உலகத்தரத்திற்கு இணையாக மேம்படுத்தும் பணிகள் குறித்த விவரங்களைக் கேட்டறிந்தார். மத்தியச் சதுக்கத்தினை சிங்காரச் சென்னையின் மணிமகுடமாக விளங்கும் வகையில், நேர்த்தியாகப் பணிகளைக் குறித்த காலத்தில் முடித்து, பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அலுவலர்களை அறிவுறுத்தினார்.

பின்னர், கத்திப்பாரா நகர்ப்புற சதுக்கப் பகுதிக்குச் சென்று, கத்திப்பாரா மேம்பாலத்தின் அடியில் உள்ள குளோவர் பகுதிகளில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் சார்பில் பன்முகப் போக்குவரத்துகளை ஒருங்கிணைத்து, பயணிகள் ஒரு போக்குவரத்திலிருந்து மற்றொரு போக்குவரத்திற்கு மாறிச் செல்வதற்கும், அப்பகுதியில் காத்திருக்கும்போது பயணிகளுக்கான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கும் ரூ.14.50 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டு, அப்பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரும்படி அலுவலர்களை அறிவுறுத்தினார்.

அதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் போரூர், இராமச்சந்திரா மருத்துவமனை எதிரில், சென்னை மெட்ரோ இரயில் இரண்டாம் கட்ட திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டு வரும் தெள்ளியகரம் மெட்ரோ நிலையத்தின் கட்டுமானப் பணிகளையும், அங்கு அமைக்கப்பட்டு வரும் உயர்த்தப்பட்ட மெட்ரோ நிலையக் கட்டுமானப் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது, மவுண்ட் – பூந்தமல்லி சாலையில் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்படாத வண்ணம் கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுமாறும், கட்டுமானப் பணிகளின்போது பாதுகாப்பு நடவடிக்கைகளை உறுதி செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

கொரோனா தடுப்பூசி செலுத்தும் சிறப்பு முகாம்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 10.10.2021 அன்று, கிண்டி, மடுவன்கரை ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் சின்னமலை, புனித பிரான்சிஸ் சேவியர் தொடக்கப் பள்ளிகளில் நடைபெற்ற கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்களை நேரில் பார்வையிட்டுத் திடீர் ஆய்வு செய்தார்.

தமிழ்நாடு மக்கள் அனைவரையும் கொரோனா தொற்று நோயிலிருந்து பாதுகாக்கும் வகையில் ஆரம்பச் சுகாதார நிலையங்கள், அரசு மருத்துவமனைகள், அங்கன்வாடி மையங்கள், சத்துணவு மையங்கள், பள்ளிகள் மற்றும் முக்கிய இடங்களில் கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடைபெற்று வருகின்றன.

தமிழ்நாட்டில், செப்டம்பர் மாதத்தில் 12,19,26 ஆகிய நாட்களிலும், அக்டோபர் மாதத்தில் 3ஆம் தேதியும் நடைபெற்ற நான்கு மாபெரும் கொரோனா தடுப்பூசி முகாம்களில் மொத்தம் 87,80,262 பயனாளிகளுக்குத் தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் 5ஆவது மாபெரும் தடுப்பூசி முகாம்கள் மொத்தம் 32,017 மையங்களில் மெகா கோவிட் தடுப்பூசி செலுத்தும் பணிகள் 10.10.2021 அன்று பெருநகரச் சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் மட்டும் 1,600 கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்கள் நடைபெற்றது.

சிறப்புத் தடுப்பூசி முகாம்களில் திடீர் ஆய்வு மேற்கொண்டு, தடுப்பூசி செலுத்த வந்த பொதுமக்களிடம் கலந்துரையாடிய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்,

தமிழ்நாட்டில் 18 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் கொரோனா தடுப்பூசி முதல் மற்றும் இரண்டாம் தவணையும் அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதால், அவரவர் இருப்பிடத்தின் அருகிலேயே முகாம்கள் அமைக்கப்பட்டுத் தடுப்பூசி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும், பொதுமக்கள் முகாம்களைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியைத் தீவிர இயக்கமாக நடத்தவும், மாவட்ட ஆட்சியர்கள் சிறப்புக் கவனம் செலுத்திக் கொரோனா தடுப்பூசி செலுத்தும் முகாம்களின் இலக்கை முழுமையாக அடைய வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

“திருக்குறள் தமிழிசைப்பாடல்கள்” மற்றும் “திருக்குறள் வாழ்த்துப்பா” குறுந்தகடு வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 05.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், குறள் அமிர்தம் “**திருக்குறள் தமிழிசைப்பாடல்கள்**” மற்றும் “**திருக்குறள் வாழ்த்துப்பா**” குறுந்தகட்டினை வெளியிட்டார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களை 08.10.2021 அன்று தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள் சந்தித்து, தமிழ், இந்தி, மலையாளம், தெலுங்கு, கன்னடம், பெங்காலி, மராத்தி ஆகிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட, ஓய்வு பெற்ற நீதியரசர் திரு. ஏ.கே.இராஜன் குழுவின் நீட் தேர்வின் தாக்கம் குறித்த அறிக்கையினை அளித்தார்.

¾VôLf ãPo

நவம்பர் 14 : பண்டித ஜவஹர்லால் நேரு பிறந்தநாள்

அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்பட்ட நேரத்திலும், எதிர்பாராத இழப்புகள் ஏற்பட்ட வேளையிலும் வீடு, வாசல், மாடு, மனை, மக்கள், சுற்றம் என்று பாராமல் 'நாடு...நாடு' என முழங்கிடும் தியாக மணி விளக்குகளின் தலைசிறந்த வரிசையில் தக்கதோர் இடம்பெற்ற மாணிக்க விளக்காவார் மாமேதை நேரு. அவருக்கு மனசாட்சியே ஆண்டவன்; மக்கள் நெஞ்சமே ஆலயம்; பொதுத்தொண்டே பூஜை, நைவேத்தியம்; பூட்டிய சிறைக்கோட்டங்களே புண்ணிய ஸ்தலங்கள்.

இமயம் முதல் குமரி வரையில் உள்ளோர் இதயங்களில் எல்லாம் இடம்பெற்றிருக்கும் உரிமையை உத்தமர் காந்திக்குப் பிறகு பெற்றிருந்த ஒரே மனிதர் – ஒரே தலைவர் – பண்டித நேரு.

ஜனநாயகச் சோலையில், பகுத்தறிவு மேடை கட்டி, சமாதானக்கொடியை உலகமறிய உயர்த்திப் பிடித்தவர் உத்தமர் நேரு. அவருக்கு நாம் காட்டுகின்ற நன்றி அந்தச் சோலை வாடாமல், அந்த மேடை சரியாமல் பாதுகாப்பதேயாகும்.

– முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்

நவம்பர் 8: தமிழறிஞர் வீரமாமுனிவர் பிறந்தநாள்

அருந்தமிழ்ச் செல்வர்

மேலை நாட்டில் பிறந்து தமிழகத்தில் பணியாற்றிய இறையடியார்கள் பலருண்டு. அவர்களில் சமயப்பணியும், சமூகப் பணியும் மட்டுமன்றி தமிழ்ப்பணியும் ஆற்றிய தனிச்சிறப்புக்குரியவர் வீரமாமுனிவர் அவர்கள் ஆவார்.

இத்தாலியில் உள்ள காஸ்டிகிளியோன் என்ற ஊரில், கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி அவர்கள் 1680ஆம் ஆண்டு பிறந்தார். லத்தீன், பிரெஞ்சு, கிரீக் மொழிகளைக் கற்று அதில் நல்ல புலமை பெற்ற பெஸ்கி அவர்கள், தர்க்க, வேதசாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்த பின் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1710ஆம் ஆண்டு, பெஸ்கி அவர்கள் கிறிஸ்தவ மத பரப்புப் பணி செய்ய கோவா வந்தார். கோவாவிலிருந்து அம்பலக்காடு வந்து தங்கி, பின்னர் மதுரை மாவட்டத்திலுள்ள காமநாயக்கன்பட்டியை அடைந்தார். 1713ஆம் ஆண்டு தஞ்சை பகுதிக்குச் சென்ற பெஸ்கி அவர்கள், அங்கிருந்து திருநெல்வேலிக்குச் சென்றார். வடக்கன்குளம், கயத்தாறு பகுதியில் ஞானப்பணி ஆற்றிவந்த பெஸ்கி அவர்கள் தமிழைப் பிழையறக் கற்றார். அங்கு இருந்துகொண்டே இலக்கிய, இலக்கண நூல்களை எழுதத் தொடங்கினார். **கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி அவர்களின் பணிகளை வியந்து, மக்கள் 'வீரமாமுனிவர்' என்று அவரை அன்புடன் அழைத்தனர்.**

1726ஆம் ஆண்டு, தேம்பாவணி எனும் தீந்தமிழ்க் காப்பியத்தை இயற்றிய வீரமாமுனிவர் அவர்கள், 1730ஆம் ஆண்டு திருக்குறளில் அறம், பொருள் இரண்டையும் இலத்தீனில் மொழிபெயர்த்தார். எண்ணற்ற பல நூல்களைப் படைத்த வீரமாமுனிவர் அவர்கள், தமிழ்–இலத்தீன், தமிழ்–பிரெஞ்சு, தமிழ்–ஆங்கிலம், போர்ச்சுகல்–தமிழ்–இலத்தீன் அகராதிகளையும் படைத்தார். அருந்தமிழ்ச் செல்வரான வீரமாமுனிவர் அவர்கள் 1747ஆம் ஆண்டு பிப்ரவரி 4ஆம் நாள் இயற்கை எய்தினார்.

நவம்பர் 23 : **கவிஞர் சுரதா பிறந்தநாள்**

“உவமைக் கவிஞர்”

“திராவிட இயக்கத்தின் தனிப் பெரும் கவியாம்
புரட்சிக்கவிஞர் பாவேந்தர் பாரதிதாசனின் மாணவராக
அவரது கவிதா மண்டலத்தில்
வாடாத வண்ண மலராக முகிழ்த்து வந்து
வாழ்நாளெல்லாம் மணம் பரப்பிய
உவமைக் கவிஞர் சுரதா
சுப்பு ரத்தின தாசன் அவர்களின்
தனிப்பெரும் தமிழ் இலக்கியப் பங்களிப்புகளை
நெஞ்சில் ஏந்திப் போற்றுவோம்!
கவிதைகளிலும், திரைப்படப் பாடல்களிலும்,
புத்தம் புதிய உவமைகளை மிகச் சிறப்பாகவும்
செறிவாகவும் கையாண்டவர் கவிஞர் சுரதா.
‘விண்ணுக்கு மேலாடை பருவமழை மேகம்’ என்ற பாடலில்,
‘பத்துக்கு மேலாடை பதினொன்றே ஆகும்’ என்கிற
அவரது உவமையும், அதற்கான கற்பனை நயமும்,
அவரின் தனிப்பெரும் ஆற்றலைக் காட்டும்
ஒரு துளிப் பாட்டாகும்.
“உள்ளத்தில் நிறைந்திருக்கும்
நம் ‘உவமைக் கவிஞர் சுரதா’வின்
புகழ் பாடுவோம்”!!

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

தமிழரசு

செய்தி–மக்கள் தொடர்புத்துறையின் வெளியீடு

தமிழரசு (தமிழ்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,000 (10 ஆண்டுகள்)

தமிழரசு (ஆங்கிலம்) மாத இதழ்

தனி இதழ்	:	ரூ.20
ஆண்டுச் சந்தா	:	ரூ.240
ஆயுள் சந்தா	:	ரூ.2,400 (10 ஆண்டுகள்)

தமிழரசு சந்தாத் தொகையினை வங்கி வரைவோலையாகவோ, பணவிடை மூலமாகவோ **இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், இராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை–600 113** என்ற முகவரிக்கு தங்களின் பெயர், கதவு எண், தெருப்பெயர், ஊர், மாவட்டம், அஞ்சல் குறியீட்டு எண் மற்றும் கைப்பேசி எண் ஆகியவற்றைச் சரியாக எழுதி அனுப்பி தமிழரசு இதழைப் பெற்றுக்கொள்ளலாம்.

தமிழரசு இதழுக்கு www.tamilarasu.org என்ற இணையதளத்தில் சந்தாத் தொகையினை நேரடியாகச் செலுத்தலாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.10.2021 அன்று,
மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பாப்பாபட்டி கிராமத்திற்குச் செல்லும் வழியில், கே. நாட்டப்பட்டி கிராமத்தில்,
வயலில் இறங்கி நாற்று நடவு செய்துகொண்டிருந்த விவசாயப் பெண்களிடம் கோரிக்கைகளைக் கேட்டறிந்தார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 02.10.2021 அன்று, மதுரை மாவட்டம், உசிலம்பட்டி வட்டம், பாப்பாபட்டி கிராமத்தில் உத்தமர் காந்தியடிகள் அவர்களின் 153ஆவது பிறந்தநாளையொட்டி நடைபெற்ற கிராமசபைக் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,